கல்கி

KALKI 13-1-80 90 காசு



கிரிக்கெட்
சிறப்பிதழ்

எதிரொலிக்கும் எல்லா திசைகளிலும்



நம்புங்கள் திருப்தியோடு
உங்களுக்கு நல்லவையே
கிடைக்கும் பேரானந்தம்
பெருக அணிந்திடுவீர்
அளவிலா மகிழ்ச்சியை

மபத்லால் இன்டஸ்ட்ரீஸ் நியூ ஷொராக் மில்ஸ்
மபத்லால் ஃபைன்

சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், சேலைகள்
உடுப்புத் துணிகள், மற்றும் டெனிம்கள்.

MAFATLAL INDUSTRIES

MAFATLAL FINE

79/MFI/313-tm

Kalki Shopping Page

ஃபைப்ரோஃப்ளெக்ஸ் நார் மெத்தைகள்

ரப்பர் கலந்த

இல்லங்களுக்கும் ஹோட்டல்களுக்கும் மிகச் சிறந்தவை... சிக்கனமானவை.



பந்து போல் எழும்பும் தன்மையுடைய ஃபைப்ரோஃபிளெக்ஸ் உங்களுக்கு முழுமையான சுகமளிப்பதுடன் மிகச் சகாயமான விலையில் கிடைக்கின்றன.

சோர்ந்து போன தசைகளுக்கு புத்துணர்வூட்டும் ஃபைப்ரோஃபிளெக்ஸ் மெத்தைகள் நீங்கள் ஆனந்தமாக உறங்க உங்கள் உடலுக்கு தேவையான இதமளிக்க வல்லது.

ஃபோம் மெத்தைகளை விட ஃபைப்ரோஃபிளெக்ஸ் விலை மிக மிகக் குறைவு

தயாரிப்பாளர்கள்:

பாரத் மோட்டார்ஸ்

151, மவுண்ட் ரோடு, சென்னை-600 002.
தொலைபேசி: 86203

ஷோரூம் மற்றும் விற்பனை:
37, கிரீம்ஸ் ரோடு, சென்னை-600 006.
தொலைபேசி: 86204

FIBROFLEX
Rubberised Coir
**MATTRESSES,
PILLOWS and CUSHIONS**



நித்திக்கும் இந்த இன்ப பொங்கல் திருநாளுக்கு காஞ்சி சில்க் அளிக்கும்

பட்டுச் சேலைகள்! அத்தனையும் புத்தம் புது டிசைன்கள்! புதுமை வண்ணங்கள்! நவீன மோஸ்தர்கள்! நாகரீகத்தின் வரி வடிவங்கள்! அத்தனையும் கலை நயமுடையவை! விலை நியாயமானவை! நீடித்து உழைப்பவை! நிறைவு தருபவை!

காஞ்சி சில்க் பேலஸ்

6/53, பாண்டிபஜார், தி. நகர், சென்னை-600 017

எந்த சேலைக்கும் மேட்ச் ஆகும் ரவிக்கைகள் எங்களிடம் உண்டு.
எந்த ரவிக்கைக்கும் மேட்ச் ஆகும் ஸ்லீவ்ஸ் ஏராளம் உண்டு.

RAJATHI





✖ மேல்நாட்டுப் பட இயக்குனர்

✖ தேவிகாராணி விளக்கேற்றுகிறார்

filmotsav'80

உத்ஸவம் தொடங்கியது!

பெங்களூர் அசோகா ஓட்டலில் பத்திரிகையாளர் அறை ஒன்று இருக்கிறது. இது படம் காட்டப்படும் சந்தோஷ் திரையரங்குக்கு அருகில் உள்ளது. இங்குதான் பத்திரிகை அறிக்கைகளும் புகைப்படங்களும் தரப்படுகின்றன. இதை மிகப் பொறுப்பாக சென்னை பி.ஐ.பி.யைச் சேர்ந்த திரு திருநாவுக்கரசு, குமாரி ருக்மிணி ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

அதிகாரபூர்வமாகப் பட விழா துவக்கம் என்னவோ மூன்றும் தேதி மாலை 5 மணிக்குத்தான். ஆனால் இந்தியப் படங்கள் முப்பதாம் தேதியும், வெளி நாட்டுப் படங்கள் மூன்றும் தேதிக் காலை 8–30 மணி முதற் கொண்டும் பத்திரிகையாளர்களுக்குக் காட்டத் தொடங்கி விட்டார்கள்.

முதல் படம் The occupation in 26 pictures இது மூன்று நண்பர்கள் பற்றிய கதை. போர் மூண்டதன் விளைவு, இவர்கள் பிரிவதுடன் இவர்கள் வாழ்க்கை எப்படிச் சின்னா பின்னமாகிறது என்பதைக் காட்டுகின்றனர். வன்முறைக் காட்சிகள் நம்மை உறைய வைக்கும். குறிப்பாகக் கைதிகளை எவ்வாறு சித்திரவதை செய்கிறார்கள் என்பதைக் காட்டுவது மிகக் கொடூரம். இந்தப் படம் யுகோஸ்லாவியா நாட்டின் தயாரிப்பு. படம் பார்த்துவிட்டு வெளியே வந்த சிலர் ''முதல் படமே இப்படி இருக்க வேண்டுமா?'' என்று முணுமுணுத்தது காதில் விழுந்தது.

இரண்டாவது அமெரிக்கத் தயாரிப்பான Pretty Baby புகழ் பெற்ற தயாரிப்பாளர் - டைரக்டர் லூயி மாலே எடுத்த படம். ஒரு விபசாரியின் வாழ்க்கையில் ஏற்படும் திருப்பங்களும், அவளுக்கு வாழ்வு கொடுக்க ஒருவர் முன்வந்தால் எப்படி அவளது வாழ்க்கையின் நிலை மாறும் என்பதும் சொல்லப்படுகிறது.

அவளுக்கு ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்து அதுவும் உடலை விற்கும் தொழிலே செய்ய நினைக்கும்போது பெற்றவளுக்கு ஏற்படும் உணர்ச்சியையும், கடைசியில் தனது கணவரிடம் தன் தங்கை என்று கூறிய தன் பெண்ணைத் தானே கூட்டிக் கொண்டு செல்ல நேரும் நிலைமையும் மிகவும் சிறப்பாகக் கையாண்டுள்ளார் இயக்குனர் மாலே. இதில் தாயை விட அவளது பெண்ணாக வரும் புருக் ஷீல்ட்ஸ் எல்லோரையும் நடிப்பாற்றலால் கவர்ந்துவிடுகிறார்.

அடுத்து கனடா நாட்டுப் படம்.

A Scream from Silence கற்பழிப்பு பற்றிய படம். இது மனோதத்துவ ரீதியில் பல உண்மைச் சம்பவங்களை வைத்து எடுக்கப்பட்டது. படம் பார்ப்போருக்கு ஆசை உணர்வே ஏற்படாமல் இரக்க உணர்வை அதிகரிக்கச் செய்யும் விதமாக எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்தது பிரிட்டன் தயாரிப்பு:

The Europeans ஜேம்ஸ் ஐவரி டைரக்ஷன். படத்தில் பாத்திரங்களும் அதிகம்; வசனங்களும் அதிகம்.

இப்பொழுது நாம் தொடக்க விழாவுக்குச் செல்வோமா?

அரங்கத்தின் நுழை வாயிலிலேயே வரவேற்பு வளைவுகள் சாண்பவர்களைக் குளிர்வித்தது. ஏனென்றால் எல்லாமே பச்சை வண்ணத்தில் இருந்தன. பெங்களூர், கார்டன் சிட்டி என்பதாலோ?

அரங்க மேடையின் இருபுறமும் பிலிமோத்சவின் சின்னம் இருக்க அரங்கம் நிரம்பி



∧ "ப்ரெட்டிபேபி" படத்தில் ஒரு காட்சி

சத்யஜித் ரேயின் 'பதர் பாஞ்சாலி'யில் ஒரு காட்சி >




வழிந்தது. பட விழாக்களின் தலைவர்ரைனு முதலில் பேசினர். நிகழ்ச்சிகளை அழகிய பெண் ஒருவர் நடத்தினர். திரு கபூர், தென்னிந்திய பிலிம் சேம்பர் தலைவர் பக்தவச்சலா ஆகியோர் உரையாற்றினர். கடைசியாகப் பேசியவர் முதல் இந்தியத் திரைப் படத்தின் நாயகியும் இந்தப் பட விழாவைத் துவக்கி வைப்பவருமான திருமதி தேவிகா ராணி. அவர், "சர்வ தேசப் பட விழாக்கள் ஏனோ தென்னகத்தை ரொம்பக் காலம் பார்க்கவில்லை. சென்னையைத் தொடர்ந்து இப்போது பெங்களுருக்கு அந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதற்கு என் நன்றி. இம்மாதிரி உலகப் பட விழாக்கள் எங்கும் நடைபெற வேண்டும். திரைத் துறையில் உள்ள இளைஞர்கள் அதிகம் பார்த்துப் பயன் பெற வேண்டும்'' என்ருர். பிறகு குத்துவிளக்கேற்றி விழாவைத் துவக்கி வைத்தார். நாதஸ்வரம் முழங்கியது. அந்தக் கூட்டத்தில் தமிழ் நாட்டு முகங்கள் பல தென்பட்டன. தயாரிப்பாளர் உமாபதி, நடிகர்கள் மோகன், லோகேஷ், அம்பரிஷ், வி. கே. ஆர்., ஜெமினி கணேஷ், விஷ்ணுவர்த்தன், நடிகைகள் பாரதி, சரோஜாதேவி, மஞ்சுளா (கன்னடம்) பத்மினி, ராஜ கலோசனு. இந்திப் படத் தயாரிப்பாளர் ஜி. பி. சிப்பி, டைரக்டர்கள் பாசு சட்டர்ஜி, பி. புல்லையா, எஸ். பி. முத்துராமன் முதலியோர்.

அடுத்த இதழில் உங்களுக்காக ஒரு இயக்குனர் சில பிலிமோத்சவப் படங்களை விமர்சிக்கிருர். அவர் யார்? அடுத்த வாரம் வரை பொறுத்திருங்களேன்!

- சலன்

எண்ணவொண்ணாப் பேரெழில், ஏற்றமிகு, எச்.ஏ.எல்.இன் பேராற்றலின் பிரதிபலிப்பு — பாரத் டிவி



மிக நவீனமான இரண்டு ஐ.ஸிக்கள். மோகனமான நிர்மல் மற்றும் பித்தளை வேலைப்பாடு மிக்க காபினெட்கள். மற்றும் சிறப்பான செட் வகைகள்.

ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸின் பிரத்யேக ஹைப்ரிட் சர்க்யூட் கொண்டது — பாரத் டிவி மட்டுமே! அதனால் தான், உயிரோவியமோ என வியப்பூட்டும் ஒளி, ஒலிபரப்பு — உங்களை மகிழ்விக்க.

இத்தனைச் சிறப்புகளோடு, இணையில்லாத "சர்வீஸ்" வசதி கொண்டது பாரத் டிவி. வேறென்ன வேண்டும்...

உடனே உங்களருகிலுள்ள டிவி டீலரிடம் எமது நிகரில்லா நான்கு செட்டுக்களைப் பார்வையிடுங்கள்!

பாரத் டிவி தனது பேரழகையும் மிஞ்சிடும் பேராற்றல் கொண்டது.

பாரத் டெலிவிஷன் லிமிடெட் (APSSIDCன் கூட்டு நிறுவனம்)
6 நுங்கம்பாக்கம் ஹைரோடு
சென்னை 600 034 போன் : 86527

ACIL BT 35/79



கிரிக்கெட் – ஒரு பட்டிமன்றம்!

கிரிக்கெட் ஆட்டத்தில் போலிங், பாட்டிங், ஃபீல்டிங், ஏன் அம்பயரிங் கூட இன்றியமையாததாகும். இருந்தாலும், இதில் முக்கிய பங்கு வகிப்பது எந்த இலாக்கா? இதற்குப் பதில் சொல்லும் விதமாக யுவர்களும் யுவதிகளுமாக நாலு பேர் இந்த இலாக்காக்களை அலசித் தீர்த்து விட்டார்கள், போங்கள்!

திரு பத்மநாபன் (பத்து) —பாட்டிங் கட்சி
குமாரி சுமதி ஐயர் (தமிழக அணி பெண்கள் கிரிக்கெட்) —போலிங் கட்சி
குமாரி ராதிகா சுப்ரமணியம் (தமிழக அணி) —ஃபீல்டிங் கட்சி
திரு ராமன் —அம்பயர் கட்சி

பத்து: கிரிக்கெட் ஆரம்பிச்சு நூறு வருஷம் ஆச்சு. இதோட ஆரம்பத்துக்கு முக்கிய காரணம் கூட இருக்கு. இங்கிலாந்திலே எப்பவும் பனியும் குளிரும் ஜாஸ்தியாக இருந்ததாலே வெயில் காலம் வந்தவுடனே அவங்களுக்கு நிறைய நாழி கதகதப்புத் தேவையாயிருந்தது. இதுதான் கிரிகெட் ஆட்டம் ஆரம்பிக்கக் காரணம்.

இந்த விளையாட்டிலே பாட்டிங்தான் முக்கியமாத் தெரியுது. ஸ்கோர் என்ன என்றுதானே எல்லோரும் கேட்கிறாங்க? அடுத்த கேள்வி பாட்ஸ்மன் பேரைச் சொல்லி அவர் எத்தனை ரன் என்றுதானே வினவுறாங்க? போலரைப் பற்றித் துளிக் கூட யாரும் மூச்சு விடக் காணோம். உலக எக்ஸ்பர்ட் பிளேயர்னு சொன்னா ஒரு பிராட்மென், அல்லது ஓர்ரல் அல்லது ஸோபர்ஸ்தான் நினைவுக்கு வருவாங்க.. பாட்ஸ்மனுக்கு நிறையப் பிராப்ளம் இருக்கு. பதினோரு பேரோட, இரண்டு அம்பயரும் சேர்ந்து அவரை ஆந்தை மாதிரி முறைச்சுப் பாப்பாங்க. எப்படா வெளியே இவனை அனுப்பப் போறோம்னு நினைப்பாங்க. காலிலே கையிலே வாங்கினா அம்பயர் கையைத் தூக்கிடுவானோன்னு பயந்து பயந்து ஆட வேண்டியிருக்கு.

ராதிகா: நீங்க சொல்றது தப்பு. எவ்வளவு பெரிய பாட்ஸ்மனுக்கிருந்


ராமன்


ராதிகா


பத்து


சுமதி

தாலும் எக்ஸ்பர்ட் ஃபீல்டரிடம் பந்து போனுரன் எடுக்கப் பயப்படுவான். இதனுலேயே ஃபீல்டிங் ரொம்பவும் முக்கியம்னு தெரியுது. பாட்ஸ்மனுக்கு எந்தப் பக்கம் அடிச்சுட்டு ஓடறதுன்னு ஒரே குழப்பமா இருக்கும். இதனுலே ஏதாவது மிஸ்டேக் பண்ணிட்டு அவுட் ஆயிடுவான். "Catches—win matches". "Every Run Saved is a run scored." இப்படியெல்லாம் நாம் கேள்விப்படலேயா? கிரிக்கெட்ல முக்கிய பங்கு ஃபீல்டருக்குத்தான். இதில் துளிக்கூடச் சந்தேகம் கிடையாது.

சுமதி: ராதிகா! நீயும் பத்துவும் சொல்றது ரொம்ப ஆச்சரியமா இருக்கு. ஏன்னு ஆட்டம் தொடங்கி முதல் இரண்டு மணிநேரத்திலே ஃபாஸ்ட் போலர்ஸாலும் அந்த மாட்சின் தலைவிதியே நிர்ணயிக்கப்படறது. இதை நீங்க பார்த்ததில்லையா? கடைசி நாள் ஸ்பின் போலரைப் பார்த்துப் பாட்ஸ்மனுக்கு உதறல் எடுக்கிறதை நாம்தான் எப்பவும் பார்க்கிறுமே! (சிரிப்பு). இப்போ ஆஸ்திரேலியாவில் நடக்கிற மாட்ச்லே ஒவ்வொரு டீம்லேயும் குறைஞ்சது அஞ்சு ஃபாஸ்ட் போலராவது இருக்காங்க. அதனுலே போலிங் ப்ளேஸ் ன் இம்ப்பார்டண்ட் ரோல் இன் கிரிக்கெட்.

ராமன்: சுமதி! போலரைப் பத்தி வாய் கிழியப் பேசினீங்க. ஆனு நல்ல பிட்ச் இல்லேன்னு ஒரு போலர் என்ன செய்ய முடியும்? அதுமட்டுமில்லே. போலர் எவ்வளவு நல்லாப் பந்து போட்டாலும் பாட்ஸ்மென் அதிலேயிருந்து தப்பிக்க வழி இருக்கு. ஆனு இரண்டு அம்பயர்கள் நடுவிலே இருக்காங்கங்கறதை மறந்திடாதீங்க. போலர் பெவிலியன்லேந்து கூட ஓடிவந்து போலிங் போடலாம். ஆனு அம்பயர் கை தூக்கலேன்னு அவன் என்ன செய்ய முடியும்? (ஆவேசமாக) அம்பயர்தான் ஆட்டத்தை ஒவ்வொரு நிமிஷமும் கண்ணிலே விளக்கெண்ணெய் விட்டுண்டு பார்க்கறுர். இவரை விட வேறு யார் முக்கியம்?

சுமதி: சும்மா சொல்லக்கூடாது! அம்பயர் வேலை கஷ்டம்தான்.

ராமன்: இப்போதெல்லாம் அம்பயருக்கு எல்லாப் பக்கத்திலேயிருந்தும் பிரஷர் இருக்கு. பாட்ஸ்மன் அவுட் கொடுத்தா முறைக்கிறுன். போலர், அவுட் கொடுக்கலேன்னு கல்லாலைத் தூக்கி எறியறுன். எல்லோரும் சேர்ந்து' அம்பயரைச் சுத்தி, பேய் வந்தாப்போலச் சத்தம் போட்டுக் குதிக்கிறுங்க. கிரிக்கெட்டின் புனிதத் தன்மையே கெட்டுப் போச்சு. தப்போ, சரியோ, ஆட்டத்திலே அம்பயர் ஈஸ் தி ஜட்ஜ். அந்த மரியாதை இருந்தாத்தான் இந்த ஆட்டம் உருப்படும். (எல்லோரும் ஒப்புதலளித்துத் தலையாட்டுகிறுர்கள்.)

சுமதி: அதிருக்கட்டும், 'கிவ் மீ வெங்கட், ஐ வில் பீட் எனி ஸைட் இன் தி வோர்ல்ட்' அப்படீன்னு காரி ஸோபர்ஸ் சொல்லியிருக்கார். இதிலேருந்து போலர் பெருமை தெரியறது இல்லையா?

ராதிகா: நீங்க எல்லோரும் விக்கெட் கீப்பரை மறந்திட்டீங்க. அவரும் ஒரு ஃபீல்டர்தானே? அவரும் ஸ்லிப் ஃபீல்டர்களும் இந்த விளையாட்டில் ரொம்பவும் முக்கியம். ஒரு ஃபாஸ்ட் போலரோ ஸ்பின் போலரோ எவ்வளவுதான் பிரமாதமாகப் பந்து போட்டாலும் இவங்க ஒழுங்கா இல்லேன்னு அவர் ஒரு விக்கெட்டும் எடுக்க முடியாது.


பத்து: ராதிகா! பாட்ஸ்மனெல்லாம் உதவாக்கரைன்னு நினைச்சீங்களா? அவங்க நினைச்சா ஒவ்வொரு பந்தையும் பவுண்டரிக்கு அனுப்ப முடியும். அவங்க ஃபீல்டிங் பிராக்டீஸ் கொடுக்க வரலே. மாட்ச் ஆட வராங்க!

சுமதி: போலர் நினைச்சா டைட் லெந்த் போட்டு பாட்ஸ்மனைச் செயலற்றுப் போகச் செய்யலாம். கடைசியில் வெறுப்பிலேயே தப்புப் பண்ணிடுவான்!

பத்து: அதெல்லாம் ஒண்ணுமில்லே! நீல் ஹார்வி மாதிரி பெரிய ஆட்டக்காரங்க ரொம்ப மட்டமான பிட்சிலேயும் டைட் போலிங்கிலேயும் கூட தூள்சாமிர்தமா ஆடுவாங்க! இதுபோல் சந்தர்ப்பத்திலே, ஹார்வி நிறைய ரன் எடுத்திருக்கார். அதுமாதிரி நம்ம பட்டோடியும் ஒரு கண்ணோடயே அபார சாதனைகள் நிகழ்த்தியிருக்கார்.

சுமதி: ஆகஇதிலேருந்தே பாட்ஸ்மன் வேலை சுலபம்னு தெரியறது. ஆனு போலர்? அவர் எவ்வளவு கஷ்டப்படறுர்? எப்படிப் புது விதமாப் பந்தை வீசி விக்கெட் எடுக்கலாம்னு சதா அலர்ட்டா இருக்க வேண்டியிருக்கு.

பத்து: அதெல்லாம் ஒண்ணுமில்லே. போலர் வேலை ரொம்பச் சுலபம். ஒவ்வொரு இன்னிங்ஸ்லேயும் அவர் குறைஞ்சது, இருபது ஓவராவது போடுவார். அதனுல ஒரு



பால் சரியாப் போடலேன்னாலும் பரவாயில்லே. ஆனா பாட்ஸ்மன் பாடு, அப்படியில்லே. ஒரு பால் அலட்சியமா ஆடினாலும் அவர் விக்கெட் போய்விடும்.. தவிர போலர்ஸ் இப்போதெல்லாம் ஸ்டம்ப்பைப் பார்த்துப் போடறதில்லே. பாட்ஸ்மென் மண்டையை உடைக்கத்தான் சமயம் பார்த்திண்டிருக்கா!

ராதிகா: ஃபீல்டிங்லே நம் அணியினருக்கு காச்சிங் திறமை போறாது. லோல்கர், வெங்கட், ரோஜர் பின்னி, பட்டேல், இவங்க எல்லாம் ரொம்ப அவுட் ஸ்டாண்டிங் ஃபீல்டர்ஸ்தான். ஆனா இது போதாது. டீம்ல இருக்கிற எல்லோருமே எக் ஸ்பர்ட் ஃபீல்டரா இருந்தாத்தான் நல்லது. கண்ணிலே சூரியன் பட்டுது, அது இதுன்னு சாக்குப் போக்குச் சொல்லக் கூடாது.

சிக்கி: பத்து! இப்போ எல்லா பாட்ஸ்மனுமே எப்படியாவது ஒரு முப்பது ரன் அடிக்கணும், அடுத்த மாட்சிலேயும் இடம் பெறணும்னு பாக்கறாங்க இல்லேயா?

பத்து: இப்போ இந்த விளையாட்டிலே அதிகமாப் பணம் புரளுது. அதனாலே எல்லோருமே பணம் பண்ணணும்னுதான் பாக்கறாங்களே யொழிய டீம் ஸ்பிரிட்டே இல்லே. இருந்தும் இந்த நிலேயிலே கூட அஸீஃப், இக்பால், கபில்தேவ் மாதிரியெல்லாம் ஆட்டக்காரங்களைப் பார்ப்பது ரொம்ப ஆச்சரியம்தான்!

சிக்கி: சுமதி, இதை நீங்க ஆமோதிக்கறீங்களா?

சுமதி: ஆமா, இப்பல்லாம் விளையாட்டே ஒரு சண்டை மாதிரி, அரசியல் கட்சிகள் மோதிக்கிறாப்பலே ஆயிடுத்து!

ராமன்: இப்போ டி.வி.லே வந்திருக்கிற ரீப்ளே முறை அம்பயர்களுக்கு ரொம்பப் பிரஷர் கொடுக்குது. அம்பயர் ஒரு மனுஷன்தான். அவர் தப்புப் பண்ணலாம். அதுக்காக ரீப்ளே போட்டுக் காட்டறதும் பத்திரிகைங்க அவரைத் திட்டி எழுதறதும் அசிங்கம். போதாததற்கு அம்பயர் குண்டா இருந்தா உசிலே மணி, ஒல்லியாயிருந்தா தயிர் வடை தேசிகன் என்றெல்லாம் இன்ஸல்ட் பண்றாங்க. அம்பயர்தான் ஆல் இன் ஆல். அவர் எப்பவும் கரெக்டாத்தான் டிஸிஷன் கொடுப்பார்னு நாம் நம்பணும்.

சுமதி: முன்பெல்லாம் காப்டனுக்கு டீமோட முழு ஒத்துழைப்பும் கிடைச்சது. ஆனா இப்போ, தனக்குப பிடிச்ச காப்டன் இல்லேன்னா பிளேயர்ஸ் எதிர்த்துக் கறாங்க.

பத்து: ஆமாம். இது காப்டனை ரொம்பப் பிரஷரைஸ் பண்ற விஷயம். காப்டன் நல்ல பாட்ஸ்மனாவோ, இல்லே போலராகவோ இருந்தாப் போறாது. டீமை மொத்தமா நடத்திச் செல்லும் திறமை காப்டனுக்கு ரொம்ப அவசியம். வாழ்க்கையிலே எல்லா விஷயத்திலேயும் இப்ப பாலிடிக்ஸ் விளையாடுது. கிரிக்கெட்டிலும் நிறையப் பேர் இப்ப ஆட வருவதாலே போட்டி அதிகமாகிப் பாலிடிக்ஸ் தலை விரித்தாடுகிறது. இதே மாதிரி போச்சுன்னா இன்னும் பத்து வருஷத்திலே இந்த விளையாட்டே உருத் தெரியாமல் போயிடும்.

ராமன்: இதை நான் மறுக்கறேன். ரெண்டு வருஷம் முன்னாடி கபில்தேவை நமக்குத் தெரியாது. இப்ப அவர் பெரிய பிளேயர் ஆயிட்டார். பாலிடிக்ஸ் இருந்தா அவர் முன்னுக்கு வந்திருக்க முடியுமா?

ராதிகா: இது சரியான வாதமாகாது. கபில் மாதிரி பிளேயர்ஸ் வரலாம். ஆனால் விளையாட்டோட ஜீவனை பாலிடிக்ஸ் கொன்னுவிடும்.

சுமதி: எல்லாமே டீம் ஸ்பிரிட்லதான் இருக்கு. ஒவ்வொருத்தரும் அவங்க பங்



''இந்தப் பாம்பு இப்போவெல்லாம் 'படம்' எடுக்கிறதில்லே சார்!''

''ஏம்பா, வயசாயிடுச்சா?''

''ஊஹூம். அது நடிச்ச ரெண்டு படம் தோல்வி அடைஞ்சு போச்சு. அதனாலே!''

அ. இராமதாஸ்

கைச் சரியாச் செஞ்சா அது ஒரு நாள் கிரிக்கெட்டோ, இல்லே அஞ்சு நாள் மாட்சோ, சோபிக்கும். அம்பயரோட சண்டை போடாம, காப்டனுக்கு மதிப்புக் கொடுத்து, ஆட்டக்காரர்கள் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைத்து, பார்க்க வரவங்களுக்கு நல்ல என்டர்டெயின்மென்ட் கொடுத்து விளையாடினா இந்த ஆட்டம் சீர்குலையாம இருக்கும்.

(எல்லோரும் ''சிறந்த அணி வெற்றி பெறட்டும்'' என்று வரப்போகும் சென்னை டெஸ்ட்டை வாழ்த்தி ஆளுக்கொரு கோல்ட் ஸ்பாட் அருந்திவிட்டுப் புறப்படுகிறார்கள்.)

உரையாடல் தொகுப்பு: ''சிக்கி''

படங்கள்: உத்ரா

உரையாடல் ஒலிப்பதிவு: குமார்

நட்புறவுடன் படையெடுப்பு!

“இந்த அமீன் என்னை ரொம்பப் படுத்துறான்; என்னால் தாங்க முடியவில்லை'' என்று புகார் பண்ணினார் கார்மால்.

மாஸ்கோவில் அவர் பிரஷ்னேவுடன் பேசிக் கொண்டிருந்தார். ''என்னை ஆளவே விட மாட்டேனென்கிறான். ஆப்கானிஸ்தானத்தைத் தானே ஆண்டு கொண்டு இருக்க வேண்டுமென்கிறான்!''

''அடாடா! என்ன அநியாயம்! எவ்வளவு பேராசை!'' என்று தமது பதவி நாற்காலியில் அழுத்தமாக உட்கார்ந்து கொண்டு சொன்னார் பிரஷ்னேவ். ''அமீன் எங்களிடம் கூடக் கொஞ்சம் வாலாட்டி இருக்கிறான். அவனை ஒழித்துக் கட்டி விட வேண்டியது தான்.''

''அப்புறம் டராகி இருந்தார். அவர் ஒரு மேதை. அவர் கொள்கைகளுக்கு இன்றைக்கும் ஏராளமான ஆதரவாளர்கள் இருக்கிறார்கள்.''

''ஐயோ! மேதை என்று சொன்னீர்! மேதைகள் கட்சி ஆட்சிக்கு வருவது ரொம்ப ஆபத்தாச்சே!'' என்று அலறினார் பிரஷ்னேவ். மாஸ்கோ ஆட்டி வைக்கிறபடி காபூலில் ஆட மாட்டார்களே அவர்கள்.... சரி சரி, இப்ப நான் என்ன செய்ய வேண்டுமென்கிறீர்?''

''வேறு ஒன்றுமில்லை; ஆப்கானிஸ்தானத்தை நான் ஆள்கிற மாதிரி ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வளவுதான்.''

''அதற்கு நான் சோவியத் படைகளை அனுப்ப வேண்டியிருக்குமே. உலக நாடுகளெல்லாம் வேற்று நாட்டின் உள் விவகாரங்களில் ருஷ்யா தலையிடுவதாக, ஆக்கிரமிப்பு நடத்துவதாகப் பழிக்குமே!''

''அதெப்படிப் பழிப்பார்கள்? அதுதான் ஆப்கானிஸ்தானத்துக்கும் ருஷ்யாவுக்கும் இடையில் நட்புறவு ஒப்பந்தம் இருக்கிறதே!''


''வாஸ்தவம்தான். ஆனால் அயல் நாட்டவர் படையெடுப்பு நடந்தால்தானே அந்த ஒப்பந்தத்தைப் பிரயோகித்து உங்களுக்கு உதவ நாங்கள் படைகளுடன் வரலாம்?''

''இவ்வளவுதானே விஷயம்? முதலில் ஒரே ஒரு சோவியத் வீரனை ஆப்கானிஸ்தானத்துக்குள் அனுப்புங்கள். அவன் எல்லையைக் கடந்து நுழைந்ததுமே அயல்நாட்டுப் படையெடுப்பு நடந்ததாகிவிடும்! பிறகு அந்த அயல்நாட்டுப் படையெடுப்பிலிருந்து ஆப்கானிஸ்தானத்தைக் காப்பாற்ற ஒப்பந்தப்படி ஏராளமான ருஷ்யப் படைகள் எங்கள் தேசத்துக்குள் நுழையலாம்!''

''அடடா! என்ன அபாரமான யோசனை!'' என்று கார்மாலைக் கட்டிப் பிடித்துக் கொண்டார் பிரஷ்னேவ். கூடவே அவருக்கு இன்னொரு சந்தேகம் வந்து விட்டது. ''அது சரி, காபூலில் இருக்கும் அரசு எங்களைக் கேட்டால்தானே நாங்கள் படைகளை அனுப்ப முடியும்?'' என்றார்.

''சரியாப் போச்சு, இதோ நான்தான் இங்கே வந்து உங்களைக் கேட்கிறேனே. காபூல் அரசின் பிரதிநிதியாக என்னைக் கருதுங்கள். முடிந்தது விஷயம்! அது உங்களுக்குப் பிடிக்கலை என்றால், என்னை 'ஆப்கானிஸ்தானத் தலைமை' என்றாவது வர்ணித்து விடுங்கள். 'ஆப்கன் அரசு' என்றால் என்ன; 'ஆப்கன் தலைமை' என்றால் என்ன? எல்லாம் ஒன்று தான்!''

''பேஷ்! பேஷ்!'' என்று தட்டிக்கொடுத்தார் பிரஷ்னேவ். ''உன்னைப் போன்ற புத்திசாலி ஆப்கானிஸ்தானத்தை ஆண்டால்தான் எங்களுக்கும் வசதி. நாளைக்கே பல்லாயிரக் கணக்கான வீரர்களையும், ஆயிரக் கணக்கான டாங்குகளையும், நூற்றுக் கணக்கான யுத்த ஹெலிகாப்டர்களையும், ஆம்புலன்ஸ்களையும், சமையல் வாகனங்களையும் ஏற்றிக் கொண்டு நூற்றுக் கணக்கான ராட்சத விமானங்கள் காபூலில் போய் இறங்கும். இவற்றுக்கு மத்தியில் தக்க பாதுகாவலுடன் நீங்களும் போய்ச் சேரலாம். அதுசரி, உங்களுக்காக இவ்வளவு செய்கிறோமே; எங்



1980 ஜனவரி 13
சித்தார்த்தி மார்கழி 29
மலர்: 38 இதழ்: 24



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

களுக்கு நீங்க என்ன பிரதியுபகாரம் செய்வீர்கள்?''

''இதென்ன கேள்வி? நான்தான் ஆப்கானிஸ்தானத்தையே உங்களுக்குத் தந்துவிட்டேனே!'' என்றார் கார்மால். பிரஷ்னேவ் வாயெல்லாம் பல்!

● ● ●

ஆப்கானிஸ்தானத்துக்குள் நுழைந்த சோவியத் வீரர்கள் பேசிக் கொண்டார்கள்: ''முன்பு அஜர்பைஜானைக் கபளீகரம் பண்ணியாச்சு; இப்போ ஆப்கானிஸ்தானத்தையும் முழுங்கியாச்சு! நம் தேசத் தலைவர்கள் சாமர்த்தியம் யாருக்கு வரும்! வாழ்க கிரெம்ளின்!''

''நீ சொல்வது ஆசியாவில்! ஐரோப்பாவில் ஹங்கேரி, செக்கோஸ்லாவாகியா ஆகியவற்றை விட்டுவிட்டாயே! வாழ்க கம்யூனிஸம்!''

● ● ●

இந்தியாவில் இந்திரா, ருஷ்யாவின் ஆப்கன் படையெடுப்பை நியாயப்படுத்திப் பேசியிருக்கிறார். அவர் அப்படி பேசுவதில் தான் என்ன தவறு? அவர் அப்படித்தான் பேசுவார்! அவரே உருவாக்கிய ருஷ்யா — இந்தியா நட்புறவு ஒப்பந்தம் இருக்கும்போது அவர் வேறு எந்த விதமாகப் பேச முடியும்? அது என்றைக்கு எம்மாதிரி சூழலில் அவர் உதவிக்கு வருமோ யார் கண்டது? வாழ்க இந்திரா!

வாசகர் கருத்து

சினிமா பார்ப்பது போல் இருந்தது!

● 'முற்றுப்பெறாத வாக்கியங்கள்' இவ்வளவு விரைவில் முற்றுப் பெற்று விட்டதே! கதையைப் படித்து முடித்ததும் ஒரு ஃபார்முலா சினிமாவை மிக வேகமாகப் பார்த்த உணர்ச்சி ஏற்பட்டது.
சென்னை-12 வி. சந்திரசேனன்

● மதனு மிருத்தியுஞ்சயனின் ''முற்றுப் பெறாத வாக்கியங்கள்'' பிரமாதம் போங்கள். ஒன்பது வாரமே வந்தாலும் நன்றாக இருந்தது. ஆனால் நீல் கமல் இறந்ததை ஜீரணிக்கச் சற்றுக் கஷ்டமாயிருந்தது. இவரது அடுத்த தொடர் கதை எப்போது?
சென்னை—44 ஏ.கே. சங்கர்

● ஜோசியம் பற்றிய என் பதிலைக் குறிப்பிட்டு மதுரை கலைக் கண்ணன் வருந்தி எழுதியுள்ளார். பாரதீய வித்யா பவனத்தில் முறையாக மூன்று மாத ஜோதிட வகுப்பில் சேர்ந்து படித்தவன் நான். ஜோதிடக் கலை விஞ்ஞானம் போன்றதாக இருக்கலாம். ஆனால் அது எந்த விதத்தில் மனிதனை உயரச் செய்கிறது என்பதுதான் புரியவில்லை.
புதுடில்லி 'கடுகு'

● சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு முன்னிட்டு வெளியிட்டுள்ள ஜோக் ஜோக்கே! கல்கி இதழ் நேயர்களுக்குக் கிடைக்கும் தேதி 27—12—79. ஆண்டு முடிவதோ 31—12—79. அப்படியிருக்கையில் 31-12-79 அன்று மூன்று குழந்தைகளைப் பெற்றது எப்படித் தெரியும் சார்?
திருக்கழுகுன்றம் டி. எஸ். குப்புஸ்வாமி

● புரூஸ்லீ ப்ளோ அப் படம் ரொம்ப டாப். வரிசையாக இதுவரை வந்த ப்ளோ-அப் படங்களை நான் ஒட்டி வைத்திருப்பதை பார்த்தால் சொக்கிவிடுவீர்கள்.
மதுரை—16 கே. குமார்

● 'ஒரு டைரக்டர் டெண்டில் படம் பார்க்கிறார்' கதையைப் படித்தேன். ஆசிரியரின் நடை என்னைப் பெரிதும் கவர்ந்தது. ஆனால் அவரின் கவனம் உதவாக்கரை சினிமாத் துறையை விட்டு வேறு துறைகளின் குறைகளைப் படம் பிடித்துக் காட்டத் திரும்பட்டும்.
சென்னை—21 எஸ். கணேஷ்


● ''டி. எம். சௌந்தரராஜனின் கார் ரிஜிஸ்ட்ரேஷன் எழுத்தும் டி.எம்.எஸ்!'' இது என்ன உலக அதிசயங்களில் ஒன்றா? இதற்குப் போய் கல்கியில் கால் பக்கத்தை வீணடித்திருக்கிறீர்களே!
திருநெல்வேலி-7 எஸ். சோமசுந்தரம்

● 'கண்களும் கவிதைகளும்' பரிசுப் போட்டியில் ஆறுதல் பரிசுகளாக 200 தீபாவளி மலர்கள் பெற்றவர்களுக்குப் பரிசை அனுப்பி விட்டீர்களா?
அல்லூர் எஸ். ஸ்ரீனிவாசன்

(தீபாவளி முடிந்து இரண்டு மாதமாகப் போகிறதே அனுப்பாதிருப்போமா? —ஆர்)

● ''ஸ்கைலாப் சம்பந்தி'' விமரிசனம் பார்த்தேன். மௌலியின் கைவந்த கலை சென்கரி போடுவதோடு நிற்கவில்லை. அவருடைய நாடகங்களைத் தமது எம். ஃபில் ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுத்துள்ளார், வேலூர் ஊரீசுக் கல்லூரி தமிழ்த் துறை துணைப் பேராசிரியர் ம. வி. சுதாகர்!
சென்னை—34 இ. ச. சேஷாத்திரி

கிரிக்கெட் அதிசயங்கள்!



✖ கிரிக்கெட் மந்தமான ஆட்டம் என்று சிலர் கூறுவர். ஆனால் கிரிக்கெட்டிலும் சிலசமயம் சுவையான நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு.


பாகிஸ்தான் குழுவுடன் இப்போது இந்தியா வந்துள்ள மஜீத்கானின் தந்தை ஜஹாங்கீர் கான் எம். ஸி. ஸி. கோஷ்டிக்கு எதிராக ஒருமுறை பந்து வீசும்போது குறுக்கே பறந்து வந்த ஒரு பறவை அடிபட்டு இறந்துவிட்டது! இந்தப் பறவையின் உடல் இன்னும் 'லார்ட்ஸ்'ஸில் கண் காட்சியாக வைக்கப்பட்டுள்ளது! இது நடந்தது 1936ல்.




✖ 1963ல் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்த மேற்கு இந்தியக் குழு 'சசெக்ஸ்'க்கு எதிராக விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது சசெக்ஸ் ஆட்டக்காரர் தாம்ஸன் ஒரு பந்தை வேகமாக அடிக்க அது பாதி தூரம் போனபோதே எங்கிருந்தோ திடீரென்று வந்த ஒரு நாய் அதை 'லபக்'கென்று கவ்விக்கொண்டு ஓடிவிட்டது! விளைவு தாம்சனுக்கு 4 ரன்கள் தரப்பட்டது.



✖ சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே 'பெர்த்'தில் நடந்த பந்தயத்தில் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் 'ஹில்டிச்' ரன்னராக நின்று கொண்டிருந்தார். அப்போது சர்ப்ராஸ் நவாஸ் ஒரு பந்தை எறிய, எதிர் முனையிலிருந்த பாட்ஸ்மன் அதைச் சாதாரணமாக விளையாடினார். அந்தப் பந்து அருகில் நின்றதும், ஹில்டிச் தோழமையாக எடுத்து சர்ப்ராஸிடம் நீட்டினார்! உடனே சர்ப்ராஸ், ஹில்டிச் பந்தைக் கையால் தொட்டதற்காக 'அவுட்' கோரினார். நடுவரும் 'அவுட்' கொடுத்தார்!



✖ ஒரு கிரிக்கெட் மட்டையின் குறுக்களவு நாலரை அங்குலம்தான் இருக்க வேண்டும். இது 1771ம் ஆண்டிலிருந்து சட்டம். இந்தச் சட்டம் வர ஒரு நிகழ்ச்சி காரணமாயிருந்தது. இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதற்கு இரு தினங்கள் முன் நடைபெற்ற ஒரு மாட்சில் தாமஸ் வொயிட் என்பவர் மிக அகலமான மட்டையுடன் ஆட உள்ளே வந்தார். இந்த மட்டை மூன்று ஸ்டம்புகளை விட அதிக அகலமாக (ஸ்டம்புகளை மறைக்கும் வண்ணம்) இருந்தது! அதனால் இவரை அன்று அவுட் ஆக்கவே முடியவில்லை. இதன் பிறகுதான் கிரிக்கெட் மட்டை நாலரை அங்குல அகலத்துக்கு மேல் இருக்கக் கூடாது என்ற சட்டம் கொண்டுவரப் பட்டது.



✖ கிரிக்கெட் சரித்திரத்திலேயே ஒரே பந்தில் மிக அதிகமாக எடுக்கப்பட்டது 10 ரன்கள்தான்! இது நடந்தது 1900ம் ஆண்டில். அப்போதெல்லாம் பந்து எல்லைக் கோட்டைத் தாண்டினால் 4 ரன்கள் என்பது கிடையாது. அப்படி எல்லைக் கோட்டைத் தாண்டினால் நடுவர் அதற்கு 2 ரன்கள் தரலாம், 4 ரன்களும் தரலாம். ஒரு ரன்கூட தராமலும் இருக்கலாம் என்பது அப்போதைய சட்டம். அதனால் பந்து எல்லைக் கோட்டைத் தாண்டிய பின்னும் பந்தை அடித்தவர் ஓடிக் கொண்டே இருப்பார். 'டெர்பிஷைய'ருக்கும் எம். ஸி. ஸி.க்கும் நடந்த இந்த மாட்சில் 'டட்' என்பவர் ஒரு பந்தை வேகமாக அடித்தார். அது எல்லைக் கோட்டைக் கடக்கவே நடுவர் 2 ரன்கள் கொடுத்தார். ஆனால் அவர் அப்படி 2 ரன்கள் தரும் முன்பே பாட்ஸ்மன் 4 ரன்கள் ஓடிவிட்டனர்! இதனால் மொத்தம் 6 ரன்கள் ஆயிற்று. விஷயம் அதோடு முடியவில்லை. பிறகு பந்தை எறிந்தவர் வேகமாக எறிய, அது மீண்டும் எதிர்ப்பக்க எல்லைக் கோட்டைத் தொட, அதற்காக நான்கு ரன்கள் ஓட, மொத்தம் ஒரே பந்தில் 10 ரன்கள் ஆயிற்று!

ஆதாரம்: 'சண்டே' -சம்பத் குமாரி

கடலுக்குள் ஜூலி



புஷ்பா தங்கதுரை

முன் கதை

கனி நாகலாபுரம் கிராமத்தில் மண் அரிப்பு ஏற்பட்டதில் மூன்று எலும்புக் கூடுகளும், ஓர் உலோகக் குழாயும், உலோக பாட்ஜும் கண்டு பிடிக்கப்பட்டன. பாட்ஜில் எச். எம். எஸ். ஜே. என்ற எழுத்துக்கள் மல்லிக்கின் மனத்தில் கிரிச்சா வட்டம் அடிக்கிறது. அவனுக்கு 'ஹிஸ் மெஜஸ்டிஸ் ஷிப்' நினைவு வந்தது. அதோடு கன்னிமரா ஹோட்டலில் சரித்திர ஆராய்ச்சியாளர் ஜேம்ஸ் டில்லான் வொய்ட்டைப் போய்ச் சந்தித்ததும் ஞாபகம் வந்தது. ஜேம்ஸ் டில்லான் வொய்ட்டின் டயரியில் இருந்த எச். எம். எஸ். ஜூலி காலண்ட் என்ற பெயர் அவன் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது.

கோபி, மல்லிக்கின் நண்பன். மல்லிக் பேப்பர்களுக்கு ஏஜென்சி எடுத்து விநியோகம் செய்து கொண்டிருந்தான். மல்லிக் அடிக்கடி 'சொத்து வேட்டை' என்று பல இடங்களுக்குச் சென்று வருவது கோபிக்குப் பிடிக்கவில்லை. கனி நாகலாபுரம் போகவேண்டும் என்றும், அங்கே பதுங்கி உள்ள ஏராளமான நாணயங்களைப் பற்றியும் சொன்னான் மல்லிக். கோபி அதைக் 'கனவு' என்று கிண்டல் செய்தான். ஆனால் மல்லிக் கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்களின் இரகசியக் கடிதத்தின் 'போட்டோ ஸ்டாட்' காப்பியையே காண்பித்தான். அதில் 1840 அக்டோபர் 12ந் தேதி எச். எம். எஸ். ஜூலி காலண்ட் என்ற கப்பலில் வந்த விலையுயர்ந்த பொருள்கள் பற்றிய ஜாபிதா இருந்தது.

கோபியிடம் தன் பிஸினஸை ஒப்படைத்து விட்டு மல்லிக் கனி நாகலாபுரம் வந்து அடைகிறான்.

குதிரை வண்டியில் மல்லிக் ஒரு வீட்டின் அருகில் வந்து இறங்குகிறான். அந்த வீட்டு வாசலில் சப்பரக் கோலம் இடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, அந்தக் கோலமிட்ட இரு வண்ணக் கைகளுக்குரிய தாவணி கட்டிய இளம் மங்கை 'வாங்க' என்று அவனை வரவேற்றது அவனைத் தூக்கிவாரிப் போடச் செய்தது.

மேலே கதையைத் தொடர்ந்து படியுங்கள்.

2

[கதை ஆரம்பிக்கு முன் மகத்தான வரவேற்பு அளித்த திருவாரூர் திருமதி ஆண்டாள் வரதராஜனுக்கு நன்றி.

—புஷ்பா தங்கதுரை]

"If fortuned that John Drake going up into the top, descried her about three of the clock" The treasure ship contained great riches, jewels precious stones and silver and gold. The capture took place at Cape de San Francisco about 150 leagues south from Panama. The great seamen of Elizabeth -By BRYAN BEVAN

—வாங்க!

அந்தப் பெண் பேசவில்லை. அவள் கண்ணில் இருந்த சிநேகம் அப்படி பாவனை கொடுத்தது. கிட்டத்தட்ட பேசியது—வாங்க!

கொஞ்சம் உயர்த்திப் பார்த்தான்.

நல்ல கிராமீயம். ஒரு பாரதிராஜா படத்திலிருந்து இறங்கி வந்தவள் போல் இருந்தாள்.

கழுத்திலிருந்து கறுப்புத் தாவணியில் டாலர் தொங்கியது.

முடியை இழுத்து வாரி இருந்தாள். லாக்கெர் பொம்மை போல முகம்.

சின்ன சமிக்ஞை செய்தால் போதும் நீ யாரு எங்கிருந்துவந்தே எதுக்காக வந்தே ஏன் நிக்கறே என்ன வேணும்னு மூச்சு விடாமல் பொரிந்து விடுவாள் போல இருந்தது. அல்லது கரீ, கயா, கரு என்று காளு பாஷையில்....

அப்படி ஒரு கட்டித்தனம் கண்ணில் பதுங்கியிருந்தது.

அவள் பேசவில்லை. இரண்டடி வைத்தான். கால் மறுத்தது. திரும்பினான். நாக்கு முனையில் ஊறிய வார்த்தைகள் தொப்பென்று கொட்டின — இந்த ஊர்லே எலும்புக் கூடு கிடைச்சதுன்னாங்களே!

அவள் இடுப்பைச் சின்னதாக ஒடித்து கண்ணைக் கொட்டினாள். அழகு சொட்டியது.

—நீங்க யாரு?

—போலீஸ் டிபார்ட்மெண்ட்....

மினுக் என்று சிரிப்பு. அவள் கண்ணில் அது ஒரு மீனுகித் தண்ணீருக்குள் குதிப்பது போல.

—போலீஸ்லே வந்தா. பார்த்தா. ரிப்போர்ட் எழுதி முடிச்சாச்சு. எல்லி மாதிரி கடைசிலே வர்றீங்களே.

கொஞ்சம் அசந்தான். கிராமம் 1800. இவள் 2000ல் இருப்பாளோ?

—நான் சொல்றத முழுசா கேட்கலியே! போலீஸ் டிபார்ட்மெண்டிலே சொன்னாங்க; நான் ஆராய்ச்சியாளன்.

—ஆந்த்ரோபாலஜியா?

திரும்பியும் அசர்வு.

கிராமத்தில் சந்திரசேகரின் 'போதுமே', என்.' எம். ஈ. பி; ஐ. ஆர். 20 இவைகள் தான் தற்காலத்தை நிரூபித்தன. அரச மரத்தின் மேலே இரண்டு வாடிப்போன கொடி, தலைவர்களின் திருஷ்டிப் பரிகாரக் கரிப் படங்கள் இரண்டு, இப்போதைய பிற்சேர்க்கைகள்.

இங்கே படிப்பு எப்படி வந்து சேர்ந்தது?

—இல்லே. சொந்த ஆராய்ச்சி!

—அதோ அங்கே போங்க...

அவள் பார்வை எதிர் சாரியைத் தாண்டி சுமார் இரண்டு பர்லாங்கில் விழுந்திருக்கும்! வழியை, அதன் நீளத்தை /விட, நீளமாகச் சொன்னாள்.

நடந்தான். (—கிழக்காலே போனும்.) போனுன்.

(—தெருவைத் தாண்டனும்.) தாண்டினுன்.

அவன் காதிலே அவள் சொன்ன திசைகள் இடது, வலது போட,

முன்னுல் ஒரு பிரும்மாண்ட ட்வெண்டியத் செஞ்சுரி ஃபாக்ஸ் காட்சி, அடிவானத்தி லிருந்து அடிவானம் விரிந்தது.

சோலே வனம்.

கண்ணில் பச்சையும் குளிரும் மோதின.

தென்னம் பிள்ளைகள், கிளிகள், ஊர்ப் பிள்ளைகள்!

வானம் ஒரு துப்புரவான நீலம். கிழக்கு ஓரத்தில் ஒரு ஸிர்ரஸ் மேகம்,

பிரமித்து நிற்க,

ஒரு கொத்து கடல் வல்லூறுகள் மூக்கை நீட்டி ரொம்ப சொந்தமாக பறந்து போயின.

சோ என்று கடல் பேசியது.

எங்கேயோ இருக்கிறது கண்ணில் விழவில்லே.

.....இன்னும் நடக்கணும். வேலி வந்துட்டதா?....

வந்துடுத்து!

முள்வேலி.

அந்த லாண்ட்ஸ்கேப்பைச் சுற்றி பெல்ட் இறுக்கியது போல் மேற்காலே போய், கிழக்காலே வந்து சேர்ந்தது.

எதற்கு இந்த வேலி?

சின்ன விக்கெட் வாசலும் அருகில் 20 டிகிரி சாய்ந்த ஒரு மர போர்டும்.

அனுமதியில்லே (எட்டு காலம் தலேப்பு)

கனிநாகலாபுரம்

மண் அரிப்புத் தடுப்புப் பணி

பி. டபிள்யு....

மீதி எழுத்துக்கள் அரிப்பில் போய்விட்டன.

உள்ளே போகலாமா, கூடாதா? அந்தப் பெண் இன்னும் காதில் திசை சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் பார்வை விழுந்த இடம் இன்னும் கொஞ்ச தூரத்தில்தான்.

தைரியமாக உள்ளே போக, வெறும் காற்றிலிருந்து வெடி வெடிப்பது போல் பட படவென்று வசைகள்!

திடுக்கிட்டான். அவைகளின் சொந்தக்காரன் தலேப்பா கட்டி, காக்கி போட்டு, கணுக்கால் வேட்டியுடன் ஆவேசப் புறப்பாட்டில் வந்தான். மீசை வழியே கோபம்சொட்டியது.

குபீர் என்று மல்லிக் பின்னுக்கடித்து வேலியைத் தாண்டியதும் அவன் அர்ச்சனே ஒரு கத்தியால் துண்டித்தது போல் நின்றது.

அந்த வாட்ச்மேனின் 'வன்'களைக் கொஞ்சம் சேராக்கலாம் என்று எண்ணும்போது, அவன் அந்த வரிபோடும் நிழல் வெய்யி லூடே அவசரமாகத் தூரத்தில் மங்கிப் போனுன்.

....வேலி தாண்டிப் போனும்; சிவன் கோவில் வரும். அதுக்கு இடது பக்கம்... அந்தப் பெண் இன்னும் முடுக்கிக் கொண்டிருந்தாள்.


வேலி தாண்ட முடியலியே! மிஸ்... உங்க பேர் என்ன?

...உயரமான பாவாடை. அடுக்கடுக்காக அதன் மடிவுகள். ஒரு காலே ஊன்றி ஒரு காலே வேணு கோபாலனுக்க, அந்த விலகிய காலின் மேல் பருமன், ஆடைக்கு வெளியே புஷ்டியான பரிமாணங்களில் தெரிய....

The Instant I see a girl, I see her naked

யாரோ மகானுபாவன் சொன்னுரே! அது ஏன் இப்போது நினைவுக்கு வருகிறது?





இனு இனு என்று இரண்டு மூனு மூனு. வேலிக்குள்ளே தூரத்தில் இரண்டு பேர் பேசி வந்தார்கள். பாண்ட் சட்டைதாரிகள்!

இங்கிலீஷும் தமிழும் கலக்க, அநேகமாக சர்க்கார் உத்தியோகமாக இருக்கும்.

க்ளோஸ் அப்பில் வந்த போது முகத்தில் மூன்—நாற்பது தெரிந்தது. கெஜட் பதிவு பெற்றவர்களாக இருக்கும். நித்திய ஷேவ்.

பாக்கி, அவர்களது பாண்டும் டெரீன் ஸ்லாக்கும் ஆயிரம் கொடிகள் பார்த்து நொந்துபோனவை. இரண்டுபேர் கையிலும் ஒரு ஆர். எஸ். டி. எஸ். கோவாபரேடிவ் கிரெடிட் சொஸைடி உபயம் அளித்த பிளாஸ்டிக் பைகள். ஒருத்தர் கையில் அது தலைகாணி! இன்னொருத்தர் கையில் டிபன் பாக்ஸ் கர்ப்பத்தோடு புடைப்பு.

—ஸார்!

ஒருத்தர் திரும்பினர். சந்தனக் கீற்று! பார்வை அடிக்காத குறை.

—கொஞ்சம் உள்ளே போய்ப் பார்க்கணும் ஸார்.

—நீங்க யாரு?

—நான் தனியாள். ஆராய்ச்சிக்காரன்.

பார்வை மூலம் அவன் உடம்பில் ஏறினர், இறங்கினர். —சீஃப் செக்ரட்ரிக்கு எழுதுங்க. பெர்மிஷன் கொடுப்பாரு.

மேலே நில்லாமல் சுருக்காகத் திரும்பி, விட்ட இடத்தைத் தொடர்ந்து கொண்டு போனர்கள்.

இங்கிலீஷும் தமிழும் வால்யூம் இறங்கிக் கொண்டே போய் மறைந்தன.

சீக்கிரத்தில் வேலி வழியே இன்னொருத்தர் தோற்றமானர். பெரிய கட்டம் போட்ட டெரீன் சட்டை. காற்றில் பெல்பாட்டம் துடுப்புகள் போட, வந்தார்.

—ஸார்!

நின்றார். கண்ணாடிக்குள் வயது உட்கார்ந்திருந்தது. காதோரங்களில் வெள்ளிகள்!

—நா மெட்ராஸிலேந்து வர்றேன். கோவில்களைப் பத்தி எழுதறேன். உள்ளே பார்க்கணும்.



அட்டைப்பட விளக்கம்

பாகிஸ்தான் குழுவில்:

1. அசுபீப் இக்பால் (காப்டன்)
2. இம்ரான்கான் (படம்: தில்லிராஜு)
3. ஜாவேத் மியான்தாத்.



இந்தியக் குழுவில்:

1. வெங்சர்க்கார்.
2. விசுவநாத்.
3. காப்டன் கவாஸ்கர்.

கண்ணாடியைப் புதியவர் கழற்றினார்.

—உங்களுக்குக் கோயிலைப் பத்தி என்ன தெரியணும்?

கேள்வி கெஜட் தோரணத்துடன் வந்தது.

—இல்லே; சுவாமி பேரு, அம்பாள் பேரு...

—சுவாமி பேரு நாகலபுரீசுவரர். அம்பாள் சிற்றிடை நாயகி! மரக்கல நாயகின்னும் மற்றொரு பேரு.

—உங்களுக்கு எப்படித் தெரியும்?

—நான் ஆர்கியாலஜிகல் டிபார்ட்மெண்ட்.

—கோவில் எந்தக் காலத்திலே ஏற்பட்டது?

—இப்பத்தான் கல்வெட்டைக் காப்பி எடுக்கிறோம். கண்டு பிடிப்போம்.

—உத்தேசமாச் சொல்லலாமில்லே?

—அதெல்லாம் ஸ்காலர்ஸ் முன்னாலே சொல்லி அப்புறம்தான் பொதுஜனங்களுக்கு அறிவிப்பு நடக்கும்.

—இப்ப நான் போயி பார்க்கலாங்களா?

—யாரும் போக முடியாது. இது பாது காக்கப்பட்ட இடம்.

காலைப் பெரிதாக அகற்றி வைத்து, கையில் மார்டிமர் வீலரின் அரிகமேடு எக்ஸ்கவேஷன் படபடக்க, சீக்கிரமாக ஒற்றைப் பாதையில் மறைந்து போனார்.

சோர்வு ஒரு டோஸ் அதிகமாக வர, ஒரு இலுப்பையின் நிழலில் ஒதுங்கினான். ஒரு நிமிடம் இருக்காது.

—பார்த்தீங்களா? என்று குரல்.

திரும்பிப் பார்த்தான்.

அந்தப் பெண் கையில் வெண்கலப் பாத்திரத்துடன் நின்று கொண்டிருந்தாள். பாத்திரத்தின் அடியில் கரி பூசியிருக்க, வாயில் ஒரு புராணத் துணி கட்டப்பட்டிருந்தது. தோளிலிருந்து ஒரு முழநீளத் துறவுகோல் தொங்கியது. சிறிதான புன்னகை விட்டுச் சிநேக பாவத்தில் இருந்தாள்.

புன்னகையுடன் எழுந்தான் —ஏப்பா! என்ன கிராக்கி பண்ணாறுங்க! வேலிக்குள்ளே விடமாட்டேங்காறுங்களே!

> **ஒரு திருத்தம்**
>
> இவ்விதழில் "கல்லூரியில் குயில்" என்ற பகுதியில் பரிசு பெற்ற மாணவியின் பெயர் தவறாக அச்சாகியுள்ளது. அவர் பெயர் பிரவீணா; கல்பனா அல்ல. தவறு நேர்ந்ததற்கு வருந்துகிறோம். —ஆர்.

—நிறுத்திட்டாங்களா? நினைச்சேன்! இப்ப என் கூட வாருங்க!

அவளைத் தொடர்ந்தான்.

அவள் பாதங்கள் வெள்ளியாகத் தெரிய, அவள் மிதித்த இடங்கள் எல்லாம் கவிதைகள் விழுந்தன.

காற்றில் மிருதுவான தைலச் சக்கை மிதந்து அவன் சுவாசத்தில் கலந்தது.

இடுப்பு மெல்லிய தண்டு போல் இறங்க, அந்தக் கடைசி 36 ஒரு பூ ஜாடியாக அதை ஏற்றுக் கொண்டது.

மேலே தூக்கில் சோளி கஷ்டப்பட்டு இணைந்திருக்க, அதன்மீது கனமான முன் புறங்கள் ஏற்படுத்திய மெல்லிசு சுருக்கங்கள்.

நடக்கவில்லை, நீந்தினான்.

ஒரு மேடு ஏறி இறங்கும் இடத்தில் காவல்காரன் கோப மீசையுடன் இருந்தான்.

—எங்க சொந்தக்காரர்! என்று பெண் சொல்ல, அவள் பேச்சைக் கேட்கும் சுகத்தில் அவன் பொக்கை ஒரு பூக்கேயாக மாறியது.

—இதோ!

அந்தக் காட்சி அவன் மூச்சை எடுத்தது: கண்கள் ஒரு பெரிய ஆகாய விரிப்பு.

கீழ்நோக்கிக் கிடுகிடு பள்ளம். அதன் அடிவாரத்திலிருந்து வெள்ளைச் சிரிப்பு கொட்டிய கடல்! ஒரு ஹெலிகாப்டரிலிருந்து பார்ப்பது போல, நெடுந் தூரங்களைக் காட்டியது கடல். மேற்கே ஒரு கிராமப்புற நதி வந்து சேர, சேரும் இடம் கருநீல உப்பங்கழி! அதன் நடுவில் ஒரு இஞ்ச் படகை ஒரு இஞ்ச் மனிதன் ஓட்டிக் கொண்டிருந்தான்.

இறக்கத்தில் ஒரு பாசி மூடிய கோவில்! மேற்புறமும், இடப்புறமும் மதில்கள் நின்று கொண்டிருக்க, மற்ற இருபக்க மதில்கள் நீண்ட சரிவில் உதிர்ந்து கிடந்தன.

பயங்கரமான காட்சி;

—வாங்க!

இறக்கத்தில் கவலைத்துடன் இறங்கினார்கள். கோவில் இருந்த இடம் சின்ன சமவெளி.

உள்ளே அவள் போகு முன், —இதோ, இதிலே போனால் எலும்பு கிடைச்ச இடம் வரும் என்றாள்.

அவன் ஆவல் உச்சத்துக்கு ஓடியது.

—நான் போய் முதல்லே பார்த்துட்டு வரேன்,

என்று சொல்லி, அவள் பதிலுக்குக் கூடத் தாமதிக்காமல் அந்த ஒற்றையடித் தடம் எடுத்து, ஆள் உயர செடிகளிடையே புகுந்து, வெகு தூரம் நடக்க,

கடைசியில் 'பாதுகாக்கப்பட்ட இடம்' என்று அறைந்த போர்ட்.


அதைத் தாண்டவும் புதிதாகப் புண்ணாக்கப்பட்ட பூமி.


தொக் தொக் என்று அதில் ஏதோ சத்தங்கள்.

செடிகளை விலக்கிக் கொண்டு பார்க்க, ஒரு மீசைக்காரன், மிக அவசரமாக அங்கே தோண்டிக் கொண்டிருந்தான்.

மல்லிக் அவன் கண்ணில் பட்டதும் அவசரமுடன் வேலை நிறுத்திய அவன், —யார்ரு நீ? என்று கேட்டு அவனை நோக்கி விறுவிறுப்பாக வந்தான். ஒரு ஆத்திரமான வேகம்.

(தொடரும்)





பாகிஸ்தான் கிரிக்கெட் ஆல்பம்








1. சேப்பாக்கத்தில் 1951-52ல் நடைபெற்ற டெஸ்ட். 2. பாகிஸ்தான்—இந்தியா ஆடப்போகும் ஸ்டேடியம். 3. 1951-52ல் பாகிஸ்தான் காப்டன் கர்தார். 4. கர்தாரும் லாலா அமர்நாத்தும். 5. 1978ல் பாகிஸ்தான் காப்டன் முஷ்டாக். 6. 1960-61ல் பாஸல் முகம்மது தலைமையில் வந்த குழு.





21

மறுபடியும் பகல்வேளை பஞ்சரத்தினத்தை வந்து கவனித்த தணிகைவேலன் நம்பிக்கை தெரிவிக்கவில்லை.

''இன்னும் இரண்டு நாட்களுக்குப் பிறகு தான் எதுவும் சொல்ல முடியும். கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அதுதான் முக்கியம்.'' வழக்கமான பல்லவியைப் பாடி விட்டுப் போய்விட்டார்.

மகன் வந்துவிட்டான் என்ற மகிழ்ச்சியில் முதல் நாள் இரவு படுக்கப் போகு முன் தன் மருமகளிடம் பஞ்சரத்தினம் சொல்லியிருந்தாள்:

''நாளைக்குப் பசனுக்குக் கொஞ்சம் காரசாரமாக மோர்க் குழம்பு வச்சுடு. ராஜாவுக்கு ரொம்பப் பிடிக்கும். எனக்கும் சாப்பிடணும் போல இருக்கு.''

அடுப்பருகில் வந்து நின்ற அகல்யாவின் விழிகளில் நீர் பெருக்கெடுத்துக் கன்னங்களில் உருண்டது.

சிங்காரம் தோட்டத்திலிருந்து ஒரு குலை மொந்தன் காய்களைப் பறித்துக் கொண்டு வந்திருந்தான். அவைகளை ஒரு பக்கம் வைத்துவிட்டுத் தலையைச் சொறிந்துகொண்டு நின்றான்.

''பூரணியைக் கூப்பிட்டுக் காய் கறிகளை நறுக்கித் தரச் சொல்றேன். ஐயாவுக்கு மோர்க் குழம்பிலே வாழைக்காய்போட்டால் தானே பிடிக்கும்'' என்றான்.

கன்னத்திலே கோடிட்ட கண்ணீரை அவள் சட்டென்று துடைத்துக் கொள்வதைக் கவனித்து விட்டான். அவனுக்கு மிக்க வேதனையாக இருந்தது.

''சந்தோஷமாக இருக்க வேண்டிய சமயத்திலே பெரியம்மாவுக்கு உடம்புக்கு வந்துருச்சேன்னு நீங்க கலங்கிட்டீங்க. கவலைப்படாதீங்க. நம்ம முத்துமாரி கைவிடமாட்டா.... ஆறுதலாகச் சொல்லிவிட்டு, மீண்டும் தலையைச் சொறிந்து கொண்டு சமையலறை வாயிற்படியருகே பழியாக நின்றான்.


மௌனமாக அடுப்புக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள் அகல்யா. சிறிது நேரமாயிற்று. வாயிற் படியில் இன்னமும் நிழலாடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

''நம்ப ஐயா என்னை மறக்காம, நான் கேட்டதை வாங்கிட்டு வந்திருக்கார். காலையிலே அத்தனை அமளி துமளி நடுவிலும் எடுத்துக் கொடுத்தார். வேலையாள் கிட்டே அவருக்கு ரொம்பப் பிரியம். குழந்தை மனசு அவருக்கு.... தாராளமான கை... அவர் குணம் ஒண்ணுக்கே அவங்க தாயாரை நம்ப ஆத்தா காப்பாத்திக் கொடுக்கணும்னு நான் ரொம்ப வேண்டிக்கிறேன்...''

அவன் குரல் கரகரத்தது. இடுப்பு வேட்டி மடிப்பிலே புகையிலை ஓலைப் பைக்குள் அடக்கமாகி யிருந்த ரேடியோப் பெட்டியை எடுத்துத் தன் சின்ன யஜமானிக்கு முன் நீட்டினான்.

பூக்குழி

லக்ஷ்மி



புகையிலை மணத்துடன் தன் உள்ளங்கையில் அடங்கிப்போன அந்தச் சிறு ரேடியோவைத் திரும்பிப் பார்த்தாள் அகல்யா. அவளது கை நடுங்கியது. பின் பக்கத்திலே பெட்டி மீது ஒட்டப்பட்டிருந்த சிறு காகிதத் துண்டின் மீது ராஜ்குமார் தன் கையால் சிங்காரத்துக்கு என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தான். அந்தக் கையெழுத்தைக் கண்டதுமே அவள் நெஞ்சை உணர்வுகள் அடைத்துக் கொண்டன. கண்கள் கலங்கின. உடல் முழுவதும் உணர்ச்சி வசத்தில் ஆட ஏதோ மகா மந்திரத்தைப் பார்த்து விட்டவள்போல் மீண்டும் மீண்டும் அந்த எழுத்துக்களையே வெறித்துப் பார்த்தாள்.

''எப்பவோ நான் கேட்டது. ஞாபகத்திலே வெச்சிட்டு வாங்கிட்டு வந்திருக்கார். சட்டுனு எடுத்துக் கொடுத்துட்டார்.'' மெல்லச் சிரிக்க முயன்றான் சிங்காரம். பொங்கி வந்த வேதனையைச் சமாளித்துக்கொண்டாள் அகல்யா. அவள் மூளையில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. சட்டென்று கேட்டுவிட்டாள்.

''ஐயா உனக்கு இதைப் பரிசாக் கொடுத்தது பத்திச் சந்தோஷம். ஆனால் ஒன்று மறந்துட்டார். இதை வச்சுக்க உனக்குன்னு தனிப்பட ஒரு லைசென்ஸ் நீ எடுக்கணும். அதுக்கு அவர் தம் கைப்பட இந்த ரேடியோவைப் பரிசாகக் கொடுத்து விட்டதாக ஒரு கடுதாசி எழுதிக் கொடுக்கணும். அத்தோட பம்பாயிலே கங்க இலாகா கொடுத்த ஒரு லைசென்ஸ் இருக்கும். அதையும் கொடுக்கணும். போய் வாங்கிட்டு வந்து தபாலாபீசிலே அதனைக் காட்டு.... போ...'' என்று உத்தரவிட்டாள்.

பின்னால் காலடி ஓசை கேட்டதும் இருவரும் திகைப்புடன் திரும்பிப் பார்த்தனர்.

''சிங்காரத்தைக் கூப்பிட்டேன். காதில் விழலே போலிருக்கு. அதனால் நானே தேடிக்கொண்டு இங்கே வந்துட்டேன்.'' என்று சொல்லிக் கொண்டு அருகே வந்த காமேஷ் முறுவலித்தான்.

''சிங்காரம்—இந்தா பம்பாயில் கங்க இலாகா கொடுத்த லைசென்சும், என் கைப்பட இந்தக் கிராமத்துத் தபால் அதிகாரிக்கு எழுதிய கடிதமும் இதிலே இருக்கு. எடுத்துக்கோ....'' தன் சட்டைப் பையினின்று ஒரு கடித உறையை எடுத்து அசட்டையாக அவனிடம் கொடுத்தான்.

''அகல்யா! சூடாகக் காப்பியும் சாப்பிட ஏதாச்சும் சீக்கிரம் தயார் பண்ணு—பசிக்கிறது.... எனக்குப் பசி தாங்காதே தெரியாதா உனக்கு?'' அதட்டலாகக் கேட்ட வண்ணம் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

மேடை மீது எரிந்த அடுப்பைப் போல அவள் உடல் முழுதும் பற்றி எரிந்தது... வாய்க்குள்ளே வந்துவிடும்போல் பதற்றமாக இதயம் துடித்தது. ஆனாலும் மிடுக்காக அகல்யா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''சிங்காரத்திடம் கொடுத்தனுப்பறேன்''— மொட்டையாகப் பதில் அளித்துவிட்டு அடுப்பின் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

''சிங்காரம்! அந்தக் காகிதங்களை அம்மாவுக்குக் காட்டு. அவங்களே பார்த்து யோசனை சொல்வாங்க. பிறகு மாடிக்கு வா. டாக்டர் தணிகை வேலனுக்கு வாங்கிய புகை பிடிக்கும் குழாய், பார்வதி அம்மா பேரனுக்கு வாங்கின பொம்மைகள் என் மாமனுக்கு வாங்கின ஷர்ட் எல்லாத்தையும் எடுத்து வெளியிலே வெச்சிருக்கேன். அதுகளைக் கொண்டு வந்து கீழ் அறையில் தயாராக வச்சுடு. அவங்க அவங்க சாமான்களை— அவங்க அவங்க வந்தபோது கொடுத்துடறேன்.'' சொல்லிவிட்டு வெற்றிப் புன்முறுவலுடன் மாடிப் பக்கம் விரைந்தான் காமேஷ்.

சிங்காரம் கொடுத்த உறையைப் பிரித்தவளுக்குத் திக்கென்று இருந்தது. ராஜ்குமார் தன் கையால் அந்தக் கிராமத்துத் தபால் அதிகாரிக்கு எழுதியுள்ள கடிதம் அது. சந்தேகமில்லை. எப்படி?.... அவள் வியப்பும் வேதனையுமாக அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது மாடியறைக்குள் புகுந்த

காமேஷ் திறந்து கிடந்த பெட்டியைக் காலால் எட்டி உதைத்து மூடினான். என்ன முட்டாள் தனம்? புறப்படு முன் பெட்டியைக் கவிழ்த்துப் பொருள்களைச் சரியாக ஆராய்ந்திருக்க வேண்டும். நல்ல வேலை. சற்று முன்தான் பார்த்தான். ராஜ்குமார் எல்லாக் காரியங்களையும் ஒழுங்காகச் சீராகச் செய்து வைக்கும் குணமுடையவனாக இருந்தது நல்லதாகப் போயிற்று.

பெட்டியின் அடியில் கிடந்த அந்த உறையில் சுங்க இலாகா கொடுத்த ரேடியோ லைசென்சும் தபால் அதிகாரிக்குத் தயாராக எழுதி வைத்திருந்த கடிதமும் கிடைத்தன. யார் யாருக்கு என்ன பரிசுகள் வழங்க வேண்டும் என்று ஒரு ஜாபிதாவை வேறு டைப் அடித்து வைத்திருந்தான். அது இப்போது எத்தனை உதவியாக இருக்கிறது?

அந்தச் சிறு ரேடியோ மீது சிங்காரத்தின் பெயர் கொண்ட துண்டுக் கடிதம் ஒட்டப்பட்டிருந்ததால் சட்டென்று புரிந்து கொண்டு கொடுத்து விட்டான் — இந்த ஜாபிதாவைப் பார்க்காது, டாக்டருக்குக் கொடுக்க வேண்டிய புகை பிடிக்கும் குழாயை அகல்யா அப்பாவுக்குக் கொடுத்து அவரைக் கலவரப் படுத்தி விட்டான். சே! சே! இனி இதுமாதிரி பிசகுகள் நடக்கவே கூடாது. மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.' சாமான்களை அள்ளிப் பெட்டிக்குள் போட்டு மூடி அவன் பூட்டி முடிப்பதற்குள் சிங்காரம் மூச்சிரைக்க வந்து நின்றான்.

''அம்மா கூட்டிவரச் சொன்னாங்க — உங்களைப் பார்க்கப் பஞ்சாயத்தி லிருந்து ஆட்கள் வந்திருக்காங்க....''

நெஞ்சம் துணுக்குற்றுத் திடுக்கிட்டுப் போனான்.

பஞ்சாயத்து ஆட்களுக்கு அவனிடம் என்ன வேலை?

அவன் பார்த்திராத கிராமத்து மனிதர்கள் இரண்டு பேர் ஒருவர் கையில் கத்தையாக ஒரு கட்டுக் காகிதம். காதில் பேனாவைச் சொருகிக்கொண்டு மற்றொருவர். வெள்ளை வேட்டி — ஷர்ட் ஆசாமிகள். முன்னறையில் அவனைக் கண்டதும் பற்களை இளித்தனர்.

''உட்காருங்கள்''-உபசரித்தான் காமேஷ். இன்னமும் நெஞ்சிலே கவலைதான் அவனுக்கு.

''நான் ஹோட்டலில் நுழையும்போது 140 ரன்கள் எடுத்திருந்த இந்திய அணி சாப்பிட்டுவிட்டு வரும்போது 400 ரன்களை எடுத்தது எவ்வளவு பெரிய சாதனை தெரியுமா?''

''அடப் பாவி! அதைவிடப் பெரிய சாதனை நீ எவ்வளவு நேரம் தின்னு தொலைச்சிருக்கே!''

என். கே. வெங்கடராமன்



''போன வருஷத்திலேருந்து இந்த வீட்டு வரி உசந்து போச்சு. அதைச் சின்னம்மா ஏற்க மறுக்கிறாங்க. வீடு உங்க பேரிலே இருக்கிறதுனாலே நீங்களே வரிக் குறைப்புக்காக ஒருமனு எழுதிக் கொடுத்துட்டா நல்லது.'' வந்தவர்களில் சற்று மெலிதாக இருந்தவர் சொன்னார்.

''சிங்காரம், காகிதம் பேனா எல்லாத்தையும் கொண்டு வந்து மேஜை மேலே வை.

அகல்யா உள்ளிருந்தபடியே உத்தரவிட்டதைக் கேட்டு அவன் அதிர்ந்து போனான்.

''வீட்டு வரி உத்தியோகஸ்தருக்குன்னு ஆரம்பிக்கத்தானே எழுதணும்? இதோ வந்துட்டேன்.'' சொல்லிவிட்டு மாடிக்கு வேகமாக ஓடினான் காமேஷ். அங்கே அந்த அலமாரி மேல் தட்டிலே ஒரு டைப் யந்திரத்தைப் பார்த்ததாக ஞாபகம். அது அங்கேயேதான் இருந்தது. எடுத்து மேஜை மீது வைத்துக் கொண்டு விரைவாக மனுவை டைப் அடித்தான். முடிவில் கையெழுத்துப் போடும் போது காமேஸ்வரன் என்று போட்டுவிட்டான். அவனுக்கே தாங்க முடியாத எரிச்சல். வேகமாகக் கிழித்துச் சுருட்டி அதை அறையின் மூலையில் எறிந்துவிட்டு மறுபடியும் டைப் அடிக்கத் தொடங்கினான். இந்த முறை ஒழுங்காக ராஜ்குமார் என்று கையெழுத்திட்டு எடுத்துக் கொண்டு கீழே வந்தான்.

''தமிழிலே எழுதியிருக்கலாம். இங்கிலீஷில் டைப் அடிச்சிருக்கீங்க... பரவாயில்லை.'' வாங்கிக்கொண்டார் அந்த ஒல்லி ஆசாமி.

அகல்யா தயாரித்துக் கொடுத்த காப்பி பலகாரத் தட்டை எடுத்துக் கொண்டு சிங்காரம் மேலே செல்வதைக் கண்டான். வேறு வழியின்றித் தனக்குள்ளே கோபத்துடன் எதையோ முணு முணுத்துக் கொண்டு காமேஷ் அவளைப் பின்பற்றினான்.

அன்று மாலை வைத்தியர் வந்து போன பின்பு — லேசாகக் கண்களைத் திறந்து புரண்டு படுத்த மாமியாரை வற்புறுத்திக் கொஞ்சம் கஞ்சியைப் புகட்டினாள் அகல்யா. பின்னர் வைத்தியர் கொடுத்துப் போன தூக்க மாத்திரைகளையும் மற்ற மருந்துகளையும் கொடுத்துச் சாப்பிடச் செய்தாள். சிறிது நேரத்தில் இருட்டத் தொடங்கி விட்டது. மருந்துகளின் மயக்கத்தில் பஞ்சரத்தினம் தன் நினைவின்றி மீண்டும் ஆழ்ந்து உறங்கிப் போனாள். மெல்லக் கதவைச் சாத்திவிட்டு அகல்யா வெளியே வந்தாள். ஹாலில் மட்டுமே பளிச்சென்று குழல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. இரவு யஜமான் விரதமாகச் சாப்பிட வேண்டிய பால் பழம் கொண்ட தட்டை மாடியில் அவனது அறை மேஜை மீது வைத்துவிட்டுச் சிங்காரம் தோட்டத்திலிருந்த தன் வீட்டுக்குப் போய்விட்டான். பின் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்த அகல்யாவின் காதுகளில் மாடிப் படியில் அவன் இறங்கி வரும் மெல்லிய ஓசை கேட்டு விட்டது. திடீரென்று அவளுக்குத் தாங்க முடியாததொரு பதற்றம்.

''அம்மா தூங்கறாங்களா? சிங்காரமும் பூரணியும் போய்விட்டாங்க இல்லையா?'' சிரித்தபடி கேட்டுக் கொண்டு கண்களால்



"64 நாள் உண்ணாவிரதம் தொடங்குவதற்கு முன் கடைசியாக என்ன சாப்பிட்டீர்கள்?"
"என் மாமியார் செய்த சேமியாப் பொங்கல் சாப்பிட்டேன். பசியே இல்லை."

அவனை விழுங்கியபடியே கீழே இறங்கி வந்தான் காமேஷ்.

அகல்யாவின் உடல் பயத்தில் சிலிர்த்தது. அது சமயம் அங்கே அவர்களைத் தவிர அந்த நேரத்தில் யாரும் இல்லை என்ற உண்மை அவளுக்குத் தெரியும். பஞ்சரத்தினம் மயக்க உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறாள். என்ன பேசினாலும் யாரும் கேட்கப் போவதில்லை என்ற துணிவு அவனுக்கு.

மிகவும் சுவாதீனமாக அருகில் வந்தான் காமேஷ்.

"அம்மாவுக்கு உடம்புக்கு சுகமில்லாததால் நான் பூக்குழியில் இறங்கப் போவதில்லை. நீயும் இறங்கத் தேவையில்லை. இந்த விரதம் நம் இருவருக்கும் இனித் தேவையில்லை. இப்படி கிட்டவா... வந்ததிலிருந்து நான் எப்படித் துடிச்சுக்கிட்டிருக்கேன் தெரியுமா?" — அவளைத் தொட்டுத் தன் அருகே இழுத்துக்கொள்ளக் கையை நீட்டியபடி நெருங்கினான்.

துள்ளிக்கொண்டு அவள் ஓரடி நகர்ந்து பின்னால் நின்று கொண்டாள். நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது. நெருப்பை அள்ளித் தலையிலே கொட்டி விட்டது போன்றதொரு பயங்கர உணர்வில் தவித்துப் போனாள்.

"ஏன் இப்படி வித்தியாசமா நடந்துக்கிறே? இங்கே வா..." என்று அதட்டியபடி அருகில் மீண்டும் அவன் நெருங்கியபோது திடீரென்று மின் விளக்குகள் அனைத்தும் அணைந்து போயின. எங்கும் ஒரே இருள்.

"இங்கேதான் இருக்கேன் — இப்படி இந்தப் பக்கம் வா..." மறுபடியும் அதட்டியபடி கையை நீட்டி எட்டிப் பிடித்து இழுத்தான். அவளது முந்தானை போன்று ஏதோ தென்படவே பலம் கொண்ட மட்டும் இழுத்து விட்டான். அந்த வேகத்தில் அவன் தக்கென்று அருகில் இருந்த சுவரில் போய் மோதிக் கொண்டான். தடவிப் பார்த்தபோது கையில் அவன் பிடித்துக் கொண்டிருந்தது அவள் முழங்கையில் வேலை செய்யும் போது கை துடைக்கத் தயாராகப் போட்டு வைத்துக் கொண்டிருந்த துணித்துண்டு.

அவனை ஏமாற்றிவிட்டு இருட்டில் [அவள் எங்கேயோ நழுவி விட்டாளே!...

அதிகம் பழக்கமில்லாத வீடு. இருட்டில் நிதானம் தெரியாது தடவிக் கொண்டே முன்னால் நடந்தபோது அங்கு கிடந்த நாற்காலி ஒன்றில் கால் இடறி... கட்டை விரலில் வேதனை பொறுக்க முடியாது "அகல்யா! எங்கே இருக்கே?" ஆத்திரத்துடன் கத்தினான்.

துயரத்தையும் பொங்கி வந்த கோபத்தையும் அடக்க மாட்டாது அகல்யா ஹாலின் மறு கோடியிலிருந்த பூஜை அறைப் பக்கம் வேகமாக நகர்ந்தாள். கதவைத் தள்ளித் திறந்தாள். இன்னமும் பராசக்தியின் படத்தின் எதிரே மேடை மீது அவள் பிறந்த வீட்டுச் சீதனமான அந்தப் பெரிய குத்து விளக்கு முத்துச் சுடராக எரிந்துகொண்டிருந்தது.

சட்டென்று அதைக் கையில் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தாள். காலையில் ஸ்நானம் செய்துவிட்டு அவசரமாக முடிச்சிட்டுக் கொண்டிருந்த கூந்தல் அவிழ்ந்து தானாக அவள் முதுகு முழுவதும் பரவலாக விழுந்தது.

குத்துவிளக்கைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு [அதன் ஒளியில் தன் முன்னே அவிழ்ந்த கூந்தலும் சினத்தைக் கக்கிய கண்களுமாக ஆவேசம் வந்தவள் போல் நின்ற அவளைக் கண்ட காமேஷ் அரண்டு விட்டான்.

"இப்போ சொல்! யார் நீ!" உரத்த குரலில் உக்கிரமாக அகல்யா அவனை அதட்டினாள்.

கோவிலில் அர்ச்சகர் தீபாராதனைத் தட்டைச் சுழற்றியபோது கர்ப்பக் கிரகத்தில் ஒரு கணம் கண்டாளே உக்கிரமான கண்களுடைய ஒருத்தியை — அவளே தன் எதிரில் வந்து கையில் குத்து விளக்குடன் நிற்பது போன்றதொரு பிரமை. அவனையும் மீறி எழுந்த அச்சத்திலே அவன் உடல் நடுநடுங்கியது. நெஞ்சு பதைத்தது.

"என்ன அசட்டுக் கேள்வி? நான்தான் ராஜ்குமார்! என்ன அப்படிப் பார்க்கிறே?" குழறினான் காமேஷ்.

"நீ என் கணவன் இல்லை. உண்மையைச் சொல். என் புருஷன் எங்கே? நீ யார்? யார் நீ? யார் நீ?" ஓங்கிய குரலில் வெறி பிடித்தவள் போல் அகல்யா வீறிட்டுக் கத்தினாள்.


"அம்மா! கூப்பிட்டீங்களா?" சிங்காரம் கதவைத் தட்டினான். பளிச்சென்று மின் விளக்குகள் எரிந்தன. (தொடரும்)

"வண்ணங்கள்"

மனநோய் கொண்டவர்கள் ஆரஞ்சு வண்ணம் கொண்ட அறைகளில் வசித்தால் நல்லது.
குழந்தைகளை எளிதில் கவரும் வண்ணம் சிவப்பு.
உலகில் ஆயிரக் கணக்கான வெவ்வேறு வண்ணங்கள் இருந்தாலும் 267 வண்ணங்களுக்கு மட்டும் பெயரிட்டிருக்கிறார்கள்.
நெடுந்தூரத்துக்குத் தெரியும் வண்ணம் மஞ்சள்.

-பி. நாராயணன்





நீங்காத நினைவு

மணிகளின் தனிப்பண்பு!

மீ.ப.சோமு

இதயம் தோய்ந்து தமிழ் இலக்கியத்தை அனுபவித்து அனுபவித்து அந்தக் களிப்பிலேயே என்றும் மாறாத மிடுக்கோடு வாழ்ந்தவர் வெள்ளகால் ராவ் சாகிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்! வயதில் முதுமை; ஆனால் பேச்சு, நடை, உற்சாகம் எல்லாம் இருபது வயது இளைஞராகவே இருக்கும்!

வெள்ளகால் முதலியார் இயற்றியுள்ள காவிய நூல்களில் "அகலிகை வெண்பா" என்பது புகழ்பெற்ற ஒரு கவிதை நூல். இந்திரனுடைய காதலும், அகலிகை பெற்ற சாபமும், அவனுடைய மனநிலையும் பற்றி வெண்பாக்களிலே கூறுகிற காவியம் இது. இந்த நூலை மகா மகோபாத்யாய டாக்டர் சுவாமிநாதய்யர் அவர்கள் "ரசபுஞ்சம்" (சுவைத் திரட்டு) என்று பாராட்டியுள்ளார்கள்!

இந்த முதுபெரும் புலவர் நெல்லை மாவட்டத்தில் பெரிய செல்வந்தர் மரபிலே தோன்றிய பெரும் பதவி வகித்து ஒரு வள்ளலாகவும் விளங்கியவர். இவரது எண்பதாம் ஆண்டு நிறைவு விழா மகாமகோபாத்யாய சுவாமிநாதய்யர் அவர்களின் தலைமையிலேயே 1–8–1937 இல் திருநெல்வேலியில் கொண்டாடப்பட்டது. அந்த விழாவில் ஒரு ரசமான நிகழ்ச்சி நடந்தது.

விழாவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே சென்னையிலிருந்தும், மற்றும் வெளியூர்களிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் நெல்லைக்கு வந்து சேர்ந்தார்கள். வாழ்த்துக் கடிதங்களும், வாழ்த்துப் பாக்களும் நூற்றுக் கணக்கில் வந்து குவிந்து கொண்டிருந்தன. இந்த விழாவுக்கு முனைந்து நின்று எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக்கொண்டவர் என் நண்பர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களும், தமிழ்ப் பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்களும்!

விழாவுக்கு வந்திருந்த வாழ்த்துப் பாடல்களையெல்லாம் தனியே எடுத்து ஒரு கோப்பில் தொண்டைமான் அடுக்கிக் கொண்டிருந்தார். கவுண்டர் அவருக்கு உதவி செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பாடல், ஒரு வெண்பா, யார் எழுதியது என்று பெயர் இல்லாமல் தனியாக அந்தக் குவியலுக்குள் அகப்பட்டது! அந்தப் பாடலோடு வந்த கடிதம் எங்கோ தவறி விட்டது!

பாட்டு எப்படி இருக்கிறது என்பது பற்றியும், அதன் ஆசிரியர் யார் என்று தெரியவில்லையே என்பது பற்றியும் நண்பர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தபோது, டி. கே. சி. வந்தார். வெண்பாவைப் பார்த்தார்.

"இது யார் எழுதியது என்று குறிப்பிடவில்லை. உடன் வந்த கடிதத்தைக் காணோம்" என்றார் கவுண்டர்.

"அப்படியா? யார் எழுதியது என்று குறிப்பிடவில்லையா?" என்று சொல்லியவாறு ரசிகமணி அந்த வெண்பாவை மீண்டும் ஒருமுறை பாடிப் பார்த்தார்.

"சந்தேகமென்ன? இதை எழுதியவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளைதான்!" என்றார் டி. கே. சி.

தொண்டைமானும் கவுண்டரும் ஒருவரை யொருவர் பார்த்தார்கள்.

"இதை அச்சிட்டு விழாவில் எல்லோருக்கும் வழங்கிவிடுங்கள். கீழே தேசிகவிநாயகம் பிள்ளை என்று போட்டுவிடுங்கள்!" என்றார் ரசிகமணி தீர்மானமாக!

அந்தப் பாடலுக்குள் அதை எழுதிய கவிஞரின் முகமே தெரிந்தது டி.கே.சி.க்கு! ஆனாலும் நண்பர்களுக்கு அந்த உறுதி இல்லை. ரசிகமணியோடு வாதாடவும் முடியாது! எனவே அவர் சொன்னபடியே பாடலை அச்சிட்டுவிட்டுப் புத்தேரிக்குத் தகவல் சொல்லி அனுப்பினார்கள் நண்பர்கள்.

விழா நாளன்று காலையில் புத்தேரியிலிருந்து செய்தி வந்தது. அந்தப் பாடலை எழுதி அனுப்பியவர் கவிமணிதான் என்று!

நண்பர்களுக்கு ஒரே உற்சாகம்! விழாவின் தொடக்கத்தில் நண்பர் "தீபன்" தமது இனிய குரலில் கலியாணி ராகத்தில் அந்த வெண்பாவைப் பாடினார்:

> எண்பதாண் டான
> இளைஞனே! இன்றமிழின்
> பண்பெலாம் காட்டுதமிழ்ப்
> பாவலனே - நண்பனே
> வெள்ளகால்ச் செல்வனே
> வேள்சுப் பிரமணிய
> வள்ளலே வாழ்க
> மகிழ்ந்து!

இப்பாடலின் ஆரம்பமே, 'எண்பதாண்டான இளைஞனே' என்ற தொடக்கமே சபையினரை ஒரு உலுப்பு உலுப்பி விட்டது!

இந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சில நாட்கள் கழித்துக் கல்கியவர்களிடம் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் கூறினார்:

"தம்பி, இந்தப் பாடலை எழுதியிருந்த பேப்பரில் கவிமணியின் கையெழுத்து இருந்திருந்தால், இரண்டு பெரிய உண்மைகள் நமக்குத் தெரியாமலே போயிருக்கும்!" என்றார் கல்கி.

"எதைச் சொல்லுகிறீர்கள்?"

"கவிமணிக்கு என்று ஒரு தனிப் பண்பு இருக்கிறது என்பது முதலாவது உண்மை. இந்தத் தனிப் பண்பைக் கண்டு கொள்ளக் கூடிய தனிப் பண்பு டி.கே.சி.க்கு இருக்கிறது என்பது இரண்டாவது உண்மை!" என்று ஒரு போடு போட்டார் கல்கி!


ஒற்றன் 4X-1   சித்திரக்கதை: புஜ்ஜாய்   ②



துணுக்... துணுக்...

திருப்புகழ் மணி ஒரு கூட்டத்தில் தலைமை தாங்கினார். மாலை போட்டவுடன் கழற்றி விட்டார். முதலில் பேசிய ஒரு புலவரோ போட்ட மாலையைக் கழற்றாமலே பேசினார்: "நம்மிடம் மதிப்பு வைத்து மாலையைப் போடுகிறார்கள். அதைக் கழுத்தில் போட்டுக் கொண்டிருப்பது தான் மரியாதை. உடனே கழற்றி வைத்து விட்டால் அந்த அன்பை உணர்ந்ததாகாது" என்றார். பின்னர், திருப்புகழ் மணி பேசினார்: "அன்பினால் ஒருவர் மற்றொருவரைப் புகழ்வதும் மரியாதை செய்வதும் வழக்கம். புகழும் போதோ, உபசாரம் செய்யும் போதோ சிறிதும் அடக்கமில்லாமல் அந்தப் புகழ் முழுவதற்கும் நாம் உரியவர்கள் என்று காட்டிக் கொள்ளலாமோ! நீங்கள் அதிகமாகப் புகழ்கிறீர்கள்; எனக்கு அவ்வளவு தகுதி இல்லை என்று சொன்னால் அவரை அவமதித்தது ஆகுமா? அது போல, அவர்கள் தம் அன்பைக் காட்ட அழகான மாலை போடுகிறார்கள். 'எனக்கு இது ஏற்றது தான்' என்று போட்டுக்கொண்டே இருந்தால் அகங்கார உணர்ச்சி; கழற்றி வைத்தால், 'இதைப் போட்டுக் கொள்ள எனக்குத்தகுதி இல்லை' என்ற அடக்க உணர்ச்சியைக் காட்டும்!"

-கி. வா ஜ. கட்டுரையிலிருந்து -'ஸ்ரீ சைதன்யன்'



புருஷன் என்ற சொல் பொதுவாக ஆண்மகனைக் குறிக்கும். ஆனால் நம் முன்னோர்கள் ஒரு பெண்ணுக்கு அவள் கணவனை மட்டுமே புருஷன் என்று குறிப்பிட்டார்கள். ஒரு பெண்ணுக்கு அவள் கணவன் மட்டுமே ஆண் மகனாகத் தெரிய வேண்டும்.

இதே போன்று, பெண் ஜாதி என்ற சொல் பொதுவாக பெண் இனத்தைக் குறிக்கும். ஆனால் ஒரு ஆண்மகனுக்கு அவன் மனைவியை மட்டுமே பெண் ஜாதி என்று குறிப்பிட்டார்கள். ஒரு ஆணுக்குத் தன் மனைவி மட்டுமே பெண் இனத்தைச்சேர்ந்தவளாகத்தெரியவேண்டும். (டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் கூறியது)

—D. மணிவண்ணன்.

லண்டனில், ஹைட் பார்க்கில் ஒருவர் கர்ஜித்துக் கொண்டிருந்தார்: "நாடு நன்றாயிருக்க ஒரே வழி, பாராளு மன்றத்தைக் கொளுத்த வேண்டும். பக்கிங்ஹாம் அரண்மனையைக் கொளுத்த வேண்டும்!" போலீஸ்காரர் சொன்னார்: "நிற்காதீர்கள். நகருங்கள். வண்டிப் போக்குவரத்துக்கு வழி விடுங்கள். பாராளுமன்றத்தைக் கொளுத்த வேண்டும் என்பவர்கள் வலது பக்கம் போங்கள். பக்கிங்ஹாம் அரண்மனையைக் கொளுத்த வேண்டும் என்பவர்கள் இடது பக்கம் போங்கள்." கூட்டம் சிரித்தபடி கலைந்தது. -பிரியா



கடல் ராணி

சாண்டில்யன்

அத்தியாயம் 24

பீஷ்ம வாக்கியம்

சிலவிலும் தாங்கள் கருத முடியாத கணக்கற்ற பவுன்களும் நகைகளும் வைரங்களும் கிட்டப் போகிறதென்ற குதூகலத்தால் தங்கள் கருத்தை மது அரக்கனுக்குப் பணயம் வைத்துவிட்ட காஸண்ட்ராவின் மாலுமிகளின் களியாட்டத்தால் அந்தப் பெரும் தளமே அமர்க்களப்பட்டதை ராணி புன்முறுவலுடன் நோக்கிக் கொண்டிருந்தாள். அந்த மாலுமிகள் எத்தனை துஷ்டர்களானாலும், கொடியவர்களானாலும், பணம் என்ற ஒரு பலவீனம் அவர்களைக் குழந்தையாக்கிவிடுகிறதென்ற உண்மையை அறிந்திருந்த காரணத்தால், இரு மாலுமிகள் தள்ளாடி வந்து தன் கன்னத்தில் முத்தமிட்டபோது சிறிதும் சினம் கொள்ளவில்லை, சிந்து துர்க்கத்தின் சித்தினி. ஒரு மாலுமியின் முரட்டு மீசை கன்னத்தில் உராவி அது நீண்டிருந்ததால் உதட்டிலும் பட்டபோது கூட அவள் நாற்காலியை விட்டு எழுந்திருக்காமலும், சிறிதும் தனது நிதானத்தை இழக்காமலும் அவர்களை லேசாகத் தள்ளினாள் சிறிது நேரத்துக்குப் பிறகு. அந்த இரு மாலுமிகளில் ஒருவன் தள்ளப்பட்டவுடன் சற்று அத்துமீறி அவள் கழுத்தில் கையைப் போட்டு வளைத்ததும் கடல் ராணி வேடிக்கையாகக் கையிலிருந்த மதுக் குப்பியை அவன் மண்டையில் உடைத்தாள். அதிலிருந்து கொட்டிய மதுவை நாக்கைத் துருத்தித் தடவிக் கொண்டே அவன் அகன்றான். மற்றொரு மாலுமி அத்தனை குடிவெறியிலும் தனது நண்பனுக்கு நடந்த உபசாரத்தைக் கவனித்து மேற்கொண்டு சேஷ்டைகள் எதிலும் ஈடுபடாமல் தானாகவே நகர்ந்தான் அப்புறம்.

அவன் நகர்ந்த சமயத்தில் டெய்லர் மூன்றாம் முறையாக விஸ்கியைக் கடகடவென்று அருந்தி ''ப்ரக்ரென் ஆப் த கோஸ்ட், வீ மஸ்ட் நௌ டான்ஸ் (கடல் துறைத் தோழர்களே! நாம் இப்போது நடனமாட வேண்டும்)'' என்று அறிவிக்கவே மாலுமிகள் ஒருவரை யொருவர் கட்டிக் கொண்டு நானா வித கூச்சல்களை நடனகீதமாக எழுப்பிக் கொண்டு தளத்தில் வலம் வரத் துவங்கினார்கள். அப்பொழுது இங்லண்ட் ''ராணி! நீ ஏன் ஆடவில்லை? நடனம் உனக்குப் பிடிக்காதா? நீ எங்களில் ஒருத்தி யல்லவா?''என்றான் தள்ளாடி நின்று.

ராணி அவனை ஏறிட்டு நோக்கினாள். அவன் விழி குடியால் சிவந்திருந்தாலும் கால்கள் சிறிது தள்ளாடினாலும், அவன்

அதிகமாகச் சித்தத்தை இழக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள் ராணி. அதன் விளைவாகப் பக்கத்தில் நாச நாற்காலியில் அமர்ந்திருந்த அனந்தைப் பார்த்தாள். எட்ட நின்றிருந்த துலாஜியையும் பார்த்தாள். துலாஜி தனது மதுக் குப்பியிலிருந்து லேசாக மதுவை அருந்தியிருந்தான். ஆனால் முதன் முதலில் நின்றபடி திடமாகவே நின்றிருந்தான் எந்த நிலைக்கும் தயாராக. இருவரையும் பார்த்த ராணி மீண்டும் இங்க்லண்டை நோக்கி, "இங்க்லண்ட்! ஐ லைக் டு சூஸ் மை பார்ட்னர் மைஸெல்ஃப் (இங்க்லண்ட்! நடனமாட எனக்கு வேண்டிய ஜோடியை நானே தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்)" என்று கூறினாள்.


"எனக்கென்ன?" என்று கேட்டான் இங்க்லண்ட்.

"நீ அதிகமாகக் குடித்திருக்கிறாய்" என்றாள் ராணி.

"டெய்லர்?"

"என்னைக் கேட்கவில்லை."

"துலாஜி?"



"நடனம் அவருக்கு எவ்வளவு தெரியும் என்பது எனக்குத்தெரியாது."

இதைக் கேட்ட இங்க்லண்ட் குடிநகை நகைத்தான் பெரிதாக. "ஐ நோ, ஐ டு நோ, யூ வாண்ட் டு டான்ஸ் வித் யுவர் லவர் (தெரியும் எனக்கு. நன்றாகத் தெரியும். நீ உன் காதலனுடன் நடனமாட விரும்புகிறாய்.)" என்றான் இங்க்லண்ட் நகைப்பினிடையே.

ஐ ஹாவ் நோ லவர் (எனக்குக் காதலன் யாருமில்லை.)" என்றாள் ராணி சிறிது கோபத்துடன்.

"ஹூ'ஸ் தென் ஈஸ் அனந்த் (அப்படியானால் அனந்த் யார்?)" என்று வினவினான் இங்க்லண்ட் ஏதோ பெரிய நகைச் சுவையைச் சிருஷ்டித்ததாக நினைத்துப் பெரிதாகச் சிரித்தான்.

ராணி நகைக்கவில்லை. புருவத்தைக் அசைக்கவில்லை. "அனந்த்? அவரும் உங்களைப் போல் ஒரு கொள்ளைக்காரர்" என்று சர்வ சாதாரணமாகக் கூறினாள்.

அந்த உரையாடல் மேலும் தொடர்ந்திருக்கும். அப்படித் தொடராமல் அதைத் தடுத்தான் டெய்லர். விஸ்கி போதை தலைக்கு ஏறி அவனைப் பைத்தியமாக அடித்திருந்ததால், துலாஜியால் சுடப்பட்டுக் காலடியில் விழுந்திருந்த இரு பறவைகளையும் கழுத்தில் பற்றித் தூக்கிக் கையில் பிடித்துக் கொண்டு, "லுக் ஹியர் ஐ வாண்ட் டு பேத் மை ப்ரண்ட்ஸ் (இங்கு பாருங்கள் என் நண்பர்களைக் குளிப்பாட்டப் போகிறேன்)" என்று கூறி இன்னொரு கையிலிருந்த குப்பியிலிருந்த மதுவை அந்தப் பறவைகளின் தலைகளில் அபிஷேகம் செய்தான். இரண்டுக்கும் உயிரில்லாததால் அவை அந்த அபிஷேகத்தை அலட்சியம் செய்தாலும், அவற்றிலிருந்து பிரவகித்து உறைந்துவிட்ட குருதி பட்டை பட்டையாக மதுவின் சிவப்பு நிறத்துடன் சேர்ந்து கீழிறங்கி, பறவைகள் இன்னும் சாகவில்லை என்ற பிரமையைச் சிருஷ்டித்தன.

அந்த வேடிக்கையைக் கவனித்த ராணி சிரித்தாள் மீண்டும். அந்தச் சிரிப்பைக் கேட்ட டெய்லர், "ராணி! நீயும் அழகான பறவைதானே? உன்னையும் குளிப்பாட்டட்டுமா?" என்று வினவிக் கொண்டு குப்பியையும் பறவைகளையும் தூக்கிக் கொண்டு அவள் அருகில் வந்தான். அவன் அதிகமாக நெருங்கியிருந்தால் அவள் ஆடையின் மது பட்டு ஆடை சிவந்திருக்கும். ஆனால் அதே சமயத்தில் அவனை இங்க்லண்ட் தடுத்தான். "நோபடி கோஸ் நியர் ராணி (யாரும் ராணியை அணுகக் கூடாது)" என்று.

ராணி மேற்கொண்டு அவ்விருவரையும் பேச இடம் கொடுக்கவில்லை. "நானும் ஆடப் போகிறேன்" என்று தெரிவித்தாள். அதைக் கேட்ட அனந்த் சரேலென எழுந்தான் நாற்காலியை விட்டு. "இல்லை உங்களுடன் இல்லை" என்றாள் ராணி.

"வேறு யாருடன்?" என்று வினவினான் அனந்த சிறிது கோபத்துடனும், ஏற்கனவே விளைந்த நிகழ்ச்சிகளால் குழப்பத்துடனும்.

துலாஜி தூரத்திலிருந்தே கேட்டான் "என்னுடனா?" என்று.


அதற்கும் "இல்லை" என்று பதிலளித்த ராணி தூரத்தில் பாய் மரத்தின் மீது சாய்ந்து நின்ற வில்வரிடம் சென்று, "வில்வர்



பெண்கள் ஆண்களை நாட்டியமாடக் கேட்பதில்லை. ஆனால் நான் விதிவிலக்காக இருக்கிறேன். என்னுடன் ஆட வருகிறாயா?'' என்று வினவினாள்.

அத்தனை கொள்ளைக்காரர்களில் அதிகமாகக் குடிக்காமல், கையிலிருந்த குப்பியிலிருந்த ரம்மைப் பாதி மட்டுமே அருந்தியிருந்த சில்வர், ''ராணி! எனக்கு இரண்டு கால்கள் இல்லையே, ஒன்றுதானே இருக்கிறது'' என்றான்.

''ஆனால் எனக்கு இரு கால்கள் இருக்கின்றன'' என்ற ராணி அவன் தோளிலிருந்த கிளியைத் தன் கையில் எடுத்துக்கொண்டு அவன் கையைத் தானே எடுத்துத் தனது இடையைச் சுற்றினாள். சில்வர் பெண்களிடம் மயங்காதவன். ஆகவே ராணியின் செய்கையில் ஏதோ சூது இருப்பதாக நினைத்துச் சொன்னான், ''ஐ ஆம் நாட் எ லேடீஸ் மான் மை டியர் (நான் பெண்களை விரும்புபவனல்ல)'' என்று.



''பொங்கல் கண்காட்சியில் என்னடா பார்த்தே?''
''ரைஸ் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், ரவா பொங்கல், சேமியா பொங்கல்....'' - சுதர்ஸன்

''பட் யூ ஆர் எ ஸெய்லர் அண்ட் எ கிரேட் பைரேட். பைரேட்ஸ் ஸெலிபரேட் அண்ட் டெய்லர் ஹாஸ் ஆர்டர்ட் இட் (ஆனால் நீ ஒரு மாலுமி. அதுவும் சிறந்த கடற் கொள்ளைக்காரன். கொள்ளைக்காரர்களுக்குக் கொண்டாட்டம் சகஜம். அதுவும் டெய்லர் உத்தரவிட்டிருக்கிறான்.)'' என்று ராணி விளக்கினாள்.

அதற்குமேல் ஆட்சேபிக்கவில்லை சில்வர். ராணி ஏதோ ஆழ்ந்த திட்டமிடுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டாலும் அதை வெளிக் காட்டாமல் அவளது இடையில் ஏற்கனவே இருந்த கையைச் சிறிதளவு இறுக்கி ஒற்றைக் காலாலும் ஒற்றை ஊன்றுகோலாலும் நடந்து ராணியைக் கொள்ளைக்காரர் மத்தியில் சுழற்றிச் சென்றான். அப்படிச் சுழன்றபோது ராணி சொன்னாள்: ''உன் கால் பாவும் முறை நன்றாக இருக்கிறது. தாளம் தவறவில்லை. லிங் யுவர் ஸால்'' என்றாள் மராட்டியையும் ஆங்கிலத்தையும் கலந்து.

சில்வர் பெருங் குரலில் ஆரம்பித்தான் தனது பழைய பாட்டை. புட்டியிலிருந்த மீதி ரம்மை உறிஞ்சிப் புட்டியை எறிந்துவிட்டு Fifteen men and the Dead men's chest,Yo ho and a bottle of rum என்ற பழைய பல்லவியைப் பெரிதாகப் பாடினான். அந்தப் பல்லவியில் ராணியும் கலந்து கொண்டாள். அவள் குயில் குரலும் சில்வரின் கரகரத்த ஆனால் கடுமை கலந்த ரம்மியமான குரலும் சேர்ந்து ஏதோ கடுமையான மந்திரஸ்தாயிக் கம்பியும், ஸாரணை அனுஸாரணை ஆகிய கம்பிகளும் கலந்து ஒலிப்பதைப் போல் கப்பல் தளத்தில் கேட்டது. இதை ஒத்து மற்ற மாலுமிகளும் பாடினார்கள், அதே பல்லவியை. அப்படிப் பாடிக்கொண்டே ராணியை நோக்கிக் குனிந்த சில்வர் ''ராணி! ஐ ஆம் நாட் எ ஃபூல் (நான் முட்டாளல்ல)'' என்றான் மெதுவாக.

''ஹூ ஸெட் யூ ஆர் (நீ முட்டாளென்று யார் சொன்னது?)'' என்று கேட்டாள் ராணி.

''யாரும் சொல்லவில்லை. ஆனால் லக்ஷக் கணக்கான பவுன்களையும் நகைகளையும் வைரங்களையும் நான் நம்பவில்லை. இந்தக் கொள்ளைக்காரர்களின் புத்தியைத் திசை திருப்ப நீ சொன்ன பொய் அது'' என்றான் சில்வர்.

ராணி பதில் சொல்லவில்லை. ''நீ யார் பக்கம்?'' என்று வினவினாள் மெதுவாக.

''உன் பக்கம்'' என்றான் சில்வர்.

''ஏன்?''

''இங்கலண்டையும் டெய்லரையும் நான் நம்பவில்லை.''

''யாரை நம்புகிறாய்?''

''உன்னையும் அனந்தையும்.''

''ஏன்?''

''இந்த டெய்லரும் இங்கலண்டும் முட்டாள்கள். நீங்கள் இருவரும் புத்திசாலிகள். முட்டாள்களை நான் நம்புவதில்லை. நம்புவது அபாயம்'' என்ற சில்வர், ''இதை மாத்திரம் சொல். மாக்ரே வருவது உண்மையா?'' என்று கேட்டான்.

''உண்மை'' என்றாள் ராணி.

''அவனை நீங்கள் அழிக்க முற்படுவதும் உண்மையா?''

''உண்மை.''

''அவனை மாத்திரம் அழிக்கக் கூடாது. வேண்டுமானால் அவன் கப்பல் பலத்தை உடைக்கலாம்.''

''ஏன்?''

''அவன் எனது நண்பன்.''


இதை ராணி ஏற்கனவே அறிந்திருந்தாள். ஆகையால் சொன்னாள்: ''மாக்ரே கவர்னரின் கையாள். எங்கள் நாட்டின் எதிரி'' என்று.

சில்வர் சிந்தித்தான் நடனத்தில் அவளை இழுத்துச் சென்றபடி. சிந்தனை முடிந்ததும் சொன்னான்: ''அவனைக் கொல்லக் கூடாது'' என்று.

ராணி வியப்பினால் கண்களை மலரச் செய்தாள். ஈவிரக்கமற்ற சில்வர் ஒருவன் உயிருக்கு மன்றாடுவது பெரும் வியப்பாயிருந்தது அவளுக்கு. ஆகவே கேட்டாள்: ''சில்வர்! நான் மாக்ரேயின் உயிருக்கு உறுதி கூறினால் நீ எனக்குச் செய்வது என்ன?'' என்று.

பொங்கல் வாழ்த்துக்கள்

ஸ்பென்ஸரின் லெமனேட்:





அசல் எலிமிச்சை
பழ ரசத்தை விட சுவையானது.
இது சுவை பொங்கும் பானம்.

ஸ்பென்ஸர் அண்டு கோ. லிமிடெட்

''ஐ வில் ஸ்டாண்ட் பை யூ. கம் ஹெல் ஆர் ஹை வாட்டர் (நரகமோ பிரளயமோ எது வந்தாலும் உன் பக்கத்தில் இருப்பேன்)'' என்றான் வில்வர்.

அப்பொழுது அவர்கள் அருகில் வந்த அனந்த், ''ராணி! ஏது நீயும் வில்வரும் அத்யந்த நண்பர்களாகி விட்டீர்கள்'' என்று வினவினான்.

''ஆம்'' என்ற ராணி ''இன்று நமது அறையில் வில்வரைச் சந்திப்போம்'' என்று சொன்னாள். அன்று இங்கலண்டின் அறையில் வில்வர், அனந்த், துலாஜி, சங்கர் பந்த் ஆகியவர்களைக் கூட்டிய ராணியை வில்வர் ஒரு கேள்வி கேட்டான். முந்திக் கேட்ட கேள்விதான் அது. ஆனால் இம்முறை மிகத் திட்டமாக வினவினான். ''ராணி! நீ எதற்காக அனந்த் காட்டிய பண ஆசையை அதிகமாக்கி, இங்லக்ஸையும் டெய்லரையும் வெறி கொள்ளச் செய்தாய்?'' என்று.

ராணி வில்வர் மீது தனது அழகிய கண்களை ஓட்டினாள். அரவிந்த அதரங்கள் லேசாக விரிந்து சொற்களை உதிர்த்தன மெதுவாக. ''நான் சம்ஸ்கிருதம் படித்திருக்கிறேன்'' என்றாள் ராணி.

''அதற்கும் நான் கேட்ட கேள்விக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டான் வில்வர்.

''அவர்கள் நோக்கம் கொலையில் இருந்தது. அதைத் திருப்ப முயன்றேன். ஏனென்றால் பணத்துக்கு 'மனிதன் அடிமை'' என்றாள். அத்துடன் ஒரு சம்ஸ்கிருத வாக்கியமும் சொன்னாள். ''அர்த்தஸ்யது நரோ தாஸ: தாஸஸ்து அர்த்த ந கஸ்ய சித'' என்றாள். ''பணத்துக்கு மனிதன் அடிமை. பணம் யாருக்கும் எப்போதும் அடிமையில்லை'' என்று விளக்கமும் சொன்னாள். ''இது மகாபாரதத்தில் பீஷ்ம வாக்கியம்'' என்றும் கூறினாள். ''அதனால்தான் அந்த அஸ்திரத்தை உபயோகித்தேன். பார்த்தாயல்லவா வில்வர், பணத்தின் பெயரைக் கேட்டதும் மானுமிகள் கொண்ட வெறியை?'' என்றும் வினவினாள்.

அதைக் கேட்டுக் கொண்டே காப்டன் இங்கலண்ட் உள்ளே நுழைந்தான். ''இந்த மகாநாட்டில் நான் கலந்து கொள்வதில் உங்களுக்கு ஆட்சேபனை இருக்காதென்று நினைக்கிறேன்'' என்று கூறிக் கொண்டு அவர்கள் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டிருந்த மேஜைக்கருகில் வந்து அதன் மீது ஏறி உட்கார்ந்தான். (தொடரும்)

இந்தியா-பாகிஸ்தான் டெஸ்ட் ரிகார்டுகள்!

சதங்கள் :

இந்தியா எடுத்த சதங்கள் 11. இந்தியா எடுத்த அதிக ரன் 177. 1960ம் வருஷம் சென்னை டெஸ்டில் சந்து போர்டே 177 நாட் அவுட். பாகிஸ்தான் எடுத்த சதங்கள் 13. அதிக அளவு ஸ்கோர்: 235. 1978ம் வருஷம் லாகூர் டெஸ்டில் ஜாகிர் அப்பாஸ் எடுத்திருக்கிறார்.

சத பார்ட்னர்ஷிப் :

இந்தியா 13. முதல் விக்கெட் பார்ட்னர்ஷிப் ரன்கள் 192. 1978 லாகூரில் சௌகானும் கவாஸ்கரும் எடுத்தனர்.

பாகிஸ்தான் 14. நான்காவது விக்கெட் பார்ட்னர்ஷிப் ரன்கள் 255. 1978ம் வருஷம் பைஸலாபாத்தில் ஜாகிர் அப்பாஸும் மியான்தாத்தும் ஸ்கோர் செய்தனர்.

டெஸ்ட் ரிஸல்ட்கள் :

இதுவரை ஆடியவை 18. வெற்றி 2 தோல்வி 3. டிரா 13.

எதிர்க் கோஷ்டி காப்டன்கள் :

1952	இந்தியா	லாலா அமர்நாத்
	பாகிஸ்தான்	கர்தார்
1955	இந்தியா	வினு மன்காட்
	பாகிஸ்தான்	கர்தார்
1960	இந்தியா	கண்டிராக்டர்
	பாகிஸ்தான்	பாஸல் முகம்மது
1978	இந்தியா	பேடி
	பாகிஸ்தான்	முஷ்டாக் முகம்மது

அதிக அளவு ரன்கள் :

1960ல் சென்னையில் 539 ரன்களுக்கு இந்தியா 9 விக்கெட்டுகள் இழந்து டிக்ளேர் செய்தது.

1978ல் லாகூரில் பாகிஸ்தான் 539 ரன்களுக்கு 6 விக்கெட்டுகள் இழந்து டிக்ளேர் செய்துவிட்டது.

ஒரு டெஸ்டில் அதிக அளவு விக்கெட்டுகள் :

131 ரன்களுக்கு 13 விக்கெட்டுகளை வி. மன்காட் எடுத்திருக்கிறார், இந்தியாவுக்கு.

பாகிஸ்தானுக்கு பாஸல் முகம்மது 94 ரன்களுக்கு 12 விக்கெட்டுகளைச் சரித்திருக்கிறார்.

படம் : ஜாஹிர் அப்பாஸ்



ஈடு



ராஜேஷ்குமார்

காலை பதினோரு மணி.

ஜனக் கூட்டம் கணிசமாய்ப் புழங்கும் அந்த மெயின் ரோட்டின் வளைவில் பலகைகளால் தடுக்கப்பெற்று , கப்பையனின் டீக்கடையில் வியாபாரம் சுறுசுறுப்பாய் நடந்து கொண்டிருந்தது.

பக்கத்துக் கிராமமான வடவள்ளியில் மாரியம்மன் திருவிழா கடந்த பத்து நாட்களாய் அமர்க்களமாய் நடந்து உச்ச கட்டமான கடைசி நாள் அன்றைக்கு. பஸ் ஸ்டாண்டுக்குப் போகும் கூட்டம் கப்பையனின் டீக் கடையைத் தாண்டித்தான் போக வேண்டும்.

வியாபாரம் அவன் எதிர்பார்த்ததற்கு மேலாகவே பிய்த்துக் கொண்டு போயிற்று. இந்த ஜாக்பாட் வியாபாரத்தை 'எதிர்பார்த்துத்தானே இருந்த பெரிய அண்டா இரண்டிலும் வழிய வழியப் பாலை வாங்கி நேற்றிரவே ஸ்டாக் பண்ணி யிருந்தான் கப்பையன்.

டீ அடிக்கும் அய்யாசாமி டீத்தூளை அள்ளி அலுமினியப் போகினியில் போட்டு பாய்லரின் மூக்கைத் திருகி வெந்நீரைத் தாராளமாகக் கலந்து துணிச் சல்லடையில் அரையும் குறையுமாக டிகாக்ஷனை இறக்கி — சாக்ரீனை விநாடி நேரத்தில் சேர்த்து — பாலை டிகாஷனில் ஊற்றுவதாக பாவ்லா காட்டி.... மழைக் காலத்தில் ரோட்டில் தேங்கி யிருக்கும் மழைத் தண்ணீரைப் போல் டீத்தண்ணியை உருவாக்கிக் கண்ணாடி டம்ளர்களில் நுரை கட்ட ஊற்ற — கடைப் பையன் சின்னு மரப் பெஞ்சுகளில் உட்கார்ந்திருக்கும் அப்பாவி கிராம ஜனங்களுக்கு உடனுக்குடன் விநியோகம் செய்ய வியாபாரம் தான் பறந்தது.

கல்லாப்பெட்டியை மூடிவிட்டு எழுந்தான் கப்பையன், டீ அடித்துக் கொண்டிருந்த அய்யாசாமிக்கு அருகே சென்று மெல்ல முணு முணுத்தான்:

''அய்யாசாமி! இன்னிக்கு பூராவும் இந்த ரெண்டு அண்டாப் பால் குறையவே கூடாது. ஒரு சொம்பு பால் எடுத்தா உடனே ஒரு சொம்பு வெந்தண்ணியை ஊத்திடு....''

அய்யாசாமி கப்பையாவைப் பார்த்துக் கண்ணடித்துப் புன்னகை செய்தபடியே சொன்னான்.

''அதப்பத்தி நீங்க சொல்லவே வேண்டிய இல்லே... காத்தாலே புடிச்ச அப்படித் தான் பண்ணிக்கிட்டு வர்றேன்...''

கப்பையன் கழுத்தில் மைனர் செயின் டாலடிக்க — நிறைவாய்ச் சிரித்துக்கொண்டே

திரும்பவும் கல்லாவில் வந்து உட்கார்ந்தான்.

''அய்யா....'' குரல் கேட்டுத் திரும்பினான் சுப்பையன். கடைக்கு வெளியே — வாசலில் அந்தப் பிச்சைக்காரக் கிழவன் நின்று கொண்டிருந்தான்.

''ம்... போ....போ.... வியாபார நேரத்தில தொந்தரவு பண்ணும...'' கையை ஆட்டி ஆத்திரமாய்த்துரத்தினான் சுப்பையன்.

கிழவன் மெலிவான குரலில் கண்கள் சோர சொன்னான்: ''அய்யா... நா பிச்சை கேக்க வரலே... ஒரு பால்டீ கொடுங்கய்யா... மூணு நாளா ஜொரம்.... ஒரு டாக்டர் புண்ணியவான் இந்த—மாத்திரையைக் குடுத்தாரு....''

''பால்டீ வேணுமா...? காசு இருக்கா? சரி.... மொதல்ல காசை எடுத்து மேசை மேலே வையி....''

கிழவன் தன் கந்தல் துணிப் பையில் கையை நுழைத்து — பைசா பைசாவாய் எண்ணி சுப்பையன் மேஜை மேல் வைத்தான்.

''உன்னிட்ட டம்ளர் இருக்கா? எங்க கடை டம்ளர்லே டீ தரமாட்டோம்...'' கிழவன் தன் கந்தல் மூட்டையிலிருந்தும் அந்த நசுங்கிப்போன அலுமினிய டம்ளரை எடுத்தான். ''இதுலே ஊத்துங்கய்யா....''

சுப்பையன் மறுபடியும் கல்லாப் பெட்டியைப் பூட்டிவிட்டு அய்யாசாமியின் பக்கமாய்ச் சென்றான். மெல்லிய குரலில் கேட்டான். ''அய்யாசாமி... சித்த முந்தி ஒரு 'பால்டீ'யில் ஈ ஒண்ணு விழுந்திட்டதா வாபஸ் வந்துச்சே அதையென்ன பண்ணினே?''

அய்யாசாமி டீ அடிப்பதை நிறுத்திவிட்டுச் சொன்னான்: ''இதோ இங்கதான் வெச்சிருக்கேன்.... ஏன்?''

''நல்லவேளை... அந்தப் பால்டீயைக் கீழே கொட்டிட்டியோன்னு பார்த்தேன். அந்த டம்ளரிலேயே கொஞ்சம் வெந்தண்ணியை ஊத்திக் குடு. ஒரு பிச்சைக்காரக் கிழம் வாசல்ல காத்திட்டிருக்கு. ஊத்திடலாம்...''

''அண்ணே....அதுல ஈ விழுந்து ரொம்ப நேரமாச்சு....''

''பரவாயில்லே எடு....''

அய்யாசாமி சுவரோரமாய் இருக்க அந்த ஈ விழுந்த டீ டம்ளரை எடுத்தான். பாய்லரின் பைப்பைத் திருகி—ஆறிப்போன அந்தப் பால் டீயில் வெந்நீரை நிரப்பி சுப்பையாவிடம் நீட்டினான்.

சுப்பையா கடைப் பையன் சின்னுவிடம் ''டேய், அந்தப் பிச்சைக்காரக் கிழவனுக்கு இந்த டீயை ஊத்திட்டு டம்ளரை நல்லாக் கழுவி வை. அந்தக் கிழவனை வாசலை விட்டுத் தள்ளி நின்னு குடிக்கச் சொல்லு'' என்று கூறிவிட்டு, மீண்டும் கல்லாவில் வந்தமர்ந்து ஒரு ஐந்து நிமிடம் கூட ஆகியிருக்காது.

கடைப் பையன் சின்னு உள்ளே இருந்து கத்தினான்: ''ஐயோ பல்லி.... பால் அண்டாவிலே பல்லி விழுந்துடுச்சு....''

டீக் குடித்துக் கொண்டிருந்த அத்தனை பேரும் சரேலென சுப்பையாவைப் பார்க்க சுப்பையா வெளிறிப்போய் எழுந்தான்.

குடித்துக் கொண்டிருந்த டீ டம்ளர்கள் பாதியிலேயே வைக்கப்பட்டன. எல்லோருமாய் எழுந்து பார்த்தபோது—

இரண்டு அண்டாக்களிலும் வழிய வழியத் ததும்பிக் கொண்டிருந்த பாலில் இரண்டு மரப் பல்லிகள் — கட்டை விரல் பருமனுக்கு விழுந்து உயிருக்குப் போராடின.

''இப்பத்தான் மேலே இருந்து 'தொப்' புன்னு விழுந்துச்சு... அதுல ஒண்ணு இதுல ஒண்ணு....'' கூடிவிட்டிருந்த கும்பலுக்கு விளக்கம் கூறிய சின்னுவைச் சுட்டெரித்து விடுவதைப் போல் பார்த்தான் சுப்பையன்.

அய்யாசாமியிடம் கரண்டியை வாங்கிக் குற்றுயிராகிவிட்ட பல்லிகளை எடுத்து வாசலில் வீசி எறிந்தான்.

''இந்தப் பாலில் இனி டீ போடக்கூடாது.!'' —கூட்டத்தில் ஒரு பெண் சொல்ல—அதையே எல்லோரும் திருப்பிச் சொல்ல—

சுப்பையா கோபத்தோடு கத்தினான். ''பல்லி செத்தாத்தானய்யா வெஷம். அதான் சாகலியே...''

''அது செத்தாலும் சரி, உயிரோடு இருந்தாலும் சரி. பால்லே முளுசா உளுந்து முங்கிடுச்சே... அது போதாதா... அதுவுமில்லாம மரப் பல்லிக மாதிரி தெரியுது...'' —ஒரு இளவட்டம் இரைந்தது.

''பாலைக் கீழே கொட்டிடு...''

''ஆமா. கொட்டிடு....''

கொட்ட மாட்டேன். என்னய்யா பண்ணுவீங்க....?'' சுப்பைய்யா முறைத்தான்.

''யோவ்.... இந்த ஆளு நியாயமாச் சொன்னாக் கேக்க மாட்டானய்யா... முனிசிபாலிடி ஹெல்த் ஆபீசருக்குப்போன் பண்ணிச் சொல்லிட வேண்டியதுதான்... ஐயா அபராதத்தையும் கட்டிட்டு உள்ளார போயிட்டும் வரட்டும்....'' — ஒருவன் மிரட்ட...

சுப்பையா வெல வெலத்துப் போனான்.


''வேண்டாங்க பாலைக் கொட்டிடறேன்.''

''அந்த ஆளை நம்ப முடியாது... நாமளே கொட்டிடலாம். ஆளுக்கொரு கையைக் குடுங்க....''

நாலைந்து பேர் உள்ளே நுழைந்து பால் அண்டாக்களை வளைத்துத் தூக்கி வெளியே கொண்டு வந்து, சகதி தேங்கியிருந்த அந்தச் சாக்கடையில் கொட்டக் கொட்ட.... அந்த ரெண்டு அண்டா பாலும் கொட்டப்படுவதை நெஞ்சம் பதை பதைக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் சுப்பையன்.

ஓர் அநியாயமான சிறிய லாபத்துக்கு—இவ்வளவு பெரிய நஷ்டமா? அதற்கு இது 'ஈடுதான்!' சுப்பையாவின் உள் மனம் சொல்லிற்று.

''டி.வி.யில் பொங்கல் நிகழ்ச்சி ஆரம்பிக்கப் போறாங்களாம்!'' -சுதர்சன்




மன்னவன் வந்தானே!
மயங்கியே நின்றானே!!
மாலையிடும் மன்னவன்
வந்தானே.
மகிழ்ச்சியோடு
சாரதா'ஸின் பட்டுப்
புடவையில் உன்
எழிலைக் கண்டானே.
மயங்கியே நின்றானே.
மனம் கவர் மன்னன்
மனம் மயங்க வைப்பது
சாரதா'ஸின்
முகூர்த்த
பட்டுப் புடவைகள்
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
சாரதா'ஸ் சென்னையிலும் திருச்சியிலும் மட்டுமே.
வேறு எங்கும் கிளைகள் கிடையாது.
SARATHA'S
MADRAS & TRICHY

"மனங்கள்—மாடர்ன் ஆர்ட்"

— லட்சுமிராஜரத்னம் —



கல்லூரியிலிருந்து கிளம்பி நிருபமா போய்க் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டான் விஜயகுமார். சர்ரென்ற வேகத்துடன் ஸ்கூட்டர் அவள் அருகில் போய் நின்றது.

''பின்னால் ஏறிக்கொள்.''

ஏறிக்கொண்டாள். மடியில் புத்தகக் கட்டு. சிரமப்பட்டுச் சீட்டின் விளிம்பைப் பிடித்துக் கொண்டாள். தெரிந்தவர்கள் பார்த்துவிடப் போகிறார்களே என்ற பயம் வேறு.

''நன்றாகப் பிடித்துக்கொள்.''

''பிடித்துக் கொண்டிருக்கிறேன்.'' காற்று அடித்துச் சென்றது வார்த்தைகளை. என் தோளைப் பிடித்துக்கொள் என்று சொல்லத்தான் ஆசை. தன்னைப் பற்றித் தப்பாக எடுத்துக்கொண்டால்? நண்பனின் தங்கை! அதனால்தான் மனத்தில் எழும் ஆசையை வெளியே சொல்ல முடியவில்லை. சாதிப் பிரிவு ஒன்று குறுக்கே நிற்பது தெரிகிறது.

இப்பொழுதெல்லாம் விஜய் அதிகமாக நண்பனைத் தேடிக் கொண்டு போகிறான்: நிருபமாவைப் பார்க்கும் ஆவல். சில சமயம் குறுக்கே போகும்பொழுது கண்ணில் படுவாள். சில நாட்கள் ஏமாற்றத்திலும் முடிவதுண்டு. அந்த இரவுகளில் விஜய் தூங்கவே மாட்டான்.

ஒரு நாள் விஜயிடம் நேராகவே அவள் பேச வந்தாள். ரகு அருகில் இருந்தான்.

''எங்கள் கல்லூரி வெலடிக்டரி பங்ஷனில் நீங்கள் பாடவேண்டும்.''



''அக்காவும் அத்திம்பேரும் ஆக்ஷன் ரீப்ளே காட்டுவாங்களாடி?''

அவன் தயங்கினான். ''என்னடா தயக்கம்? நாங்களும் கூட வருகிறோம்'' என்று ரகு உற்சாகப்படுத்தினான்.

''வருவாய் மனமோகனா'' என்று அவன் ஆரம்பித்ததுமே அனைவரும் அவனது மோகனக் குரலில் கட்டுண்டனர். அவனது பாடலின் நாயகியே எதிரே இருக்கிறாள். அவளைத்தான் அவன் அழைக்கிறான் என்பது யாருக்காவது புரியுமா?

''இந்தப் பாட்டை நான் எழுதி வைத்துக் கொள்ளப் போகிறேன்'' என்று நிரு அவன் விடைபெற்றுக் கொண்டபொழுது சொன்னாள்.

'உன் சித்திரம் என் உள்ளத்தில் எழுதப்பட்டிருப்பதை அறியவில்லையா?' என்பது போல் பார்த்தான் விஜய். அவள் மிடுக்காகச் சிரித்தாள். நிரு மிகவும் கர்வம் பிடித்தவள் என்று பெயர் வாங்கியவள்.

'நிரு, உன் கர்வத்திலும் ஒரு மோகம்' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

விஜய்க்கு பம்பாய் மாற்றலாகிவிட்டது. அவன் எவ்வளவோ மறுத்துப் பார்த்தான். ஒன்றும் நடக்கவில்லை. ''பிரமோஷன் கிடைக்கும் போ'' என்று கூறினார் மேலதிகாரி.

அன்றுதான் அவன் பம்பாய் கிளம்பப் போகிறான். மாலை கிளம்புவதற்குள் ஒரு தடவை நிருவைப் பார்க்கத் துடித்தான். கடந்த ஒரு வாரமாகத் தேவியின் தரிசனம் கிடைக்கவில்லை. ஸ்டடி லீவ் என்று சித்தி வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். இன்றுதான் கல்லூரிக்குப் போயிருப்பாள்.

இரவு பகலாக வரைந்த அவளது ஓவியத்தைப் பார்த்தான். நெற்றியிலிருந்து பிரிந்த முடிகள் நெற்றியை மறைத்தன. பேச வருவது போல் துடிக்க வைக்கும் கண்கள். இதை அவன் தன் அன்பளிப்பாக அவளிடம் தந்துவிட்டுப் போக வேண்டும்.

மாலை கல்லூரி முடிந்ததும் வாசலில் காத்திருந்து எதிரே உள்ள பூங்காவுக்கு அழைத்துப் போய் அந்த அன்பளிப்பைக் கொடுத்தான். நெஞ்சு ஒரு துடிப்புக்கு இரண்டு துடிப்பாக டமாரம் அடித்தது.

''நிரு, நீ என்னைப் புரிந்துகொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். ஐ லவ் யூ.''

கண்கள் மின்ன அவனைப் பார்த்தாள்.

''என்ன நிரு பதிலே பேசவில்லை?''

''நான் உங்கள் குரலை ரொம்ப விரும்புகிறேன். 'வருவாய் மோகனா' பாட்டை நான் மறக்கவே மாட்டேன்.''

அவள் விடுவிடுவென்று அகன்றாள். இதற்கு என்ன பொருள்? 'வருவாய் மனமோகனா— உன் வரவை எதிர்பார்த்துத் துடியாய்த் துடிக்கும் என் முன்' — இந்தப் பாட்டை அவள் மறக்காமல் இருப்பதென்றால்! ஓ.. அவள் தன்னைக் காதலிக்கிறாள்! அவன் பூரித்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினான்.

எண்ணிப் பத்தே தினங்களில் திரும்பி வந்துவிட்டான் விஜய். பிரமோஷன் தேவையில்லை என்று கூறிவிட்டான். அவன் அப்

படித் திரும்பி வந்தது எல்லா நண்பர்களுக்கும் அதிசயமே.

''என்னடா, இங்கே என்ன கொள்ளை போகிறது? பிரமோஷனை வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஓடிவந்து விட்டாய்?'' என்று ரகு கடிந்து கொண்டான்.

''எனக்கு இந்த ஊரின் மீது தீராக் காதல்டா ரகு'' என்றான் பலமாக.

நிரு குறுக்கே போனாள்.

கல்லூரி விடுமுறை தொடங்கி விட்டது. இந்த ஆண்டுடன் நிருவின் படிப்பு முடிவடைகிறது. அவள் பெங்களூர் போகப் போவதாக ரகு கூறினான்! அவளை விஜயால் தனியாகச் சந்திக்க முடியவில்லை.

விஜய்யின் காதலை அவன் அலுவலகச் சகா சங்கர் ஊகித்து விட்டான். மெல்லத் தன் மனைவி சீதாவிடம் சொல்ல மூவர் அறிந்த ரகசியமாகிவிட்டது. சங்கர் சாதிப் பிரச்னையைக் கிளப்பினான்.

''போடா, ரகுவின் அப்பா சோமு கலப்புத் திருமணத்தை ஆதரித்தவர்டா. தவிர நான் அவர்கள் சாதியின் ஒரு பிரிவு தானேடா'' என்றான்.

''எதுவும் தன் வீட்டுப் படியேறும்போது ரொம்ப யோசிப்பார்களாடா விஜய். தன் வீட்டுக் குடுமி என்றால் கூடாதா?'' என்றான் சங்கர்.

''இல்லேடா. அவ என்னை லவ் பண்ணுறாள்டா. 'வருவாய் மன மோகனா'வை மறக்க மாட்டேன் என்றாள்டா''

ஒரு நடுப்பகல். சங்கர் போன் செய்தான். ''விஜய், நீ என் வீட்டுக்குப் போனால் நிரு காத்துக் கொண்டிருப்பாள். சீதா அவளை அழைத்துக் கொண்டு வந்திருப்பாள். நிரு நாளைக்கு பெங்களூர் போகிறாள்.''

அந்தச் சமயம் பார்த்தா மேலதிகாரி அவசர வேலை ஒன்றைத் தரவேண்டும்? அவன் சங்கரின் வீட்டுக்குப் போனபோது சீதா தான் பரிதாபமாக அவனை வரவேற்றாள்.

''இவ்வளவு நேரம் காத்திருந்து விட்டு நிரு போய்விட்டாள்'' என்றாள் சீதா.

அவனுக்குக் கோபம் பொங்கியது. ''நான் நிருவைப் பார்த்தாக வேண்டும். அவளைத் தடுத்து நிறுத்தி யிருக்கக் கூடாது?'' என்று சீதாவிடம் இரைந்தான்.

சீதா அவன் கோபத்தை உணர்ந்தாள்.


''நாளைக்கு ஊருக்குப் போகிறாளாமே? ஏதாவது சொன்னாளா?''

''அவள் அப்பாகிட்டே உங்களை 'அப்ரோச்' பண்ணச் சொன்னாள்.

அவன் குழம்பிப் போனான். ''இவள் என்னைக் காதலிக்கிறாளா என்னன்னு தெரியவில்லே. இவ அப்பா கிட்டே. எதை வச்சிண்டு போவேன்? இவ வாயைத் திறக்கவே மாட்டேன் என்கிறாள்'' என்றான் விஜய்.

நிருபமா பெங்களூர் போய்விட்டாள். ஊர் பூராவும் பவர் கட் ஆனது போல் ஓர் இருளை உணர்ந்தான் விஜய்.

ஊருக்கு போயிருந்த சங்கரும் சீதாவும் ஒரு வாரத்தில் திரும்பினர்.



வந்ததுமே விஜய் வருவான் என்று எதிர் பார்த்தார்கள். விஜய் வரவில்லை. மாலையில் கடைத் தெருவுக்கு வந்துவிட்டு விஜய்யின் அறையில் நுழைந்தனர். விஜய் எதையோ வரைந்து கொண்டிருந்தான்.

''என்ன விஜய், உடம்பு சரியாய் இல்லையா?''

வேகமாகத் தன் மாடர்ன் ஆர்ட்டில் வண்ணங்களைத் தீட்டினான் விஜய்.

''இதென்ன, சாமான்கள் எல்லாம் 'பாக்' பண்ணியிண்டு? வேற ரூமுக்குப் போகிறீர்களா?'' சீதா கேட்டாள்.

''ஊரை விட்டுத் திரும்ப பம்பாய் போகிறேன்.'' தன் அருகே இருந்த கல்யாண அழைப்பிதழை எடுத்துச் சங்கரிடம் நீட்டினான்.

நிருபமாவின் கல்யாணப் பத்திரிகை!

''நீ இன்றுதானே ஊரிலிருந்து திரும்பி இருக்கிறாய்? ரகு உனக்கு நாளைக்குத் தருவான்'' — ஏதோ வேடிக்கையாகப் பேச வேண்டுமே என்பதற்காகப் பேசுபவன் போல் பேசினான்.

''நான்தான் சொன்னேனே, அவள் கர்வம் பிடித்தவள் என்று'' — சீறினான் சங்கர்.

''நான்தான் சொன்னேனே — அந்தக் கர் வத்திலும் ஒரு மோகம் என்று.''

சீதா அந்த வழுவழுப்பான கல்யாணப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தாள். நிருவின் அப்பா 'அப்ரோச்' பண்ணிய அமெரிக்க மாப்பிள்ளை.

வரைந்த பேப்பரில் எல்லா வண்ணங்களையும் ஒன்றாகக் குழப்பினான் விஜய். அவனது கலக்கம் சங்கருக்குப் புரிந்தது.

''விஜய், வாட் ஈஸ் திஸ்? பீ காம்.''

''சங்கர் இது என்ன தெரியுமா? இதுதான் மாடர்ன் ஆர்ட் — அதாவது நம்முடைய புரியாத சமுதாயம். இன்னும் குழப்பிக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் ஓடும் கோடுகள் எல்லாம் — மணங்கள் — திருமணங்கள். எந்தக் கோடு எதில் சேரும் என்று சொல்ல முடியாமல் மனத்துக்குத் தோன்றியபடி போடுகிறோம் பார்! அதே போல் நான் எங்கேயோ, நிரு எங்கேயோ!''

காற்றில் பறந்த அந்த மாடர்ன் ஆர்ட் பேப்பர் தரையில் விழுந்தது. வண்ணத் தோய்வில் தரையில் ஒரு மாடர்ன் ஆர்ட் ஓ.... மணங்கள் — திருமணங்கள்!

தேர்தல் முடிஞ்சிருச்சி!



தெருவில் பழைய பேப்பர்க்காரன் கூவுகிறான்: ''தேர்தல் போஸ்டர் வாங்கறது.... பழைய தேர்தல் போஸ்டர் வாங்கறது......!''

●

வீட்டின் முன் முப்பது நாற்பது பேர் கூடி நிற்க பால்கனியிலிருந்து தோற்ற வேட்பாளர் பேசுகிறார்: ''எனக்காகப் போஸ்டர் ஒட்டிய வர்களே! நான் கட்டிய தேர்தல் டெபாசிட் தொகை நாளை மறுநாள்தான் என் கைக்கு வந்து சேரும். அது கிடைத்ததும் உங்களுக்குச் சேர வேண்டிய கூலியைப் பட்டுவாடா செய்து விடுகிறேன். தயவு செய்து இப்போது அமைதியாகக் கலைந்து செல்லுங்கள்!''



அவன்: எங்கள் தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர்கள் இரண்டு பேருமே தலையை மொட்டையடிச்சுக்கிட்டாங்க!

இவன்: ஏன்?

அவன்: வெற்றி பெற்றால் முடி காணிக்கை



செலுத்துவதாக ஒருவர் வேண்டிக்கிட்டிருந்தாரு..... நான் தோற்றால் என் தலையை மொட்டை அடிக்கிறேன்னு ஒருவர் பொதுக் கூட்டத்தில் சவால் விட்டிருந்தாரு!

●

அவன்: காய்ந்த வரட்டியா ஒரு ஆயிரம் கிடைச்சது!

இவன்: எங்கே யிருந்து?

அவன்: தேர்தல் பிரச்சார போஸ்டர்களி லிருந்து எடுத்தேன்!

●

மனைவி: தேர்தலில் ஜெயிச்சா எனக்கு வைர நெக்லஸ் வாங்கித் தரதா சொல்லியிருந் தீங்களே..... இப்பத்தான் ஜெயிச்சு எம்.பி. ஆயிட்டிங்களே..... எங்கே வைர நெக்லஸ்?

கணவன்: நீ ஒரு பைத்தியம்! தேர்தல் வாக்குறுதியைப் போய்ப் பெரிசா நம்பிக்கிட்டு....!

—க. ராஜாஜி

உழுது, உரமிட்டுப்
பலன்கண்ட
உழவுப் பெருமக்களுக்கு

ஸ்பிக்
கூறும்
பொங்கல் வாழ்த்துக்கள்

SPIC

சதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
ஸ்பிக் சென்டர், 97, மவுண்ட் ரோடு, சென்னை 600 002



கல்லூரியில் 'க்விஸ்'



✻ பார்வையாளர்களில் ஒரு பகுதி

[குரோம்பேட்டை வைஷ்ணவா பெண்கள் கல்லூரி. க்விஸ் போட்டியில் பங்கேற்கவும், கண்டு கேட்டு ரசிக்கவும் உற்சாகம் கொப்பளிக்கும் முகங்களுடன் மாணவிகள் குழுமியிருந்தனர். நடுவராக இருந்து போட்டியினை நடத்திக் கொடுக்க அக்கல்லூரியின் உதவிப் பேராசிரியையான ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி சுப்ரமணியன் இசைவு தரவும், 'கல்கி' தயாரித்த கேள்விகள் அவரிடம் அளிக்கப்பட்டன.

வாசகர்களும் தங்களது திறமையைச் சோதித்துப் பார்த்துக் கொள்ள வசதியாகக் கேள்விகளை வரிசையாக அளித்து, அதன் கீழ் எந்த மாணவி சரியாகப் பதிலளித்தார் என்பதை மட்டும் கொடுத்துள்ளோம். முடிவில் சரியான பதில்களை அளித்துள்ளோம்.]

போட்டியில் பங்கேற்ற மாணவிகள்:

1. குமாரிகள் வி.ஏ. வித்யா 2. எம். கே. வைஜயந்தி 3. எஸ். புஷ்பா 4. வி. பிரமீளா 5. ஆர். கல்பனா 6. B. உமா சங்கரி 7. ஜி. மீனா.

1. கேள்வி: வில்லை ஒடித்து ராமர் சீதையை மணந்தார் என்று ராமாயணம் கூறுகிறது. அந்த வில்லின் பெயர் என்ன?

இக்கேள்விக்குச் சரியான விடையை அளித்தவர் குமாரி வித்யா.

2. கேள்வி: மத்திய அமைச்சரவையில் அதிகமான அனுபவம் பெற்ற தற்போதுள்ள அரசியல் தலைவர் யார்?

இக்கேள்விக்கான சரியான பதிலைக் குமாரி ஆர். கல்பனா அளித்தார்.

3. கேள்வி: IQ என்றால் Intelligent Quotient என்பது நாமறிந்தது. IQ எப்படி மதிப்பிடப்படுகிறது என்று கூற முடியுமா?

எவரும் விடையளிக்கவில்லை.

4. கேள்வி: இங்கிலாந்தின் தேசிய பறவை எது?

எவரும் விடையளிக்கவில்லை.

5. கேள்வி: திருவனந்தபுரத்தில் உள்ள வான் வெளி ஆராய்ச்சி நிலையமான SLVP யின் விரிவு என்ன?

எவரும் விடையளிக்கவில்லை.

6. கேள்வி: 1980ம் ஆண்டு மாஸ்கோவில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பத்தில் நிகழப்போகும் அணிவகுப்பில் எந்த நாடு தலைமை தாங்கும்?

உமாசங்கரி சரியாக விடையளித்தார்.

7. கேள்வி: பாம்புகள், தங்களது கண்கள் திறந்த நிலையில் இருக்க உறங்குவதாகச் சொல்லப்படுகிறது. காரணம் என்ன?

உமாசங்கரி சரியாக விடையளித்தார்.

8. கேள்வி: மனித உடலின் எடையில், ரத்தத்தின் எடை எந்த விகிதத்தில் உள்ளது?

எவரும் விடையளிக்கவில்லை.

9. கேள்வி: கிர்மானி, கவாஸ்கர் ஆகிய கிரிக்கெட்காரர்களின் முழுப் பெயர் என்ன?

காவஸ்கரின் பெயரை மட்டும் கல்பனா சரியாகச் சொன்னார். கிர்மானியின் முழுப் பெயர் யாருக்கும் தெரியவில்லை.

10. கேள்வி: 'ஷாலிமார்' என்ற படம் ஓர் அமெரிக்கரால் தயாரிக்கப்பட்டது. அவரது பெயர் என்ன? அவரது வாழ்க்கை பற்றிய ஓர் உண்மை என்ன?

குமாரி கல்பனா சரியாக விடையளித்தார்.

11. கேள்வி: முதல் தமிழ் நாவல் எது? எழுதியது யார்?

நாவல் பெயரைச் சரியாக பிரமீளாவும், எழுதியவர் பெயரைச் சரியாக மீனாவும் கூறினர்.

12. கேள்வி: Death Valley (மரணப் பள்ளத்தாக்கு) எங்கே உள்ளது?

புஷ்பா சரியாகப் பதிலளித்தார்.


13. கேள்வி: Ashes என்றால் என்ன: கிரிக்கெட்டில்?

மீனா சரியான விடை அளித்தார்.


14. கேள்வி: இன்றைய செய்தித் தாள்கள் படி (27–12–79) ஒரு கிராம் அளவு 22 காரட் தங்கத்தின் சில்லறை விலை என்ன?

எவரும் சரியான விடையை அளிக்கவில்லை.

15. கேள்வி: நெபோலியன் தனது முதல் தோல்வியை 'வாடர்லூ' (Waterloo)



✖ 'குவிஸ்' மாஸ்டருடன், போட்டியில் பங்கேற்றவர்கள்



✖ குமாரி கல்பனா பரிசு பெறுகிறார்

என்ற இடத்தில் சந்தித்தான் என்பது நாமறிந்தது. 'வாடர்லூ' எந்த நாட்டில் உள்ளது?

சரியான விடையைஎவரும் கூறவில்லை.

16. கேள்வி: 'சதுரகராதி' முதல் தமிழக ராதியாகும். அதனை இயற்றியவர் யார்?

சரியான விடை எவரும் கூறவில்லை.

17. கேள்வி: 'ஃபீல்ட் மார்ஷல்' என்பது இந்திய ராணுவத்தில் அளிக்கப்படும் உயர்ந்த விருதாகும். இவ்விருதைஎவரேனும் பெற்றுள்ளார்களா?

புஷ்பா சரியான விடை அளித்தார்.

18. கேள்வி: 1, Bureau, 2, Stimulus ஆகிய ஆங்கில வார்த்தைகளின் பன்மை என்ன?

Bureau வுக்கான பன்மையை மட்டும் பிரமீளா சரியாகக் கூறினார்.

19. கேள்வி: 1, Sahanama 2, Conquest of self ஆகிய நூல்களை எழுதியவர்கள் யார் யார்?

எவரும் விடையளிக்கவில்லை.

20. கேள்வி: 1980 தேர்தலில் இந்திரா போட்டியிடும்பாராளு மன்றத் தொகுதிகள் எவை? எங்கே உள்ளன?

உமாசங்கரி, வித்யா, வைஜயந்தி ஆகிய மூவரும் கொஞ்சம் கொஞ்சம் சரியாக விடையளித்து மதிப்பெண்களைப் பிரித்துக் கொண்டனர்.

21. கேள்வி: பாஸ்கரரின் வக்கிரத்தை அடிப்படையாகக் கொண்டு கணித மேதை சகுந்தலா தேவி எழுதிய புத்தகத்தின் பெயரைக் கூற முடியுமா?

எவரும் விடையளிக்கவில்லை.

22. கேள்வி: விஞ்ஞான ரீதியில் பழங்கள், அவற்றின் வளர்ச்சி பற்றி கற்பதனைக் குறிப்பிடும் ஓர் ஆங்கிலச் சொல் எது?

Horticulture என்றார் ஒரு மாணவி. சரியான விடையை எவரும் அளிக்கவில்லை.

23. கேள்வி: கடைசியாக பாகிஸ்தான் இந்தியாவை டெஸ்ட் மைதானத்தில் சென்னையில் சந்தித்தபோது இந்தியா சார்பாக சதம் போட்ட ஆட்டக்காரர்கள் யாவர்?

கல்பனாவும் மீனாவும் சரியான விடையைக் கூறி மதிப்பெண்களைப் பகிர்ந்து கொண்டனர்.

24. கேள்வி: Hat-trick என்றால் என்ன?

உமாவும் கல்பனாவும் பாதிப் பாதி சரியாகச் சொன்னார்கள்.

25. கேள்வி: மிகப் பெரிய கிரகம் எது?

பிரமீளா சரியாகச் சொன்னார்.

26. கேள்வி: அகராதியைத் தயாரிக்கும் செயலைக் குறிக்கும் ஓர் ஆங்கில வார்த்தை என்ன?

உமா சரியாகப் பதிலளித்தார்.

27. கேள்வி: Dead-Heat என்றால் என்ன· எந்தவிளையாட்டில் பயன்படுத்தப்படுகிறது?

எவரும் விடையளிக்கவில்லை.

28. கேள்வி: இவ்வாண்டுக்கான 'தமிழ் நூலுக்கான சாகித்ய அகாடமி பரிசைப் பெறுபவர் யார்? எந்த நூலுக்காகப் பெறுகிறார்?

வல்லிக்கண்ணன், ஜெயகாந்தன் என்று விடைகள் வந்தன. சரியான விடையை எவரும் கூறவில்லை.

29. கேள்வி: எந்த மிருகத்திலிருந்து சாமாய்ஸ் லெதர் Chamoise Leather தயாரிக்கப்படுகிறது?

ஒட்டகம் என்றார் ஒரு மாணவி. சரியான விடையை பிரமீளா கூறினார்.

30. கேள்வி: பாண்டிச்சேரியின் உயர்நீதி மன்றம் எங்கே உள்ளது?

விடையை கல்பனா சரியாகச் சொன்னார்.

31. கேள்வி: மொத்த ஆழ்வார்கள் 10 பேர் என்றும் 12 பேர் என்றும் ஓர் சர்ச்சை இருந்து வருகிறது. சர்ச்சைக்குரிய இரு ஆழ்வார்கள் யார்?

ஒருவர் பெயரைமட்டும் சரியாக கல்பனா சொன்னார்.

32. கேள்வி: Polindromic word என்றால் என்ன? ஓர் உதாரணம் தரவும்.

அவ்வார்த்தையின் அர்த்தத்தை மட்டும் உமா சரியாகச் சொன்னார்.

33. கேள்வி: குறும்பூழ், எகினம், அன்றில்— இவற்றுக்கு உள்ள ஒற்றுமை என்ன?

பிரமீளா சரியான விடையைக் கூறினார்.

34. கேள்வி: பிரிட்டனின் முதல் பெண் பிரதமர் யார்?

மீனு சரியாக விடையளித்தார்.

35. கேள்வி: Bigamist என்ற வார்த்தைக்கும் Digamist என்ற வார்த்தைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பாதி கேள்விக்கு வித்யா சரியாக விடையளித்தார்.

அதிகமான கேள்விகளுக்குப் பதிலளித்தது உமாசங்கரியும், கல்பனாவும் என்றாலும் அதிக முதல் சலுகைக் கேள்விகளுக்கு விடையளித்த காரணத்தால் அதிக மதிப்பெண்களைப் பெற்றுக் குமாரி கல்பனா போட்டியில் வெற்றி பெற்றார். 'கல்கி' சார்பாக அவருக்கு ரூ. 50 பரிசளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் முடிவில் குமாரி டி. பி. விஜயலக்ஷ்மி ''மிமிக்'' செய்து எல்லோரையும் சிரிப்பு வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

விடைகள்:

(1) ருத்ர தனுசு (சிவதனுசு என்றும் சொல்வதுண்டு) (2) ஜெகஜீவன்ராம். (3) Mental age/Chronological age multiplied by 100 where mental age is defined in terms of a child's ability to successfully do tests which an average child of a given age can do. (4) ராபின் (5) Space Launch Vehicle project. (6) கிரீஸ். எல்லா ஒலிம்பிக் விளையாட்டுக் களிலும் கிரீஸ் நாடுதான் முன் நடத்திச் செல்லும். (7) பாம்புகளுக்குக் கண் இரப்பைகள் கிடையாது. (8) ரத்தத்தின் எடை உடல் எடையில் 1/13 பங்கு உள்ளது. (9) 1, Syed Mustafa Hussain Kirmani, 2, Sunil Manohar Gavaskar (10) கிருஷ்ண மேனா. இந்தியாவில் பிறந்தவர். (11) பிரதாப முதலியார் சரித்திரம் (முதல் நாவல்); வேதநாயகம் பிள்ளை. (12) கலிபோர்னியாவில் (13) 1882ல் முதன் முதலாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி, இங்கிலாந்து கிரிக்கெட் அணியைத் தோற்கடித்தபோது அதுவே பிரிட்டிஷ் கிரிக்கெட்டின் முடிவு — சாம்பல் என்று வர்ணிக்கப்பட்டது. இவ்விரு நாடுகளுக் கிடையேயான கிரிக்கெட் போட்டிகளில் தற்போதும் ASHES என்ற சொல் இடம் பெறுகிறது. (14) ரூ. 123.25. (15) பெல்ஜியம். (16) வீரமா முனிவர். (17) ஃபீல்ட் மார்ஷல் மானேக்ஷா. (18) Bureaux, Stimuli (19) Firdausi. Mahatma Gandhi (20) ரே-பரேலி — உத்திரப் பிரதேசம்; மேடக் — ஆந்திரப் பிரதேசம். (21) The world of Homo Sexuals (22) Pomology (23) போர்டே; உம்பிகர் (24) A combination of three successful wickets in cricket by a bowler. goals in hockey, and foot ball by the same player is called hat-trick (25) ஜூபிடர். (26) Lexicography (27) குதிரைப் பந்தயங்களில் எது முதலில், எது பின்னால் என்று கணிக்க முடியாதபடி இரு குதிரைகள் ஒன்றாக வருமானால் அது Dead Heat எனப்படுகிறது. (28) தி. ஜானகிராமன்; சக்தி வைத்தியம் என்ற சிறுகதைத் தொகுப்புக்காக. (29) Antelope எனப்படும் மான் வகை. (30) சென்னை உயர்நீதி மன்றம்தான் பாண்டிச்சேரிக்கும் உயர்நீதி மன்றமாகும். (31) ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ மதுர கவி ஆழ்வார். (32) முன்னாலிருந்தோ பின்னாலிருந்தோ எப்படிப் படித்தாலும் ஒரே மாதிரி இருக்கும் சொற்கள் Palindromic சொற்கள் எனப்படும். (உதாரணம் Malayalam தமிழில் விகடகவி) (33) மூன்றும் பறவைகள். (34) மார்கரட் தாட்சர். (35) சட்டபூர்வமாக இரண்டாவது தடவை மணப்பவர் DIGAMIST எனப்படுவார். ஒரே சமயத்தில் இரு தாரங்களைப் பெற்றிருப்பவர் BIGAMIST எனப்படுவார். ஹிந்து திருமண சட்டப்படி இரட்டை தார முறை BIGAMY ஓர் தண்டனைக்குரிய குற்றமாகும்.

தொகுப்பு: நாயகன்

புகைப்படம் முன்னா மூர்த்தி

''ஜாங்கிரா, டமாரம், ஊதல், பட்டாணி, புளியோதரை, தயிர் சாதம், முறுக்கு, மினாரு வடை, காப்பி, தண்ணீர், பீக்கர், சாக்லேட், பிஸ்கட் எல்லாம் கொண்டுவந்தும் தண்டமா போச்சு....!''

''ஏன்?''

''என் மூக்குக் கண்ணாடியைக் கொண்டுவர மறந்திட்டேன்.''

கிரிக்கெட் தமாஷ் ②



சபாக்களைக் குறை கூறுவானேன்?

''சேம்பர் மியூஸிக்'' பற்றி திரு நடராஜன் கூறட்டும். (''சிறிய சபைகளின் பெரிய பணி'', கல்கி, இசை விழா சிறப்பிதழ், 16-12-79) வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதற்காகப் பெரிய சபாக்களை அவர் குறை கூறிப் பேசியிருக்க வேண்டாம். பல்வேறு சபாக்களின் அங்கத்தினன், சில சபாக்களை நிர்வகித்தவன், இசைக் கலைஞர்கள் பலருடன் பழகியவன் என்ற முறையில் அவர் கூறியவைவற்றை மறுக்கிறேன். 'சபாக்கள் எல்லாமே நாடகம், நாட்டியம், சினிமா இவற்றைத்தான் தருகின்றன. கர்நாடக சங்கீதத்துக்கு வாய்ப்பில்லை' என்று இவர் கூறுவது தவறு. சபாக்கள் பெரிய அரங்குகளை வாடகைக்கு எடுக்க வேண்டியிருப்பதால் நிறைய வசூல் ஆகவேண்டும் என்று நாடகம், நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. இவற்றிலிருந்து கிடைக்கும் உபரித் தொகை சிறந்த கர்நாடக இசைக் கலைஞர்களின் கச்சேரிகளை ஏற்பாடு செய்யவே (வசூல் குன்றவாக இருந்தாலும்) உதவுகிறது. சேம்பர் மியூஸிக் கேட்க வருகிறவர்கள் ஒரு குடும்பமாகப் பழகுகிறார்கள் என்றும் சபா அங்கத்தினர்கள் விரோதிகளாக ஒருவரோடு ஒருவர் மல்லுக்கு நிற்கவா வருகிறார்கள்? 'சபா அங்கத்தினர்கள் அரட்டைக் கச்சேரிக்கு வருகிறார்கள்' என்று இவர் குற்றம் சாட்டினால், 'சேம்பர் மியூஸிக்குக்கு வருவோர் அதன் முடிவில் போடப்படும் சாப்பாட்டுக்காகவே காத்திருக்கிறார்கள்' என்று திருப்பிக் கூற எவ்வளவு நேரமாகும்? நல்ல ரசிகர்களைத் தருவதால் இசைக் கலைஞர்கள் இவர்களுடன் ஒத்துழைக்கிறார்களாம்! 'சபாக்கள் நல்ல ரசிகர்களைத் தரவில்லை அதனால் சபாக்களுடன் தாம் ஒத்துழைப்பதில்லை' என்று எந்த இசைக் கலைஞராவது எப்போதாவது கூறியிருக்கிறாரா என்ன?

சென்னை — எஸ். கிருஷ்ணசாமி

''சிறிய சபாக்களின் பெரிய பணி'' என்ற கட்டுரையில் 'ராகமாலிகா'வை மறந்துவிட்டீர்களே! 1967ம் ஆண்டு ''ராகமாலிகா'' உதித்தது. சென்னை நகரில் மட்டுமின்றித் தமிழ் நாட்டுக்கே சேம்பர் மியூஸிக்குக்கு வழி காட்டி ''ராகமாலிகா''தான்.

பழைய சம்பிரதாய சங்கீதத்துக்கு ஆதரவும் போஷிப்பும் இல்லையே என்று ஆத்மார்த்தமாக சங்கீதம் கேட்க வகை செய்யும் ஒரு சிறு சபையை சில கட்டுத்திட்டங்களுடன் ஆரம்பிக்கலாமே என்ற எனது யோசனையை ஆதரித்தனர் திரு வி. பி. ராமன் அவர்களும், திரு ராமகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். அவர்களும்.

இருநூறுக்கும்மேற்பட்ட தரமான கச்சேரிகளை 'ராகமாலிகா' சார்பில் அளித்த பின்னர் நாங்கள் வெளி நாடுகள் செல்ல வேண்டிய தருணத்தில் தற்காலிகமாக 'ராகமாலிகா, நிகழ்ச்சிகள் நிறுத்தி வைக்கப்பட்டன, அங்கத்தினர்களின் அனுமதியின் பேரில்.

நாங்கள் மறுபடியும் தாயகத்துக்கு வந்துவிட்டபடியால், கூடிய விரைவில் ''ராகமாலிகா'' புதிய உத்திகளுடன் மலர இருக்கிறது.

சென்னை-40 — நா. விஸ்வநாத்



✖ எஸ். கிருஷ்ணசாமி



✖ விஸ்வநாத்

இந்த வாரம் (30–12–79 இதழ்) சக்களத்தி பட விமர்சனம் பார்த்தேன். இந்தப் படத்தில் கதாநாயகி, ஓர் எறும்புடன் பேசுவது போல் ஒரு காட்சி வந்துள்ளது. இது பிரபல மராத்தி நாடக ஆசிரியர் விஜய் டெண்டுல்கர் எழுதிய ஸகாராம் பைண்டர் என்ற நாடகத்திலிருந்து அப்படியே எடுத்தாளப்பட்ட காட்சியாகும்.

சென்னை-35 — எஸ். வி. எஸ்.

இலங்கை இந்திய அரசாங்கங்கள் சமீப காலமாக பாஸ்போர்ட் மற்றும் விசா வழங்குவதில் நிலவிய கெடுபிடிகளைத் தளர்த்திய பிறகு இரு நாடுகளுக்கும் இடையில் மக்கள் போக்குவரத்து அதிகரித்துள்ளது.

தலைமன்னார் ராமேசுவரம் வழிப் பயணத்தில் அநேக சந்தர்ப்பங்களில் மூன்று நான்கு தினங்கள் கூட ஆகின்றன. இவ்வாறு பிரயாணம் செய்பவர்கள் சாதாரண மக்கள். இவர்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்களைப் பார்க்கும் ஆர்வத்தோடு பணத்தைச் செலவு செய்து கொண்டு தமிழகத்துக்கு வருபவர்கள். அத்தகைய அப்பாவி மக்கள் ராமேஸ்வர சுங்கப் பகுதியினரின் பொருட்கள் பறிமுதல்கள், கெடுபிடிகளுக்கு உள்ளாகின்றனர். பிரயாணிகளுக்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டிய மூட்டை தூக்கிகள் எதேச்சாதிகாரமாக நடக்கின்றனர். காவல் துறையினர் பாராமுகம் காட்டுகின்றனர். பயணிகளைச் சுரண்டுவதற்கென்று ராமேஸ்வரம் இறங்கு துறையிலும் புகையிரதப் பகுதிகளிலும் சுற்றித் திரியும் மோசடிப் பேர்வழிகளின் தொல்லைகள் வேறு. இவ்வளவு கஷ்டங்களையும், வேதனைகளையும் பிரயாணிகள் பசி, பட்டினியோடு அனுபவிப்பதைப் பார்க்கும்போது தமிழ் நாட்டுக்கு வரும் பிரயாணிகள் கவலைக்கும் பெருத்த ஏமாற்றத்துக்கும் உள்ளாகிறார்கள்..

தமிழக அரசு இவ்விஷயங்களைப் பரிசீலனை செய்து பிரயாணிகள் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களையும் ஊழல்களையும் தவிர்க்க வேண்டும்.

கண்டி — மு. பெரியசாமி

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சோகதி பலபல செப்புகின் றாரும்

பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்

மெய்வந்த திருவருள் விளக்கம்ஒன் றில்லார்
மேல்விளைவு அறிகிலர் வீண்கழிக் கின்றார்

எய்வந்த துன்பொழித்து அவர்க்குஅறிவு அருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பம்தந் தீரே!

— திருஅருட்பா

ஓவர்'28


பி.வி.ஆர்

ஒரு வி.கே. நாயுடு கோப்பை பந்தயத்தின்போதுதான் முதன் முதலாகப் பதினான்கு வயது நடக்கையில் அவன் கார்த்திக்கைப் பார்த்தான். ஏற்கனவே கல்லூரிப் பந்தயத்தில் அவன் எடுத்த 117 ரன்களைப் பற்றி இரண்டு பத்திரிகைகள் ஒரே சமயத்தில் புகழ் பாடியிருந்தன. அண்ணா மோகன் கார்த்திக்கைப் பற்றி வாயாரப் புகழ்ந்தான். யாரைப் பற்றியும் பெருமையாகப் பேசியறியாத அண்ணாவே மனம் விட்டுச் சொல்வது என்றால் நிச்சயமாக ஏதோ இருக்கிறது என்று அவன் நினைத்தான். நம்பினான். அவனுடைய ஆட்டத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

முதன் முதலாக அவனைப் பார்த்தான். அனாவசியச் சதையைக் குறைத்த உடல். ஒல்லியாக இருந்ததால் உயரத்தை எடுத்துக் காட்டியது. கல்லூரி மாணவனுக்குத் தேவையான லட்சணங்கள் ஒன்றுகூட இல்லை. ஸைட் பார்ன்ஸ் இல்லை. மீசை இல்லை. ஏன் தலைமுடி கூட நாடக ராஜாக்களைப் போல இல்லை.

அவன் பார்த்த முதல் ஆட்டத்திலேயே அவன் அவனை ஏமாற்றினான். முதல் பந்து காலில் பட்டது. அம்பயர் கையைத் தூக்கினார். கார்த்திக் திரும்பி வந்தான். பூஜ்யம் எடுப்பவர்கள் தலை குனிந்து வருவதை அவள் கண்டிருக்கிறாள். அப்படித்தான் வரவேண்டும் என்று சட்ட திட்டங்கள் இருக்கின்றன என்றுகூட நினைத்திருக்கிறாள். ஆனால் கார்த்திக் புன்சிரிப்புக் குலையாமல் தலை நிமிர்ந்து கையில் இருக்கும் பாட்டை வீசிக்கொண்டே திரும்பி வந்தது அவனுடைய மனத்தில் ஓர் அழியாத புதுமைச் சித்திரமாகப் பதிந்து விட்டது.

இப்போது சேப்பாக்கம் மைதானத்தில், பதினொரு பேரில் ஒருவனாகக் கார்த்திக் நின்று கொண்டிருந்தான். அவனுடைய முதல் டெஸ்ட் அவனுடைய பிறந்த மண்ணிலேயே. அதுவும் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக. ரஞ்சிக் கோப்பையில் ஏழு சதங்கள், ஒன்பது ஐம்பதுகள், திலீப் டிராபியில் ஒரு சதம், இரண்டு ஐம்பதுகள். ஸ்ரீலங்காவுக்கு ஒரு அணி சென்றபோது, கார்த்திக்கையும் அழைத்திருந்தார்கள். அது



டெஸ்ட் அணி இல்லைதான். அங்கே அவன் கொழும்பு, ஜாப்னு இரண்டு இடங்களில் சதங்களைக் குவித்தான்.

ஒரு புது விசுவனுத்.
ஒரு புது ஸி. கே. நாயுடு.
ஒரு புது கவாஸ்கர்.

இப்படி யெல்லாம் பத்திரிகைகள் எழுத ஆரம்பித்தன. பத்திரிக்கைகளில் அவனைப் பற்றிச் செய்திகள் வந்தபோது பூர்ணிமா பெரிதாக நினைக்கவில்லை. காரணம் அவர்களிடையே சந்திப்பு ஏற்படாததுதான்.

ஒரு நாள் தற்செயலாகச் சந்திப்பு ஏற்பட்டது. அப்பாவிடம் அவன் ஒரு வழக்கு சம்பந்தமாக வந்தான். சட்டப் படிப்பை முடித்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. பிரபல அட்வகேட் சூரியின் பிள்ளை. சூரி அவனை அவனுடைய தந்தையிடம் அனுப்பியிருக்கிறார்.

ஞாயிற்றுக் கிழமை.
காலை ஏழரை மணி.
அப்பா ஊஞ்சலில் அமர்ந்து அன்றைய ஹிந்துவில் மூழ்கியிருக்கிறார்.

''நமஸ்காரம்சார்'' என்ற குரல் கேட்கிறது.

''வா வா கார்த்திக்!'' என்று அப்பா குரல் கொடுத்தபோது தான் புரிந்து கொண்டாள். கார்த்திக் ஒரு அட்வகேட் என்றும் சூரியின்பிள்ளை என்றும் அவனுக்குத் தெரியும். சூரியும் அவனுடைய அப்பாவும் ஸ்கூல் நாட்களிலிருந்து தோழர்கள். ஆர்வமாக அவன் கவனித்தாள்.

கறுப்புக் கரை வேஷ்டி. சில்க் ஷர்ட். அதுவும் முழுக்கை. கமலஹாஸனுக்குப் புது வேடம் போல இருந்தது.

''அப்பா இன்னிக்குப் பாம்பே போருர். வர நாலு நாள் ஆகும். இரண்டு முக்கியமான கேஸ் நாளைக்கு வர்றது.''

''என்னைப் பார்க்கச் சொன்னுருக்கும்'' என்ருர் அப்பா. ''ஏன் நீயே பாரேன்.''

''பெரிய கேஸ்....''

''தைரியமில்லையா?''

அப்பா சிரித்தார்.

''என் தைரியம் மட்டும் போதும்னு நான் ரெடி. ஆனு அப்பாவுக்கு என்னைப் பற்றி இன்னும் தைரியம் வரலையே....''

''கிரிக்கெட் எப்படி இருக்கு? அடிக்கடி உன் பெயரைப் பார்க்கிறேன்.''

''இருக்கு. அப்பாவுக்குப் பிடிக்கலை.''

''உன் அப்பாவுக்கு என்னதான் பிடிச்சிருக்கு? அது சரி, இன்னிக்கு ஞாயிறு ஆச்சே மாட்ச் இல்லையா?''

''இருக்கு. லீக்.''

''இப்படி லீகும் ரஞ்சியும் மட்டும் ஆடினு எப்படி? என்னிக்கு டெஸ்டிலே ஆடப் போறே?....''

''வேளை வரலே.''

''வயசு இருபத்துநாலு ஆயிடுத்தே. இல்லையா....?''



''இருபத்தஞ்சு. நான் கவலைப்படவில்லை. என்னைவிட நன்னா ஆடறவங்க நிறையப் பேர் இருக்காங்க....''

கார்த்திக் சென்றதும் ''நீ என்ன நினைக்கிறே?'' என்று கேட்டார் அப்பா. பேபி என்ற தம் பெண் பூர்ணிமாவிடம்.

''எதைப் பத்தி?''

அவர் மனைவி சீதா கேட்டுக் கொண்டே வந்தாள்.

''நீயா? நான் உன்னிடம் கேட்கவில்லை. பேபியிடம் கேட்டேன்....''

''அதுதான் எதைப் பத்தின்னு கேட்டேன்.'' சீதா அழுத்தத்துடன் பேசினாள்.

''சூரி பிள்ளை... கார்த்திக்.''

''இதை அவளிடம் கேட்பானேன். என்னிடம் கேளுங்கள்.''

''சரி, கேட்கிறேன். நீ என்ன நினைக்கிறே?''

''ஜாதகம் நன்றாகப் பொருந்தியிருக்கு.''

''அப்ப சட்டுபுட்டுன்னு வேலையை ஆரம்பிக்க வேண்டியது தானே. ஏன் நிக்கறே?''

''ஒரு பொம்மனாட்டி செய்கிற காரியமா?''

''கல்யாணங்களிலே அவா தானே பட்டும் தங்கமும் வைரமுமா அங்குமிங்குமா சுத்திச் சுத்தி வர்றா... சரி சரி இப்பவே சூரிக்கு போன் பண்றேன்... அவன் பம்பாய் போறானாம். எதுக்கும் பேபியிடம் ஒரு வார்த்தை கேட்டுடறேன்.''

''நீங்க உங்க வாயை மூடிண்டு இருங்கோ. அவ கிட்டே எதை எப்போது எப்படிக் கேட்கணும்னு தெரியும்.''

கார்த்திக் 'பெண்' பார்க்க வந்தான். அன்று இரவே பம்பாய் செல்ல வேண்டுமாம். இனிப் ட்ராபி அப்புறம் தேவ்தார் கப்....

தை மாதத்தில் நாள் நிச்சயம் பண்ணினார்கள்.

மார்கழியில் திடீரென்று ஒரு அறிவிப்பு ரேடியோவில் வந்தது. பூர்ணிமா கேட்கவில்லை. அம்மா கேட்டாள்.

''டீ, பேபி, மெட்ராஸ் டெஸ்ட் எப்ப ஆரம்பம்?''

''பொங்கல் சமயத்தில் நடக்கும்.''

''கிரிக்கெட் பார்க்கப் போகும்போது, ஜெபமாலை எதற்கு?''

''இந்தியா தோற்கும்போலிருந்தால் வருண ஜெபம் புரிய....''

கிரிக்கெட் தமாஷ் ③



''எத்தனாவது டெஸ்ட்?''

''நாலாவதுன்னு நினைக்கிறேன். ஏன், எதுக்குத் திடீர்னு கிரிக்கெட் பத்தி விசாரிக்கிறே?''

''மாப்பிள்ளை டெஸ்டில் ஆடறான். ரேடியோவில் சொன்னா.''

பூர்ணிமா ஆடிப் போனாள். உடல் சிலிர்த்தது.

கார்த்திக் டெஸ்ட் பிளேயர்.

''என்னம்மா, ஏதோ ஒரு ரயில் லேட்டா வந்தது என்கிற மாதிரி இவ்வளவு பெரிய விஷயத்தை உப்புச் சப்பில்லாமல் சொன்னே!''

''இப்ப எனக்கு உப்பும் சப்பும் உன் கல்யாணம்தான். ஜனவரி இருபத்தெட்டு முகூர்த்தம். மெட்ராஸ் டெஸ்ட்டுக்கு அப்புறம் பம்பாய் கல்கத்தான்னு அவன் போனால்....?''

பூர்ணிமா மௌனமாக நின்றாள். சென்னை, அதன் பிறகு அவன் முதல் டெஸ்டில் நன்றாக ஆடினால் மற்ற டெஸ்டுகளிலும் ஆடுவான். ஏப்ரலில் இந்திய அணி இங்கிலாந்து செல்லுகிறது. செப்டம்பர் முதல் வாரத்தில் தான் திரும்புவார்கள். அப்புறம் ஒரு மாதம் ஓய்வு, அக்டோபர் — நவம்பரில் ஆஸ்திரேலியா...

''என்னடி அசந்து நின்னுட்டே ... போன் அடிக்கிறது.''

''ஹலோ.... 74741....'' என்றாள். குரல் நடுங்கியது.

''கார்த்திக் பேசறேன்.''

''கங்க்ராஜுலேஷன்ஸ்.'' அவள் குரலில் குதூகலம் இல்லை.

''தாங்க்ஸ், பூர்ணிமா. இருபத்தஞ்சு வயசிலே இப்படி ஒரு சான்ஸ் கிடைக்கும்னு நான் எதிர்பார்க்கலே....''

''உங்க ஜாதகத்திலே ரெண்டு கிரகம் உச்சம். அம்மா சொன்னா.''

''ஏன் உன் குரல்லே கணீர் இல்லே. தொண்டையிலே ஏதாவது சிக்கியிருக்கா?''

''ஜனவரி இருபத்தெட்டை நினைச்சேன்.''

''அதை நினைச்சு, தொண்டை கம்மிப் போகுமா?''

''டெஸ்ட் பிளேயர் ஆகி விட்டீங்க.''

''உனக்குப் பெருமையா இல்லையா?''

''யார் இல்லேன்னா. ஆனா ஜனவரி இருபத்தெட்டாம் தேதி எங்கே என்ன டெஸ்ட்டோ?''

''ஓ. ஆமாம். என்னை ஸெலக்ட் பண்ணினா பாம்பேயிலே ஆடும்படி இருக்கும். ஆனா, அதுக்கு நீ ஏன் கவலைப்படறே?''

அவன் சொல்லி விட்டு டெலிபோனை வைத்தான்.

முதல் நாள் ஆட்டத்தில் சுவாரசியமில்லை. இந்தியாவுக்கு எதிராக ஆடிய மேற்கு இந்திய அணி பிசுபிசுத்தது. ஐம்பதாயிரம் பேர்களுள் ஒருத்தியாக பூர்ணிமா உட்கார்ந்திருந்தாள். அவள் அருகே விமூ. டெஸ்ட் பிளேயர் ஜோதிர் மனைவி.

இடைவேளையின் போது பூர்ணிமா அவளைத் தன் வீட்டுக்கு அழைத்தாள்.

பொங்கும் மங்களம் என்றும் தங்கிட...

கழனிகள் விளைந்தன
களஞ்சியங்கள் நிரம்பின
உழவர்கள் உள்ளமெல்லாம்
உவகையின் துள்ளல்!
ஆட்டமும், பாட்டும்,
ஆற்றல் மிகு விளையாட்டும்,
குரவையும், கூத்தும்
எங்கெங்கு காணினும்.

நன்றியை நவில,
புதுநெல் குத்தி புத்தரிசி எடுத்து,
பொங்கல் ஆக்கி,
கதிரவனுக்குப் படைத்து
கன்று காலி
உற்றார் உறவினர்
உண்டு களிக்கும் நாளே
பொங்கல் நாள்!



இந்த இன்பமிகு நாளில், எதிர்காலப் பாதுகாப்புக்கு வகை செய்யும் ஆயுள் இன்சூரன்சு பற்றிச் சிந்திப்பீர்.

உங்கள் குழந்தைகளின் உயர்கல்வி, திருமணம், உங்கள் மகிழ்ச்சிகரமான முதுமைக் காலம் ஆகியவற்றிற்கு உகந்த பாலிசிகள் பற்றித் தெரிந்து கொள்ள இன்றே ஒரு எல்.ஐ.சி. முகவரைச் சந்தியுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை

EP-LIC-SZ-3-79/80

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன்

பாதுகாப்பான எதிர்காலத்திற்கு இன்றே இன்ஷ்யூர் செய்யுங்கள்.

காரில் வரும் போது, ''ஒரு டெஸ்ட் பிளேயரின் மனைவின்னு என்னன்னு உனக்கு இப்பப் புரியாது'' என்றாள் விமு.

''ஏன்?''

''ஜோதிரும் நானும் சந்திக்துக் கொண்ட நாட்களை விரல்களால் எண்ணி விடலாம். அவர்கூட நான் சேர்ந்து பத்து நாள் தங்கியது ஒரு ஆஸ்பத்திரியில். அவருக்கு ஒரு ஆபரேஷன். ஆனா ஆஸ்பத்திரியில் படுக்கைக்கு அருகே இருப்பதில் என்ன சுகம் இருக்கிறது?''

மௌனமாய்க் காரை ஓட்டிச் சென்ற பூர்ணிமா, ''பொறுமையாக இருக்க வேண்டியது தான்!'' என்றாள்.

''சில சமயங்களில் எரிச்சல் எரிச்சலாய் வருகிறது. அவர் ஒரு ஓட்டலில் தங்கியிருக்கிறார். நான் வேறு ஒரு ஓட்டலில் தங்கியிருக்கிறேன். ஒரே ஓட்டலில் தங்கக் கூடாதாம்.''

''கிரிக்கெட்டின் நன்மைக்காக....''

''இல்லேன்னு சொல்லலே. ஆனா ஒரு பெண் கலியாணமானதிலிருந்து புருஷன் கூடவே அதிகம் இல்லாவிட்டால் என்ன கஷ்டம்! ஆனா இது இப்ப உனக்குப் புரியாது... இதுதானே கார்த்திக்கின் முதல் டெஸ்ட்...''

''எங்க கல்யாணம் இன்னும் நடக்கவில்லே!'' என்றாள் பூர்ணிமா. உள்ளூற ஒரு பயம் அவளை வாட்டிக் கொண்டே யிருந்தது. விமு இப்போது பரிதவிப்பது போல அவளும் ஒருநாள் பரிதவிப்பாளோ? ஏங்குவாளோ? இரட்டைக் கட்டிலில் ஒற்றைப் படுக்கையில் தன்னந்தனியாக உறக்கம் பிடிக்காமல் தவிப்பாளோ?

இரண்டாம் நாள் ஆட்டம். இந்திய அணி ஆட்டத்தை ஆரம்பித்தது. முதல் ஓவரிலேயே மூன்றாவது பந்து வீச்சில் ஜோதிர் ஆட்டமிழந்தான்.

நிமிர்ந்த தலையுடன் மட்டையை வீசிக் கொண்டு கார்த்திக் போய்க் கொண்டிருந்தான். தமிழ் மண் ஆரவாரம் செய்தது. முதல் டெஸ்ட். இதுவரையில் ஒன் டவுனில் சென்ற தமிழ் பேட்ஸ்மென் யாருமே இல்லை என்று சிலர் சரித்திரத்தை ஆராய்ந்து கூறினார்கள்.

என்ன நடக்கும்? ஜோதிர் அடைந்த கதியா? பெரிய ஸ்கோரா? போர்டைப் பார்த்தாள்.

பூஜ்யம், எல்லாம் பூஜ்யம்.

பூர்ணிமா தன்னை இழந்தாள். கார்த்திக்கும் ஒரு பூஜ்யத்துடன் திரும்பி வருவானோ?

முதல் பந்து. நான்கு.


ரேடியோ அலறியது.. ப்யூட்டிஃபுல் கவர் ட்ரைவ். ஆன் தி வே டு தி பௌண்டரி..

அன்றைய ஆட்டத்தில் ஹீரோ கார்த்திக்—அவன் எடுத்த ரன்கள் 102. கிரிக்கெட் வானில் ஒரு புது நட்சத்திரம் பிறந்து விட்டதாகப் பத்திரிகைகள் கொக்கரித்தன..

நான்காவது நாள் ஆட்டத்தின் இறுதியில் அடுத்த டெஸ்ட்டுக்குப் பெயர்கள் அறிவிக்கப் பட்டன. பூர்ணிமா திடுக்கிட்டாள்.

ஓட்டலுக்குப் போன் செய்தாள். டெஸ்ட் நடக்கும்போது வீட்டில் தங்க கார்த்திக்குக்கு உரிமை இல்லையோ?

பலமுறை டயல் செய்த பின், பல நிமிடங்கள் காத்த பின் கார்த்திக் கிடைத்தான்.



''உங்கள் பெயர் இல்லை.'' பூர்ணிமா இரைந்தாள்.

''என் லட்சியம் நிறைவேறி விட்டது பூர்ணிமா.''

''சதம் எடுத்தவரை நீக்கியிருப்பது என்ன நியாயம் கார்த்திக்?''

சிரிப்பொலி கேட்டது.

''என்ன மௌனமா இருக்கீங்க கார்த்திக்?''

''இல்லையே, சிரித்தேனே!''

''ஏன் உங்களை செலக்ட் பண்ணவில்லை?''

''பாலிடிக்ஸ்; நாளைக்குப் பேப்பரைப் பார்! அது எப்படியோ போகட்டும். என் லட்சியம் டெஸ்டில் ஆடவேண்டும் என்பது தான். அது பூர்த்தியாகி விட்டது. அடுத்த லட்சியத்தை நோக்கி இப்போது போக வேண்டும்....''

''அதாவது?''

''என் தகப்பனாரைப் போல சிறந்த வழக்கறிஞராக, சிறந்த மனிதராக, சிறந்த கணவராக, சிறந்த தகப்பனாராக....''

அவன் தன் லட்சியங்களை அடுக்கிக் கொண்டே போனான்.

'ஜனவரி 28' அறையில் காலண்டர் இல்லை. ஒன்றுகூட இல்லை. ஆனால்—

சுவரெல்லாம் 'ஜனவரி 28' என்று எழுதினாற் போல இருந்தது.

கையில் இருந்த டெலிபோன் ரிஸீவரை இருக்கையில் வைக்கவும் பூர்ணிமா மறந்து போனாள்.

அவன் நிச்சயமாக ஒரு விமு இல்லை.

இந்த எண்ணம் திடீரென்று உதித்தபோது அவள் மனம் பால் குடம் போல் நிறைந்தது.

அங்கு வழிகாட்டியாகப் பணியாற்றும் இளம் பெண் மணி இந்துக்களின் வழிபாட்டு முறைகளைப் பற்றிப் பல விவரங்கள் தெரிந்து வைத்திருந்தார். மேலே ஒரு ஸ்வெட்டரும் முழங்கால் அளவுள்ள பாவாடையும் அவர் அணிந்திருந்தாலும் அவருடைய கரங்களை நம் நாட்டு வளையல்கள் அலங்கரித்திருந்தன. கழுத்தில் சங்கு மாலை, கால்களில் கொலுசு— இப்படித் தம்மை இந்தியாவுடன் இணைத்துக் கொள்ள முயன்றிருந்தார் அந்தப் பெண்மணி.

5000 கிலோமீட்டருக்கு அப்பால், பாலை வனத்துக் கிடையே தங்கள் கடவுளான சிவனைக் கண்டு, அவனை வழிபடுவதற்காக அங்கே நூறு ஆண்டுகளுக்குமேல் தங்கியிருந்த சிவனடியார்களின் நினைவு எனக்கு வியப்பைத் தந்தது. அதைவிடப் பெரு வியப்பு, அந்தக் காலத்தில் அஜர்பைஜானை ஆட்சி செய்த முஸ்லிம் அரசர்கள் அவர்களுக்கு இடம் அளித்துப் பாதுகாப்புத் தந்தது. சமயத்

நான் கண்ட ரஷ்யா

அகிலன்

துறையில் அவர்கள் கொண்டிருந்த பரந்த கண்ணோட்டத்தை அது காட்டுகிறது.

அங்கிருந்து பாகூவுக்குத் திரும்பி வந்து காஸ்பியன் கடற்கரையில் காற்று வாங்கினோம். சென்னை 'மெரினா'வைப் போன்ற மணல் நிறைந்த கடற் கரையல்ல அது. பம்பாயில் உள்ள 'மரீன் டிரைவ்' போன்ற சிமெண்டுத் தளமும் தடுப்புச் சுவரும் கொண்டது. ஆனால் பம்பாயில் மரீன் டிரைவில் பொதுமக்கள் காற்று வாங்க முடியாது. தனியார்களின் கட்டிடங்கள் காற்றையும் இடத்தையும் அடைத்துக்கொண்டு நிற்கின்றன. ஆனால் பாகூ கடற்கரையோ மக்கள் கூட்டம் காற்று வாங்குவதற்கென்றே உருவாக்கப் பட்டது. கடற்கரையில் வரிசை வரிசையாக மரங்கள்; மரத்தடிகளில் பெஞ்சுகள்; மரங்களுக்குப் பின்னே பூங்காக்கள். இரண்டு பர்லாங் இடைவெளி விட்டு நெடுந்தொலைவுக்கு அப்பால்தான் கட்டிடங்களை எழுப்பியுள்ளனர். திறந்த வெளிகளில் பரிமாறும் சிற்றுண்டி விடுதிகளும் ஐஸ்கிரீம் கடைகளும் மட்டிலுமே கடற்கரையில் உள்ளன. மாலை வேளைகளில் ஆயிரக் கணக்கில் அங்கே வந்து மக்கள் கூடுகிறார்கள்.

கடலில் அலையே இல்லை. திட்டுத் திட்டாக எங்கு பார்த்தாலும் தண்ணீரின் மேல் எண்ணெய் மிதக்கிறது. பெட்ரோல்தான். காற்றிலும் பெட்ரோல் மணம் கமழ்கிறது. ஆனால் அந்தக் காற்று உடலுக்கு மிகவும் நல்லது என்று அங்குள்ள மருத்துவர்கள் கூறுகிறார்கள் ஆரோக்கியமான பகுதி (Health Zone) என்றே சில இடங்களை ஒதுக்கிவிட்டு, அங்கே மக்களை வந்து காற்று வாங்கச் சொல்லுகிறார்கள்.


அன்று இரவு விமானத்தில் மாஸ்கோ திரும்புவதாக இருந்தது. வானிலை சரியாக இல்லை. மிகுந்த காற்று வீசியதால் மறுநாள் காலையில்தான் விமானம். ஆகவே அறையில் வந்து படுத்தேன். கண்ணாடிச் சுவர் வழியே காஸ்பியன் கடலைப் பார்த்தேன். கடலில் மிதந்த கப்பல்களின் மின் விளக்குகள் சரம் சரமாக ஜொலித்துக் கொண்டிருந்தன.

மறுநாள் காலை விமானத்தில் மாஸ்கோவுக்குப் புறப்பட்டோம். அன்று மாஸ்கோவில் தங்கி, மறுநாள் நான் மட்டும் லியோ டால்ஸ்டாய் வாழ்ந்த பண்ணையான 'யாஸ்னயா பாலியானா'வுக்குச் சென்று திரும்புவதாகத் திட்டம். மாஸ்கோவிலிருந்து போய் வருவதற்குச் சுமார் 500 கிலோ மீட்டர் ஆகும் என்றார்கள். டால்ஸ்டாய் பண்ணையிலிருந்து திரும்பியவுடன் அவசரம் அவசரமாக டில்லி விமானத்தைப் பிடிக்க விரைந்து செல்ல வேண்டியது தான்.



⌘ வீட்டுத்தோட்டத்தில் டால்ஸ்டாய்.

ரஷ்யச் சிரிப்பு!





✖ டால்ஸ்டாயின் எளிய புதைகுழி -அவர் விரும்பிய ஆறடி மண்!

15. டால்ஸ்டாய் பண்ணை

1979, ஜூலை 4—மாஸ்கோ—ஹோட்டல் வார்ஸா:

அதிகாலையில் எழுந்து மாஸ்கோவிலிருந்து 225 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள 'யாஸ்னயா பாலியானு' கிராமத்தில் உள்ள டால்ஸ்டாய் பண்ணைக்குப் புறப்படுவதற்குத் தயார் செய்து கொண்டிருந்தேன். உடன் வந்த இந்திய நண்பர்கள் யாரும் என்னோடு வருவதாக இல்லை. அன்று இரவே டில்லிக்குப் புறப்பட வேண்டும் என்பதாலும், பிரயாணக் களைப்பாலும் வேறு வேலைகள் அவர்களுக்கு மாஸ்கோவில் இருந்ததாலும் அவர்கள் தங்கி விட்டனர்.

கருங்கடல் கரையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த என்னுடைய நண்பர் விக்டர் ஃபூர்னிகா, என் பொருட்டு முன்னதாகவே மாஸ்கோவுக்குத் திரும்பி விட்டார். அவரும் நானும் மௌரீனுவும் காலை எட்டு மணிக்கெல்லாம் காரில் புறப்பட்டோம். மாஸ்கோவின் தென் மேற்குப் பகுதியில் துலா நகரத்தை அடுத்திருக்கிறது அந்தக் கிராமம்.

நான் அன்று மாலைக்குள் திரும்பி வந்து டில்லிக்கு விமானத்தில் கிளம்ப வேண்டும். ''இது முடியுமா?'' என்று சற்றுக் கவலைப் பட்டனர் நோவோஸ்டி பத்திரிகை நிறுவனத்தார். 450 கிலோ மீட்டருக்கு ஏழுமணி நேரப் பயணம், சுற்றிப் பார்க்க 2 மணிப் பொழுது என்று கணக்குப் போட்டேன் நான். பிற்பகலில் திரும்பி வந்துவிட முடியாதா என்ன? இரவு எட்டுமணிக்கு ஓட்டலை விட்டு விமான நிலையத்துக்குப் புறப்பட்டால் போதும்.

மாஸ்கோ நகரத்தை விட்டு எங்களுடைய கார் சுமார் 30 கிலோ மீட்டர் வெளியில் வந்த பிறகுதான், நண்பர்கள் ஏன் அப்படிக் கவலைப்பட்டார்கள் என்பது எனக்கு விளங்கியது.

சாலை மிகவும் விசாலமான சாலைதான். என்றாலும் அதை அடைத்துக் கொண்டு நகரத்திலிருந்து செல்லும் லாரிகள்; அதை விட இரு மடங்கு நகரத்தை நோக்கி வரும் லாரிகள். ஒரே லாரிகள், லாரிகள், லாரிகள்! நூற்றுக் கணக்கான லாரிகளுக்கிடையில் எங்கள் கார் 20 கிலோ மீட்டர் வேகத்தில் ஊர்வலம் செல்ல வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு விட்டது. அட, கடவுளே! டால்ஸ்டாய் பண்ணைக்குப் போய்ச் சேருவதற்குள் பொழுது சாய்ந்து விட்டால், பிறகு விமானத்தைக் கோட்டை விட வேண்டியதுதானா?

வேறு வழியில்லாமல் நான் லாரிகளை வேடிக்கை பார்க்கலானேன். சுமார் 30 வகையான ராக்ஷஸ லாரிகள்; நான்கு சக்கரங்கள், ஆறு சக்கரங்கள், எட்டுச் சக்கரங்கள். நூற்றுக் கணக்கான குன்றுகள் அசைந்து செல்வது போலவும் எதிர்ப்பட்டு வருவது போலவும் இடையில் எங்களுடைய சின்னஞ் சிறு கார் அகப்பட்டுக் கொண்டு விழிப்பது போலவும் எனக்குத் தோன்றியது.

'தனிப்பட்ட மனிதர்களின் உல்லாசத்துக்கு அந்த நாட்டில் அதிகமான சொந்தக் கார்கள் இல்லை' என்று குறைப்படுபவர்கள் இந்தக் காட்சியைக் கண்டிருக்க வேண்டும். எல்லா மக்களின் பொதுவான வாழ்க்கை வளத்தைச் சீராக உயர்த்துவதற்காக அங்கே பல நூற்றுக் கணக்கான லாரிகள் இழைந்து கொண்டிருந்தன. நாட்டின் உழவுக்கும் தொழிலுக்கும் இவை இரவு பகலாகச் சேவகம் செய்து கொண்டிருந்தன.

இடையிலே நூதனமான தோற்றமுள்ள ஒரு சின்னஞ் சிறு டிரக் புகுந்து எங்களுக்குமுன் செல்லவே, எங்கள் டிரைவர் அதைச் சாமர்த்தியமாகப் பின்பற்றலானார்.

''என்ன கார் அது?'' என்று கேட்டேன்.

''வழியில் லாரிகள் பழுதடைந்துவிட்டால், அவற்றைப் பழுது பார்க்கும் மனிதர்களும் இயந்திரங்களும் அதில் இருக்கிறார்கள். வழியிலேயே பழுது பார்த்துக் கொள்ளலாம்.''

ஒருவகையில் அந்த வண்டி வந்து எங்கள் கார் விரைந்து செல்வதற்குத் தன்னையறியாமல் துணை செய்தது என்று சொல்லலாம். அது எழுப்பிய நூதனமான ஒலியை லாரி டிரைவர்கள் புரிந்து கொண்டார்கள் என நினைக்கிறேன். அதற்கு அவர்கள் விட்ட வழியில் நாங்களும் புகுந்து முன்னேறினோம்.

வழியெங்கும் இரு பக்கங்களிலும் பசுமை போர்த்த பர்ச் மரக் காடுகள் முதலில் தென்பட்டன. நம் நாட்டில் உள்ளதைப் போல் அருகருகே கிராமங்களை அங்கு காண முடியவில்லை. நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் சென்ற பிறகு சின்னஞ் சிறு கிராமங்கள் தென்படுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் ஐம்பது—நூறு வீடுகள் இருந்தால் அதிகம். தொலைவில் தெரிந்த சில கூட்டுப் பண்ணைகளில் இருநூறு வீடுகள் இருக்கக் கூடும். மரத்தினாலோ கல்லாலோ கட்டப்பட்ட சின்னஞ் சிறு ஓட்டு வீடுகள். ஒருசில வீடுகளுக்கருகில் விறகுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கவனித்தேன்.

நகரத்தில் கிடைக்கும் எல்லா வசதிகளும் அங்கே கிடைக்க வாய்ப்பில்லை. நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே வாழ்க்கை வசதிகளில் ஓரளவு வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நம்முடைய கிராமங்களுடன் ஒப்பிடும்போது, அந்த நாட்டுக் கிராமங்கள் எவ்வளவோ வளர்ச்சி யடைந்துள்ளன என்பதில் ஐயமில்லை. கிராமப்புற மக்கள் ஆரோக்கியத்துடனும் நல்ல உடைகளுடனும் மகிழ்ச்சி நிறைந்த முகங்களுடனும் காட்சி யளிக்கிறார்கள்.

பர்ச் மரக் காடுகளைக் கடந்த பின் பாதையின் இரு புறங்களிலும் கோதுமை வயல்கள், முட்டைகோஸ், தக்காளி, உருளைக் கிழங்கு, காரட் தோட்டங்கள் தென்படுகின்றன. தண்ணீர் அங்கெல்லாம் வாய்க்கால்களின் வாயிலாகப்பாய்வதாகத் தெரியவில்லை. இயந்திர மோட்டார்கள் தண்ணீரைச் சுற்றிலும் சுழன்றடித்து அங்கங்கே மழை பெய்வது போல் பொழிந்து கொண்டிருந்தன. நூற்றுக் கணக்கான பசுக்கள் சில பகுதிகளில் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டேன். கூட்டுப் பண்ணைத் தொழிலாளர்கள் ஒரு வயலில் முட்டைக்கோஸ்களைப் பறித்துக் குவித்துக் கொண்டிருந்தார்கள். மற்றொரு வயலில் புல்லை அறுத்துப் போர் குவித்துக் கொண்டிருந்தார்கள்.

சாலையின் இரு புறங்களிலும் முதியவர்களான சில கிராம வாசிகள் பெரிய பெரிய கூடைகளில் காய் கறிகளுடன் நின்றுகொண்டிருந்தார்கள். அந்தக் காய்கறிகள் அவர்களுடைய சொந்த நிலங்களில் விளைந்த காய்கறிகளாக இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் வீட்டைச் சுற்றி அரை ஏக்கர் நிலம் வழங்கப்படுகிறது. அதில் விளைந்தவற்றை அவர்கள் மாஸ்கோவுக்கு பஸ்ஸில் சென்று விற்பனை செய்வதற்காகவோ, அல்லது பஸ் பயணிகளிடம் விற்பனை செய்வதற்காகவோ நின்று கொண்டிருந்தார்கள். இத்தகைய சொந்த விளைச்சலை விற்பதற்கென்றே அங்கே நகரங்களில் தனிக் கடைகள் இருக்கின்றன. இந்தக் காய்கறி பழங்களின் விலை சற்று அதிகமென்றாலும் இவற்றை நகரவாசிகள் விருப்பத்தோடு வாங்கிச் செல்கிறார்கள்.

வழியில் பாதையை விட்டுச் சற்று விலகி உட்புறமிருந்த ஒரு 'பெட்ரோல்' விற்பனை நிலையத்துக்குச் சென்றோம். அது 'பெட்ரோல்' நிலையமில்லை என்பது பிறகுதான் தெரிந்தது. ஐம்பது அறுபது லாரிகள் அங்கே எண்ணெய்க்காக நின்றிருந்தன. எங்கள் காருக்குப் பெட்ரோல் கிடைக்கவில்லை. டீசல் மட்டும் விற்பனை செய்யும் நிலையமாம் அது. பிறகு நெடுந்தூரம் சென்ற பிறகு அடுத்திருந்த ஒரு நிலையத்தில் பெட்ரோல் நிரப்பிக் கொண்டோம். லாரியாகட்டும், காராகட்டும், அதன் 'டாங்க்' வழிய எண்ணெய் நிரப்பிவிட்டு உரிய தொகையைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அந்த நாட்டுக்குள் இன்னும் பெட்ரோல் நெருக்கடி தலை காட்டியதாகத் தெரியவில்லை.

மூன்று நான்கு ஆறுகளைக் கடந்து நாங்கள் மேலே சென்று கொண்டிருந்தோம். தொலைவில் மரக் கூட்டத்துக்கிடையே அங்கங்கே நூற்றுக்கணக்கான 'காட்டேஜ்'கள் வரிசை வரிசையாகத் தெரிந்தன. மரஞ் செடி கொடிகளால் சூழப்பட்ட ஒரே சீரான கூரை வீடுகள். அவை கட்டப்பட்டிருந்த சூழல் மிக எழில் நிறைந்த காட்சி தந்தது. பூங்காவனத்து வீடுகள் அவை.

''கிராமமா அது?'' என்று கேட்டேன்.

''நகரத்துத் தொழிலாளர்கள் கோடை விடுமுறையில் வந்து தங்கி ஓய்வெடுப்பதற்காகக் கட்டப்பட்ட குடியிருப்புக்கள்'' என்றார் மொரீனு. செல்லும் வழியில் அத்தகைய குடியிருப்புக்கள் ஐந்தாறு என் கண்களுக்குத் தென்பட்டன.

தூலா நகரத்துக்குள் நுழையாமலே, நாங்கள் டால்ஸ்டாய் பண்ணையை நோக்கி விரைந்தோம். யாஸ்னயா பாலியானா கிராமத்தின் மருத்துவ மனை முதலில் தெரிந்தது. பிறகு பயணிகள் விடுதி வந்தது. அடுத்து டால்ஸ்டாய் பண்ணையின் முகப்பு வாயிலுக்கே நாங்கள் வந்து விட்டோம்.

(அடுத்த இதழில் முடியும்)

கிரிக்கெட் பற்றி எடின்பரோ கோமகன் தெரிவித்த சில கருத்துக்கள்

எல்லா ஆட்டங்களும் ஆடுவது போல்தான் கிரிக்கெட்டும் ஆடப்படுகிறது. ஆனால் கிரிக்கெட் ஆடுவதில் தனி விசேஷம் உண்டு. ரக்பி போல் முரட்டுத்தனமும் உண்டு; செஸ் ஆட்டம் போல் நுணுக்கமும் உண்டு. விளையாட்டுக்காரர்களுக்குத் தனித் திறமையும் உடல் வாகும் தேவை. அரசியல்வாதிகளைப் போல் கூர்ந்த மதியுடன் முடிவெடுக்கும் திறமை வேண்டும்.

நான் கிரிக்கெட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் அனுபவிக்கிறேன். நான் எட்டாவது வயதிலிருந்து கிரிக்கெட் ஆடி வந்திருக்கிறேன். நான் இன்னும் பலகாலம் அந்தப் பந்தயத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பேன். நான் எம். ஸி. ஸி.யின் தலைவராக 1949ல் ஆனபோது அதில் எவ்வளவு பெருமை அடைந்தேன் தெரியுமா?

கிரிக்கெட் ஆடுபவர் வேறு, பார்வையாளர் வேறு என்ற நிலை மாறி இப்போதெல்லாம் தாமே விளையாட்டை ஆடும்போது ஏற்படும் ஆனந்தத்தைப் பார்வையாளர்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர்! இது சுப சூசகம்.

கிரிக்கெட் கோமகன்



அனைவருக்கும் எங்களது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

உங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கும்,
மகிழ்ச்சிக்கும் உறுதுணையாக நிற்கும்
ஸ்ரீராம் ஸ்தாபனங்கள்.

- ஸ்ரீராம் பைனான்ஸ்
- ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
- ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
- ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட்ஸ்
- ஸ்ரீராம் டிரஸ்ட் (அமுதசுரபி)
- ஸ்ரீராம் டிரேடிங் & டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்

123, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை 600 001, போன்: 37890, 28545

'WAVE/SCI/1209

15 ஆண்டு சேவை நிறைவுறும்

இந்நன்னாளில் உழவர் பெருமக்களுக்கு

இந்திய உணவு கார்ப்பொரேஷன் வழங்கும்

பொங்கல் வாழ்த்துக்கள்

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து" — திருக்குறள்

உணவு தானிய உற்பத்தியைப் பெருக் விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்து அவர்கள் விளைவிக்கும் தானியங்களை அரசு நிர்ணய விலையில் கொள்முதல் செய்வது, விஞ்ஞான முறையில் சேமிப்பது, பாதுகாப்பது, நுகர்வோர்க்கு நாடெங்கிலும் உள்ள விரிவான வினியோக அமைப்புகள் மூலம் நியாய விலையில் வழங்குவது ஆகிய பணிகள் மூலம் கடந்த 15 ஆண்டுகளாக இந்நாட்டு மக்களுக்கு இந்திய உணவு கார்ப்பொரேஷன் சேவை புரிந்து வருகிறது.

பிறதொழில்களில் ஈடுபட்டிருப்பவர்க்கும் உழவுத் தொழில் மூலம் உணவு உற்பத்தி செய்து உதவும் உழவர்களுக்கு இந்தப் பொங்கல் நன்னாளில் இந்திய உணவு கார்ப்பொரேஷன் தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கிறது.



விவசாயிகள், நுகர்வோர் சேவையில்

இந்திய உணவு கார்ப்பொரேஷன்

EP-FCI-1/80

பேருச் சித்திரங்கள்!



5



6



9



7



8



3

காப்டன் அஸீப் இக்பால்

● சின்ன வயசில் காப்டன் அஸீப் இக்பாலுக்குப் பெயர் இக்பால் ரஸ்வி. இவர் இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் காரியதரிசியான குலாம் அகமதின் சகோதரி புதல்வர். மெரினா மைதானத்தில் உஸ்மானிய சர்வ கலாசாலைக் குழுவுக்கு ஆடிய அஸீப் இக்பால் சென்னை சர்வகலாசாலைக்கு எதிராகச் சதம் போட்டது அவரது இணையற்ற சாதனை. ரஞ்சித் கோப்பைக்காக அஸீப் இக்பால் மூன்று பந்தயங்கள் ஆடியிருக்கிறார். அவர் மூன்று ரஞ்சி பந்தயங்களில் 138 ரன்களும் 7 விக்கெட்டுகளும் எடுத்தார், பதினாறு வயதில்.

பதினெட்டாவது வயதில் அதாவது 1961ம் வருஷம் பாகிஸ்தானுக்குக் குடியேறினார். 1964–65ல் ஆஸ்திரேலியாவுக்கு எதிராகக் கராச்சியில் ஆடினார். பாகிஸ்தான் இதுவரை ஆடிய 53 டெஸ்ட்களில் தொடர்ந்து ஆடிய பெருமை இவருக்கு உண்டு. இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு இவர் 11 சதங்கள் எடுத்துப் புகழ் மாலை சூடியிருக்கிறார். இங்கிலாந்தில் கெண்ட் கௌண்டிக்கு இவரே காப்டன். முதல் தடவையாக அவர் பாகிஸ்தானுக்காக ஒரு டெஸ்ட் சீரியஸுக்குக் காப்டன் பதவி வகிக்கிறார். பிறந்தது ஜூன் 6ந் தேதி 1943.

மஜீத் ஜஹாங்கீர் கான்

● இவர் இந்தியாவுக்காக கிரிக்கெட் டெஸ்ட் ஆடியிருக்கிறார். இவரது கஸின்தான் இம்ரான் கான். பிறந்தது இந்தியாவில் ஜலந்தரில்தான்! இவர் 'கேம்பிரிட்ஜ் புளூ' பட்டம் வகிப்பவர். ஆங்கில கௌண்டியில் கிளாமோர்கனுக்காக ஆடியவர். ஆஸ்திரேலியாவில் குவீன்ஸ்லாந்துக்கும் ஆடியிருக்கிறார். காப்டன் இக்பால் மாதிரியே கராச்சி டெஸ்டில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் பிரவேசம் செய்தவர். இந்தியாவுக்கு வரு

1. வாஸிம்பாரி. 2. மஜீத் கான். 3. ஜாஹீர் அப்பாஸ். 4. வாஸிம் ராஜா. 5. இம்ரான்கான். 6. முதாஸர் நாஸர். 7. அஸீப் இக்பால் (காப்டன்) 8. ஜாவேத் மியான்தாத். 9. ஸாதிக் மொஹமத்.



2







''சர்க்கரைப் பொங்கலுக்குத் தொட்டுக்க வெண் பொங்கல் போறு! அப்புறம் வெண் பொங்கலுக்குத் தொட்டுக்கச் சர்க்கரைப் பொங்கல் போடலாம்!''

வதற்கு முன் 7 சதங்களை எடுத்துள்ளார். ஸ்லிப் பீல்டிங்கில் அசகாய சூரர் என்று பேர் வாங்கியவர். இந்தியாவுக்கு வருவதற்கு முன் 54 காட்ச்களைப் பிடித்திருக்கிறார். பாக்கிஸ்தான் காப்டனாகவும் இருந்திருக்கிறார். பிறந்தது செப்டம்பர் 8, 1946.

ஜாகிர் அப்பாஸ்

● இவர் தலையில் பச்சை ரிப்பனைக் கட்டிக் கொண்டு ஆடுகிறார். தாம் அணிந்துள்ள கண்ணாடியில் வியர்வை விழாதிருக்க அதை அணிகிறாராம். 1978ல் இந்தியாவுக்கெதிராக இவரது சராசரி ரன்கள் 194.33 ஆகும். இங்கிலாந்து முதல் டூரில் பர்மிங்ஹாமில் 274 ரன்கள் எடுத்துள்ளார். பிறந்தது ஜூலை 24, 1947.

ஜாவேத் மியான்தாத்

● நியூஸிலாந்துக்கு எதிராக முதல் டெஸ்ட் பிரவேசத்திலேயே லாகூரில் செஞ்சுரி எடுத்த பெருமை இவருக்கு உண்டு. இதே நியூஸிலாந்து சீரிஸில் மூன்றாவது டெஸ்டில் 206 ரன்கள் எடுத்திருக்கிறார். இந்தியாவுக்கெதிராக இவரது சராசரி ரன்கள் 179.00. பிறந்த தேதி: ஜூன் 12, 1957.

முதாஸர் நஸர்

● லாகூரில் இங்கிலாந்து கோஷ்டிக்கெதிராக சதம் எடுப்பதற்கு 557 நிமிஷங்கள் ஆயிற்று. ஆமைவேக சதத்துக்கு இது ஒரு உலக ரிகார்டு. பிறந்த தேதி ஏப்ரல் 6, 1956.

சாதிக் முகம்மது

● இவர் நான்கு சகோதரர்களில் கடைசி. அனைவரும் கிரிக்கெட் வீரர்களே. இவர் பிறந்தது குஜராத்தில் உள்ள ஜுனகாத்தில். பிறந்த தேதி: மே 5, 1945.

வாஸிம் பாரி

பாகிஸ்தான் குழுவின் விக்கெட் கீப்பர். நியூஸிலாந்துக்கு எதிராக ஆக்லண்டில் உலக டெஸ்ட் ரிகார்டு ஏற்படுத்தினர். ஒரு இன்னிங்ஸில் 7 பாட்ஸ்மன்களைக் 'காட்ச்' பிடித்துப் புகழ் சூடினர். மேற்கிந்தியத் தீவு டூரில் 1976-77ல் 16 விக்கெட் வீழ்ச்சிக்கு உதவிய விக்கெட் கீப்பர். இவற்றில் 14 காட்ச். இது பாகிஸ்தானுக்கு விக்கெட் கீப்பிங்கில் ஒரு ரிகார்டு. பாகிஸ்தானுக்குக் காப்டனாக ஆறு தடவை இருந்திருக்கிறார். பிறந்த தேதி: 1948, மார்ச் 23.

இம்ரான் கான்


● இவர் செக்ஸ் அப்பீல் உள்ள கிரிக்கெட் ஆட்டக்காரர். ஒரு மணிக்குக் கிட்டத்தட்ட 90 மைல் வேகத்தில் பந்தை எறியும் வல்லமை படைத்தவர். மேற்கிந்தியத் தீவில் 1976-77ல் ஐந்து டெஸ்ட்களில் 25 விக்கெட்டுகளை எடுத்து ஒரு ரிகார்டு கண்டார். கராச்சி டெஸ்டில் பேதியின் பந்தில் இரண்டு சிக்ஸர்கள் அடித்து வெற்றியைச் சம்பாதித்துத் தந்தவர். பிறந்த தேதி: 1952, நவம்பர் 25.

வாஸிம் ராஜா

● சகிவால் என்ற இடத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் லிமிடெட் 40 ஓவர் பந்தயம் நடந்தது. இந்தப் பந்தயத்தில் ஒரே பம்பர் வீச்சு மயம். இம்ரான் கானும் ஸர்ஃபராஸும் இந்திய பாட்ஸ்மன்களை பம்பரால் அலற வைத்து விட்டனர். இதைக் கண்ட காப்டன் பேதியும் அவரது குழுவினரும் 'வாக் அவுட்' செய்து விட்டனர். இதற்குப் பாக்கிஸ்தான் ஆட்டக்காரர்கள் பதிலடி தந்தனர். சகிவால் கிரிக்கெட் அசோஸியேஷன் இந்தியக் குழுவுக்கும் பாகிஸ்தான் குழுவுக்கும் ஒரு வரவேற்புக் கொடுக்கவிருந்தது. அதில் கலந்து கொள்ளாமல் பாகிஸ்தான் குழுவில் வாஸிம் ராஜாவைத் தவிர அத்தனை பேருமே லாகூருக்குப் போய் விட்டனர். வாஸிம் ராஜா மட்டும் பண்போடு அந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டார்.

இதுவரை இவர் இரு செஞ்சுரி போட்டிருக்கிறார். இவர் இடதுகை பாட்ஸ்மன். ஹூக்ளி பௌலர்; நல்ல பீல்ட்ஸ்மன். தாடி வைத்துக் கொண்டிருப்பவர்.

பாகிஸ்தான் கோஷ்டியின் 'நவ' ரத்னங்களை விமர்சித்தவர்: என். எஸ். ராமசாமி



சமீபத்தில் நெய்வேலிக்குச் சென்றிருந்த போது என் உறவினர் ஒருவரின் விலாசத்தைக் கண்டு பிடிப்பதற்காக அங்குள்ள பெரிய தெரு வழியாக வந்து கொண்டிருந்தேன். வழியில் பிரிந்த கிளைத் தெருக்களின் பெயர்கள் மிகவும் வேடிக்கையாக இருந்தன. புல்லாங்குழல் தெரு, தம்பூராத் தெரு, தாழ்ப்பாள் தெரு, திருகாணித் தெரு என்று விதம் விதமாக இருந்தன.

-உஷா



பாகிஸ்தான் கிரிக்கெட் — ஒரு மதிப்பீடு

['ஹிந்து' பத்திரிகையின் முன்னாள் கிரிக்கெட் விளையாட்டு விமரிசகர்; இந்தியக் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு வெளியிடும் நூல்களின் ஆசிரியர் பி. என். சுந்தரேசனிடம் பேட்டி.]

"பாகிஸ்தானுக்கும் — இந்தியாவுக்கும் முதல் டெஸ்ட் பந்தயம் எப்பொழுது நடந்தது? அப்போதைய காப்டன்கள் யார்?"

"1952ம் வருஷம் இந்தியாவிலேயே முதல் டெஸ்ட் பந்தயம் தொடங்கியது. பாகிஸ்தானின் காப்டன் அப்துல் ஹபீஸ் கர்தார். இவர் இதற்கு முன் இந்தியாவுக்காக விளையாடிய கிரிக்கெட் ஆட்டக்காரர். 'ஸ்டைலிஷ்' பாட்ஸ்மன். பாகிஸ்தானின் லெக் ஸ்பின் பௌலர் அமீர் இலாஹியும் இந்தியாவுக்காக ஆடியுள்ள கிரிக்கெட்காரர்தான். 1946ம் வருஷம் இங்கிலாந்துக்குச் சென்ற இந்தியக் கிரிக்கெட் குழுவில் சீனியர் பட்டோடி நவாப் காப்டன் பதவி வகித்தார். பாகிஸ்தானின் முதல் காப்டன் கர்தார் இந்த இந்தியக் குழுவில் சென்றிருக்கிறார். கர்தார் இடது கை பாட்ஸ்மன், இடது கை பௌலர். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் தலைநகர் டில்லியில் முதல் டெஸ்ட் நடைபெற்றது. பாகிஸ்தான் கோஷ்டிக்கெதிராக இந்தியாவின் காப்டனாக மிளிர்ந்தவர் லாலா அமர்நாத்!"

"பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நடைபெற்ற முதல் டெஸ்ட் பற்றி மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்று சொல்ல முடியுமா?"

"காப்டன் லாலா அமர்நாத்துக்குக் காப்டன் ஆவதற்கு முன் பல பிரச்னைகள். அவரது குழுவில் ஆடுபவர்கள் அவருக்கு முழு மனத்துடன் ஒத்துழைப்புத் தருவார்களோ என்ற சந்தேகம். பாகிஸ்தானுக்கு எதிராக 'பிரஸ்டிஜ்' மாட்ச். ஆகவே லாலா அமர்நாத் டெஸ்ட்டுக்கு முன் ஹோட்டலில் தம் ஆட்டக் குழுவைக் கூட்டினார். ஹோட்டல் அறையில் பூக்கொத்து வைத்திருந்த ஜாடியில் பூக்கொத்தை எடுத்துவிட்டு நம் பாரத தேசியக் கொடியைப் பொருத்தினார். 'நாம் அனைவரும் இணைந்து நமது தேசத்தின் பெருமையைக் காக்க வேண்டிய நாள்' என்றார். அவ்வளவுதான். இந்தியா பாகிஸ்தானுக்கு இன்னிங்ஸ் தோல்வி கொடுத்து முதல் டெஸ்ட் வெற்றியைச் சம்பாதித்தது!"

"அப்படியா? அடுத்த டெஸ்ட்களின் கதி என்ன?"

"லக்னௌவில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தானுக்கு வெற்றி. இந்த டெஸ்டில் பாகிஸ்தானின் கதாநாயகன் பாஸல் முகம்மது. லக்னௌ டெஸ்ட் மாட்டிங் விக்கெட். 94 ரன்களில் இவர் இரண்டு இன்னிங்ஸில் பன்னிரண்டு இந்திய விக்கெட்டுகளைச் சுருட்டி எடுத்துவிட்டார். மூன்றாவது டெஸ்டில் இந்தியா ஜெயித்தது. நான்காவது டெஸ்ட் மழை காரணமாய் வெற்றி தோல்வி இன்றி முடிந்தது. ஐந்தாவது கல்கத்தா டெஸ்ட்டும் டிராதான்! இந்திய காப்டன் லாலா அமர்நாத்தின் காப்டன்ஷிப் 'பிரில்லியன்ட்' என்று புகழப்பட்டது."

"இந்தக் காலகட்டத்தில்தான் காப்டனைத் தேர்ந்தெடுக்க செலக்ஷன் கமிட்டி என்று தோன்றியதாமே?"

"ஆமாம். அதுவரை கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டேதான் காப்டனைத் தேர்ந்தெடுத்து வந்தது. நான்காவது இந்திய பாகிஸ்தான் டெஸ்டின்போதுதான் மேற்கிந்தியத் தீவுக்குச் செல்ல காப்டன் தேர்வு நடைபெற்றது. அப்பொழுது ஹஸாரேக்கும் லாலா அமர்நாத்துக்கும் காப்டன் பதவிக்குப் பலத்த போட்டி. கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டில் லாலா அமர்நாத் நிறையச் சிபாரிசுகளைப் பிடித்தார். ஹஸாரே ஆதர

வாளர்கள் திடீரென்று வேலை செய்து 'மேற்கிந்தியத் தீவுக்கு இந்தியக் காப்டனை ஒரு செலக்ஷன் கமிட்டி தேர்ந்தெடுக்கும்' என்று ஏற்பாடு செய்து விட்டார்கள். பாகிஸ்தான் டெஸ்ட் குழுவுக்குக் கொடுத்த விருந்தில் லாலா அமர்நாத் இந்த செலக்ஷன் கமிட்டி ஹஸாரேயைக் காப்டனாகத் தேர்ந்தெடுத்துள்ள செய்தியைத் தாமே வெளியிட்டு அனைவரையும் அயர வைத்தார். கிரிக்கெட்டுக்கு செலக்ஷன் கமிட்டி இப்பொழுது தான் உதயமாயிற்று!''

''54–55ல் இந்தியக் குழு பாகிஸ்தானுக்குச் சென்று டெஸ்ட் ஆடியதல்லவா?''

''ஆமாம். அப்போது இந்தியாவின் காப்டன் வினு மன்காட். இந்தியக் கோஷ்டியின் மானேஜர் லாலா அமர்நாத். பாகிஸ்தானுக்கு காப்டன் கர்தார். ஐந்து டெஸ்ட்களும் 'டிரா'விலேயே முடிந்தன. இந்த டெஸ்ட்களில்தான் ஹனீப் முகம்மதின் சிறப்பான ஆட்டம் உலகக் கண்ணோட்டத்தில் மிளிர்ந்தது.''

''1960–61ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த பாகிஸ்தான் டீமைப் பற்றிச் சொல்லுங்கள்!''

''பாகிஸ்தான் குழுவுக்குக் காப்டன் பாஸல் முகம்மது. இந்தியாவுக்குப் புதிய காப்டன் கண்ட்ராக்டர். காப்டன் கண்டிராக்டரிடம் adventurous spirit இல்லை. இப்பொழுது லாலா அமர்நாத் செலக்ஷன் கமிட்டி சேர்மன் ஆகிவிட்டார்! எல்லா டெஸ்ட்களுமே 'டிரா'வில்தான் முடிந்தன.''

''இந்த டெஸ்ட்களின்போது நடந்த விசித்திரச் சம்பவம் ஏதாவது உண்டா?''

''இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெற்ற இந்த டெஸ்ட் பந்தயத்தை Prestige issue ஆக இரு தரப்பினர் மட்டுமின்றி மக்களுமே எடுத்துக் கொண்டனர். நான்காவது டெஸ்ட் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்றது. திடீரென்று எலெக்டிரிக் ஷார்ட் சர்க்யூட்டாகிப் பந்தல் தீப்பற்றிக் கொண்டது. ஆனால் இருபதே நிமிஷங்களில் தீ அணைக்கப்பட்டு மறுபடியும் பந்தயம் தொடர்ந்தது. புது தில்லியில் நடைபெற்ற ஐந்தாவது டெஸ்ட்டில் நம் சென்னைப் பந்து வீச்சாளர் வி. வி. குமார் அறிமுகமானார். முதல் ஓவரிலேயே இம்டியாஸ் அகமதின் விக்கெட்டைச் சரித்தார்.''

''பதினேழு வருஷங்களுக்குப் பிறகு, 1978ல் இந்தியா பாகிஸ்தானுக்குச் சென்றதும் காப்டன் பேதி பாகிஸ்தானுக்கு வெள்ளித் தட்டில் வெற்றியை வைத்துக் கொடுத்ததும் தெரியும். பாகிஸ்தான் ஆட்டக்காரர்களைப் பற்றி உங்களது மதிப்பீடு என்ன?''

''அவர்கள் நம் இந்தியக் குழுவை விட வெகு விரைவாகத் தங்கள் ஆட்டத்தில் வளர்ந்திருக்கிறார்கள். கௌண்டி கிரிக்கெட் அனுபவம் அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். பஞ்சாப் பாஸ்ட் பௌலர்களைத் தயாரிக்கும் பூமி. பஞ்சாபில்தான் பாஸ்ட் பௌலர் நிஸார் தோன்றினார். பாஸல் முகம்மதிலிருந்து இளம் கிரிக்கெட் பரம்பரை வரை நிறைய பாஸ்ட் பௌலர்கள் உருவாகியிருக்கிறார்கள். இந்தியா சுழல் பந்து வீச்சிலேயே அதிக கவனம் செலுத்தி வருகிறது. பாகிஸ்தானில் காப்டன் பேதி தலைமையில் நமது சுழல் பந்து வீச்சாளர்கள் பரிமளிக்கவில்லை. பாகிஸ்தானின் பாஸ்ட் பௌலர்களே முன்னணியில் நின்றார்கள். இப்பொழுது நம் இந்தியக் குழுவில் பாஸ்ட் பௌலிங்கில் கபில்தேவ், காவ்ரி போன்ற இள ரத்தங்கள் போராட இருக்கின்றன. சுழல் பந்து வீச்சுக்கு இளைஞர்களான சாந்தி படேல், ஷிவ்லால் யாதவ் இருக்கிறார்கள். பாகிஸ்தான் குழுவினர் இப்போது பாஸ்ட் பௌலிங்கை மட்டும் நம்பாமல் சுழல் பந்து வீச்சாளர்களையும் தயாரித்துக் கொண்டு வருகிறார்கள். ஆக மொத்தம் பாகிஸ்தான் குழு முன்னிலும் இப்போது Better Team! இதே நேரத்தில் நமது காவஸ்கர், வெங்சர்க்கார் ஆகியோரும் தங்கள் பாட்டிங்கை விருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதுள்ள இந்தியக் குழு பாகிஸ்தானுக்குச் சென்ற இந்தியக் குழுவை விட மேலானதுதான்.''

''அது சரி. பாகிஸ்தான் இந்தியாவைப் படுதோல்வி அடையச் செய்யும் என்ற எண்ணம் பரவலாய் நிலவுகிறதே அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''


''அப்படிக் கூற இயலாது. வெல்வது யாராயினும் அது narrow victory ஆகஇருக்கும். பாகிஸ்தானின் பாஸ்ட் பௌலிங் நம் இந்தியர்லோ விக்கெட்டில் எடுபடுமா? அவர்களது பாஸ்ட் பௌலிங்கில் இங்கு விக்கெட் எடுப்பது சிரமமான காரியம். நம் இந்தியக் குழுவினரும் அடிக்கடி டெஸ்ட்கள் ஆடியதனாலே பாஸ்ட் பௌலர்களைச் சமாளிக்கிற வல்லமை பெற்றிருக்கிறார்கள்.''

''பாகிஸ்தான் காப்டன் ஆஸிப் இக்பாலைப் பற்றிச் சொல்லுங்களேன்!''

''ஹைதராபாத் ஸ்கூல் கிரிக்கெட் ஆட்டக்காரர். ஹைதராபாத்திலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்று தம் கிரிக்கெட் திறமையை நன்கு வளர்த்துக் கொண்டவர். நல்ல ஆல்ரௌண்டர். பாக் குழுக்குச் சிறந்த வரவேற்புக் கொடுத்து மகிழ்வோம்.''

பேட்டி: குண்டுமணி

''பாட்ஸ்மன் ரோலர் ஸ்கேட்டிங்கிலும் நிபுணராம்!''





✖ ஆர். சின்னப்பன், திருப்பூர்-3

கே. நடிகை வடிவுக்கரசியின் முகவரியைத் தெரிவிக்கவும்?

ப: பதினோராம் வகுப்புப் படிக்கும் தம்பி, உனக்கு அவசியம் தெரிய வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்க வடிவுக்கரசியின் விலாசத்தைக் கேட்கிறாயே. சினிமா மோகத்தால் லாபம் ஏதும் இல்லை. பொது அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டிய வயதில் சினிமாவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு இருக்காதே.

✖ பி. அருணாசலம், தேவகோட்டை

கே. எங்களைப் போன்ற புதிய எழுத்தாளர்களைக் கல்கி ஆதரிக்கவில்லையே, ஏன்?

ப: இது வழக்கமான முனகல்தான். உங்கள் கதைகளைப் போடவில்லை என்றால் ஆதரிக்கவில்லை என்று சொல்லுவதா? நீங்கள் புதிய எழுத்தாளராக இருக்கலாம் ஆனால் நல்ல எழுத்தாளரா என்று பத்திரிகை ஆசிரியர்தான் தீர்மானிக்க வேண்டும். அமரர் கல்கி நினைவு சிறுகதைப் போட்டியில் ஆண்டு தோறும் அறிமுக எழுத்தாளர்களுக்கு விசேஷப் பரிசு தந்து ஊக்குவிப்பது கல்கி அல்லவா?

✖ சி. எஸ். பாஸ்கரன், சென்னை-4

கே. ப்ளோ-அப் படத்தில் என் திருமுகம் வர என்ன செய்ய வேண்டும்?

ப: ஏதோ ஒரு அம்சத்தில் உங்கள் ஆற்றல் ப்ளோ-அப் ஆக வேண்டும்!

✖ லட்சுமி செங்குட்டுவன், வேலூர்

கே. மற்ற பத்திரிகைகளில் வரும் கேள்வி-பதில்களைப் படிக்கும்போது என்ன நினைப்பீர்கள்?

ப: ஹும். இது ஒரு கேள்வியா? இது ஒரு பதிலா? உப்பும் இல்லை சப்பும் இல்லை என்று நினைத்துக் கொள்வேன். (அவர்களும் அப்படி நினைத்துக் கொள்ள இந்தக் கேள்வி பதில் உதவும் என்று நினைக்கிறேன்!)

✖ த. சத்தியநாராயணன், அயனாவரம்

கே. சினிமா நாடகங்களுக்குத் தனியாகப் போவது பிடிக்குமா? நண்பர்களுடன் போவது பிடிக்குமா?

ப: ஓசியாகப் போவதுதான் ரொம்பப் பிடிக்கும்.

✖ ஆர். ராகவாச்சாரி, சென்னை-41

கே. ஷேக்ஸ்பியர் சிறந்த நாடகாசிரியர் என்று எழுதியதை ஆமோதிக்கிறேன். 1933ல் பி. ஏ. வில் இரண்டு ஷேக்ஸ்பியர் நாடகங்களைப்படித்துத்தேறியவன் நான். அவரது நாடகங்களில் அபாரமான பொன்மொழிகள் உள்ளன. உங்களுக்குச் சிறந்தவைகளாகத் தோன்றுபவை எவை?

ப: எத்தனையோ. Quotable Shakespeare என்று ஒரு தொகுப்பு உள்ளது. சிறந்த வாசகங்களை யெல்லாம் அதில் தொகுத்துப் போட்டிருக்கிறார்கள். லைப்ரரிகளில் இருக்கும்.

✖ வி. ஞானமுத்து, திருநெல்வேலி டவுன்

கே. உங்களுக்குச் சிலை வைக்கலாம் என்று இருக்கிறேன்?

ப: ஆஹா! ஒரு பதினைந்து பைசா தபால் கார்டில் வட்ட மேஜைக்குக் கடிதம், ஒரு துணுக்கு, நாலு கடுகு கேள்விகள் எழுதி அனுப்பியுள்ள நீங்கள் சிலை மட்டுமா வைப்பீர்கள், கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து, அன்னதானம் ஆயிரம் பேருக்குச் செய்யக் கூடியவர்!

✖ பி. கிருஷ்ணன், திருப்பூர்

கே. இன்றைய சூழ்நிலையில் ராஜாஜி உயிரோடு இருந்தால் எந்த கூட்டணியை ஆதரிப்பார்?

ப: அவர் உயிரோடிருந்தால் இம்மாதிரிக் கலப்படக் கூட்டணிகளே உருவாகி இருக்காதே.

✖ ராதா நாராயணன், கல்கத்தா

கே. சமீபத்தில் ரசித்த பாடல்?

ப: முதலில் பாடலைப் பாருங்கள். பின்னால் கூறுகிறேன், யார் எழுதியதென்று.

சம்பா அரிசியடி சாதம் சமைத்திருக்க
உண்பாய்நீ என்றுசொல்லி உழக்குச்சூ
நெய் வார்த்து
முத்துப்போல் அன்னமிட்டு முப்பழமும்
சர்க்கரையும்
தித்திக்கும் தேனமிழ்தம் என்-கண்ணம்மா
தின்று களிப்பாறேனோ.


இப்பாடல் சித்தர் பாடல்கள் தொகுதியில் உள்ளது. எழுதியவர், அழுகுணிச் சித்தர்.

✖ ராம. ஹரிஹர சுப்ரமணியம், திருநெல்வேலி டவுன்

கே. தற்போது கலப்படமே செய்யப்படாதது எது?

ப: அரசியல்வாதிகள் கூறும் பொய்கள். அவைகளில் உண்மையை அணுவளவும் கலப்படம் செய்வது கிடையாது.

ரூ. 5 பரிசு பெறுபவர்:
ஆர். ராகவாச்சாரி
55, கந்தசாமி நகர்,
பாலவாக்கம், சென்னை-41



கிரிக்கெட் பொங்கல்!
பொங்கல் வாழ்த்துக்கள்!
உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?
யார் பெயருக்கு அர்ச்சனை?
இம்ரான் கான் பெயருக்கு! அவருக்கு இடுப்பு வலி குணமாகிப் பழையபடி ஆடணுமே!
ஸ்கிரீன் தான் சரியா இருக்கே... ஏன் நகர்த்தச் சொல்லப் போறே?
ஸ்கிரீனை நகர்த்தினால் பின்னால் உட்கார்ந்திருக்கிற அழகி நம்மை முழுசா பார்க்கலாம்!
அம்பயர் சார்! நீங்க இப்படி குறுக்கே நடந்துகிட்டே இருந்தா 'பிட்ச்' ரோலர் உருட்டுன மாதிரி ஆயிடுது!



டீ டைம்!
என்ன, உன் வீட்டுக்காரர் ஈஸி 'கேச்'சை எல்லாம் கோட்டை விடறார்?
அவர் கை எப்போதுமே ஓட்டைக் கை! கையிலே எதுவுமே தங்காது!
கபில் தேவ் பௌலிங்...
காலம் ரொம்ப கெட்டுப் போச்சு!
அவர் பெரிய கிரிக்கெட் ப்ளேயர்! அதான் அவர் மாட்டுக்கு கொம்பு கூட ஸ்டம்ப்ஸ் மாதிரி...!
என்ன, இவர் எல்லா டெஸ்ட்லேயும் 'டக்' அடிச்சிட்டு வர்றார்?
அவருக்கும் விக்கெட்டுக்கும் இடையில் 'நெட்' கட்டிறு நிச்சயம் செஞ்சுரி அடிப்பார்!

அம்பயர் சர்ச்சை!









× ரங்காச்சாரி × ராமசாமி × ரிஷி

[பம்பாய் டெஸ்ட்டுக்குப் பிறகு காப்டன் அஜீப் இக்பால் காரசாரமாக அம்பயரிங்கைச் சாடினார். இன்றைய அம்பயரிங் சர்ச்சைக்குள்ளாகி இருப்பதைப் பற்றி இரு அம்பயர்களிடமும் முன்னாள் டெஸ்ட் ஆட்டக்காரர் ஒருவரிடமும் வினவியபோது:]

அம்பயர் கே. பி. ராமசாமி

''சமீப கால கிரிக்கெட் ஆட்டத்தில் ஏற்பட்டுள்ள மாறுதலை முதலில் தெரிவித்தால் அம்பயரிங்கில் உருவாகியுள்ள சிரமத்தைப் புரிந்து கொள்வீர்கள். அந்தக் காலத்தில் விரைவுப் பந்து வீச்சு இருந்ததால் Close in fielding செய்வது ரொம்பக் குறைச்சல். இன்று இந்திய ஸ்பின்னர்கள் பந்து வீசத் தொடங்கிய பிறகு Close in fielding ல் அதிக பீல்ட்ஸ்மன்களை நிறுத்தத் தொடங்கி விட்டனர். விக்கெட் கீப்பருக்கும் மற்ற பீல்ட்ஸ்மன்களுக்கும் பாட்ஸ்மனுக்கும் இடையில் உள்ள இடைவெளி 6 அடி கூட இல்லை. இதனால் அம்பயரிங் சிரமமாகிறது. எங்கள் டென்ஷன் அதிகரிக்கிறது. மட்டையில் பட்ட சத்தத்தை வைத்துக் கொண்டும், 'பாடி'ல் பட்ட சத்தத்தைக் கொண்டும் விக்கட் கீப்பரும் மற்ற பீல்ட்ஸ்மன்களும் காட்ச் பிடித்ததைக் கொண்டும், 'அவுட்டா, நாட் அவுட்டா?' நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இப்போதெல்லாம் பீல்ட்ஸ்மன் விக்கெட் எடுக்க வேண்டும் என்ற ஆவலில் 'ஹௌ இஸ் தெட்?' அதிகமாகக் கேட்டுக் குழப்பு கிறார்கள். பாட்ஸ்மன்கள் அணியும் 'பேட்' கடினமானதாக இருப்பதால் மட்டையில் பட்ட சத்தம் போலவே இதிலும் கேட்கிறது. பந்து பவுன்ஸும் ஆகிவிடுவதால் மட்டையில் பட்டதுபோன்று தோன்றுகிறது. அம்பயருக்குப் பந்து மட்டையில் பட்டதா, 'பாடி'ல் பட்டதா என்று கணத்தில் நிர்ணயிக்க வேண்டிய நிர்ப்பந்தம்! அம்பயர்களாகிய நாங்கள் பணியைத் தவறில்லாமல் செய்து விட வேண்டும் என்றே விரும்புகிறோம்.''

அம்பயர் என். எஸ். ரிஷி


''இன்று கிரிக்கெட் புரொபஷனல் ஆட்டமாகிவிட்டது. ஆகவே இயற்கையாகவே ஒவ்வொரு ஆட்டக்காரரும் அம்பயரின் முடிவைக் கேள்விக் கணைகளால் துளைக்க முற்படுவது சகஜம். இதன் மூலம் ரொம்ப நேரம் மைதானத்தில் நிலைத்து நிற்க அவர்களுக்கு ஆசை. இதனால் அம்பயர்களுக்கு ''டென்ஷன்'' அதிகரிக்கிறது. ஏன், சரியான முடிவுகூடச் சில சமயத்தில் கேள்விக் கணைகளுக்குப் பலியாகின்றன. அதோடு பீல்ட்ஸ்மன்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்கள் அம்பயர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி விடுகின்றன. இதற்கு ஏற்றாற்போல் ரசிகர்களும் கோஷம் எழுப்பினால் அம்பயர் பாடு கஷ்டம்தானே? இந்தப் படபடப்புக்கு இடையில் சில சமயம் அவர்கள் தவறு இழைத்து விடுவதில் அதிசயமில்லை.

''1960ம் வருஷத் தொடக்க காலம்வரை அம்பயரின் முடிவுகள் கேள்விக்கணைகளுக்கு உட்படாதிருந்தன. ஆட்டக்காரர்கள் அம்பயர்களின் முடிவை 'ஸ்போர்ட்டிங்'காக ஏற்றுக் கொண்டனர். ஆனால் இன்று ஆட்டக்காரர்கள் யாரைப் பார்த்தாலும் அம்பயரிங்கைக் குறை கூறுகின்றனர்.''

வி. ஆர். ரங்காச்சாரி

''அம்பயர் முடிவு எடுப்பதற்கு முன்பே பாட்ஸ்மன் தாம் 'அவுட்' என்று தெரிந்தவுடனே பெருந்தன்மையுடன் மைதானத்தை விட்டு விலகிச் சென்ற காலமுண்டு. இந்த ஸ்போர்ட்ஸ்மன்ஷிப் எல்லோராலும் கொண்டாடப்பட்டது. அம்பயர் அவுட் கொடுத்தால் உடனே பாட்ஸ்மன் அந்த முடிவை ஏற்று மைதானத்தை விட்டு அமைதியாக விலகிச் செல்வார். இப்போ ஆட்டக்காரர்கள் 'அவுட்' பற்றி ஒரு 'ஷோ' நிகழ்த்திவிடுகிறார்கள். அந்தக் காலத்தில் பௌலர்கள் ரொம்ப சந்தேகம் இருந்தால்தான் அம்பயரிடம் 'ஹௌ இஸ் தெட்' கேட்பது வழக்கம். அம்பயர் 'அவுட்' கொடுக்கவில்லையானால் ஹௌ இஸ் தட் கேட்பவர்கள், 'ஸாரி' சொல்வார்கள். இன்று...?''

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran



It's a widening scene at Shriram Fibres

One good thing leads to another for Shriram Fibres, leading manufacturers of Industrial Nylons.


The first product was nylon tyre cord for automotive tyres.


Then came nylon fishnet twine—proven 20% stronger than any other comparable brand.

And now, a breakthrough - Nylon Chips.
Shriram Fibres are the first to make Nylon Chips/ Moulding Powder in India—with quality that matches the world's best.

Shriram Fibres always look ahead...keep ahead.







Shriram Fibres Ltd.

Thiru Building.
160, Greames Road. Madras-600 006

OBM 3768 R

REGISTERED No. M. [illegible]
Registered as a Newspaper in Sri Lanka

கல்கி

KALKI 13-1-80 90 காசு

